
# பட்டிமண்டபம்



கலைமணி

தொ.மு.பாஸ்கரதொண்டைமான்

# பட்டி மண்டபம்

(தீர்ப்புப் பேருரைகள்)

*கலைமணி*

தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்

புதிய இலக்கு புதிய தடம்

நிவேதிதா பதிப்பகம்

இலக்கம். 1, 3-வது மாடி, புதூர் 13-வது சாலை,

அசோக் நகர், சென்னை - 600 083.

போன்: 5568 8527

# PATTI MANDAPAM

by
**T.M. BHASKARA THONDAIMAN**

**Rs. 40-00**

Second Edition - 2005

Published by
**NIVETHITHA PATHIPPAGAM**
# 1, 3rd Floor, Pudhur 13th Street,
Ashok Nagar, Chennai - 600 083.
Ph: 55688527, 55618390

Laser by
STAR GRAPHICS
Chennai - 17.

Printed at
S.K.B. PRINTERS
Chennai - 600 015.

# அணிந்துரை

'பட்டிமண்டபம்' என்ற சொல் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம் கம்பராமாயணம் ஆகிய நூல்களில் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் "மகத நல் நாட்டு, வாள்வாய், வேந்தன் பகை புறத்துக் கொடுத்த பட்டி மண்டபம்" (5-102) என்பதனால் பட்டிமண்டபம் என்பதைப் பெயர் அளவில் தெரிந்து கொள்ளுகிறோம்.

மணிமேகலையில் "பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்" (1-16) என்றமையால் பட்டி மண்டபத்துக்கு என்று ஏதோ ஒரு முறை அல்லது விதி இருந்திருக்கிறது என்பதை நாம் உணருகிறோம்.

திருவாசகத்தில், "பட்டி மண்டபம் ஏற்றினை, ஏற்றினை; எட்டினோடு இரண்டும் அறியேனையே" (சதகம்-41) என்றதனால் பட்டிமண்டபத்தைச் சேர் வதற்குப் பெருந்தகுதி வேண்டும் என்பது புலனாகிறது.

கம்பராமாயணத்தில், "பன்ன அரும் கலைதெரி பட்டி மண்டபம்" என்பதனால் திரும்பத் திரும்பச் சொல்வ தனாலே உணர்த்த முடியாத கலைகளை ஆராயும் இடமே பட்டி மண்டபம் என்று ஒருவாறாகத் தெரிந்து கொள்ளுகிறோம்.

முற்காலத்தில் பட்டிமண்டபத்தின் பணியும், பயனும், விதியும் எத்தன்மையினவாய் இருந்தன என்பது நாம்

கண்டறியுமாறில்லை இன்று, எனினும் மேலும் கண்டவற்றால், ஒருவகையான ஆராய்ச்சி மேடையாகவே பட்டிமண்டபம் விளங்கிற்று என்று கொள்வது பொருத்தமே. அது இன்று ஒரு விவாத அரங்காகவே மிளிர்கிறது.

முதன் முதலாக இது காரைக்குடிக் கம்பன் திருநாளில் தொடங்கப்பட்டது. இருபத்தைந்து ஆண்டுகட்கும் மேலாகக் கம்பன் திருநாளின் ஓர் அங்கமாகப் பட்டிமண்டபம் விளங்கி வருகிறது. இது பின்னர் தமிழகமெங்கும் பரவி வளம் சுரந்து கொண்டிருக்கிறது. இன்று பல இலக்கிய சமய - விழாக்களில் எல்லாம் பட்டிமண்டபம் ஓர் இன்றியமையாத உறுப்பு எனக் கருதப்பட்டு வருகிறது என்பதைச் சொல்லவா வேண்டும்?

உரையரங்கு, கருத்தரங்கு, கவியரங்கு ஆகியவற்றுக்கு வருகின்றவர்களினும் அதிகமானவர்கள் பட்டிமண்டபத்திற்கே வந்து கூடுகிறார்கள். அப்படி வந்து அவைகளை நிறைத்துக் கொண்டிருப்பவர்கள் காட்டும் ஆர்வத்தையும், பரபரப்பையும் நோக்கினால், இந்நிகழ்ச்சி கேள்விச் செல்வர்களை எவ்வளவு கவர்ந்திருக்கிறது என்பதை யாவரும் உணர்ந்து கொள்ளலாம்.

எவ்வளவுதான் ஈடுபாடும், ஆர்வமும் கொண்டு மக்கள் திரண்டு வந்தாலும், பயன் அளவு கருதி ஆறுதலும், மகிழ்வும் கொண்டாலும், எதற்கும் ஒரு ஒழுங்கும் கால வரம்பும் வேண்டுமல்லவா? ஆகவே, இன்றைய பட்டிமண்டபம் தனக்கென சில வரையறைகளைக் கொண்டே பயன் கொழித்து வருகிறது.

பட்டி மண்டபத்தில் விவாதத்திற்காக ஒரு பொருளை நிர்ணயித்தல் முதல் பணி. வாதிடுவோர் இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு கட்சியாகப் பொருளுக்கேற்ப அமையச் செய்தல் அடுத்த பணி. ஒவ்வொரு கட்சியிலும் கட்சி எண்ணிக்கைக்கு ஏற்ப முறையே ஐந்து அல்லது நான்கு அல்லது மூன்று பெயர்கள் அமையச் செய்தல் அடுத்தபணி. ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வு இல்லாத வண்ணம் வாதத்திறமையுள்ளவர்களைக் கொண்டதாக ஒவ்வொரு கட்சியும் அமையச் செய்வது இன்றியமையாத பணி. அப்படி அமையும் கட்சி ஒவ்வொன்றுக்கும் ஒருவர் முதல்வராக அதாவது, கட்சித் தலைவராக விளங்க வேண்டும். இவற்றை எல்லாம் செம்மையாக அமைத்துக் கொண்ட பின்னர் எல்லா வகையிலும் பொருத்தமான ஒருவரைப் பட்டிமண்டபத் தலைவராக அமைக்க வேண்டும்.

பட்டி மண்டபம் தொடங்கியதும், பட்டி மண்டபத் தலைவர் பட்டி மண்டபத்தின் பொருளையும் அப் பொருளின் உட்கருத்தையும் விளக்கி, வாத முறையை யும், காலவரம்பையும் புலப்படுத்தத் தமது முன் னுரையை நிகழ்த்த வேண்டும். தலைவர் கருத்து என்ன என்பதை ஊகிக்கக் கூட முடியாதவாறும், எக்கட்சிக்கும் ஆதரவுக் குறிப்புக்கள் தம் உரையிலிருந்து கிடைத்து விடாதவாறும், நடுநிலை பிறழாமல், இருக்க வேண்டும் தலைவர் முன்னுரை.

பின்னர் நிகழ்ச்சி நிரலில் கண்ட வரிசைப்படி ஒவ்வொரு கட்சியின் முதல்வர்களும் தங்கள் தங்கள் கட்சியை எடுத்துக் கூறுவார்கள். பின்னர் அங்ஙனமே வரிசையாக ஒவ்வொரு கட்சியைச் சார்ந்த துணை

வர்களும் தங்கள் கட்சியை ஒட்டியும் எதிர்க் கட்சிகளை வெட்டியும் வாதிடுவார்கள். எல்லாம் பேசி முடிந்ததும் முதற் சுற்று முடியும்.

அடுத்து மறு சுற்றுத் தொடங்கும். ஒவ்வொரு கட்சி முதல்வரும் வரிசைப்படி வந்து தொகுப்புரை நிகழ்த்துவர். அதில் தாங்கள் இதுவரைக் கூறிய வாதக் குறிப்புகளைத் திரட்டிக் காட்டித் தங்கள் தங்கள் கட்சியின் வன்மையையும், அவற்றில் எவற்றை எல்லாம் எதிர்கட்சிகள் மறுத்தடிக்க முடியவில்லை என்பதையும் தலைவருக்கு எடுத்துக் கூற வேண்டும்.

பின்னர் மூன்று அல்லது நான்கு கட்சிகள் இருப்பின் ஒன்றை அல்லது இரண்டை தலைவர் முதலில் நீக்க வேண்டும். பின்னர் எஞ்சிய இரு கட்சியினரையும் கட்சிக்கு ஒருவராக வாதிடச் செய்ய வேண்டும். இரண்டு கட்சியாக உள்ளவர்களில், ஏற்கெனவே அமைந்த வரிசைப்படியே நேரடி வாதம் தொடங்க வேண்டும். இருவரும் வாதிட்டு முடிந்ததும் இருவரில் முன்னதாக வாதிட்டவர் பின்னவர் கூற்றுக்கு அல்லது குற்றச் சாட்டிற்கு விடையறுக்கும் முறையில் இறுதி உரை நிகழ்த்துவார். ஆனால் இறுதி உரையில் புதுக் கருத்துக்களோ, புதுக்குற்றச் சாட்டுக்களோ கூறக் கூடாது. சட்டப்படி, கூறினால் அது கணக்கில் எடுத்துக் கொள்ளப் படலாகாது. அன்றி அதை மறுக்கவும் சம்பந்தப்பட்ட கட்சிக்குத் தலைவர் இடந்தருவார்.

இறுதியில் தீர்ப்பு வழங்கப்பெறும். தீர்ப்பு வழங்குவதில் இருமுறை இன்று வழக்கில் இருந்து வருகின்றன. ஒன்று தலைவரே தீர்ப்பு வழங்குவது. சுமார் முப்பது முதல் ஐம்பது வரை நோக்கர்கள் நியமிக்கப்பட்டு

அவர்கள் தங்கள் முடிவைத் தெரிவிப்பது மற்றொரு முறையாகும். இம்முறையில் நோக்கர்கள் தீர்ப்பறியக் கையைத் தூக்கச் சொல்லலாம்; அல்லது சீட்டெழுதிப் போடச் செய்யலாம். பெரும்பான்மையோர் கருத்தே முடிவாக, அதாவது தீர்ப்பாக அமையும்.

முதல் முறையில், அதாவது தலைவர் தீர்ப்புக் கூறுவதிலும் இரு நெறிகள் கையாளப்படுகின்றன. பேசியவர்கள் எடுத்துக்காட்டிய சான்றுகளின் தன்மை, எண்ணிக்கையளவு ஆகியவற்றின் அடிப்படையில் கவனித்து வாதிட்டவர்களின் திறமைக்குப் பரிசு எனக் கருதும்படி தீர்ப்பளித்தல் ஒரு நெறி.

மற்றொரு நெறியோ, வாதித்தவர்கள் சொல்லவிட்ட வற்றையும், மறுக்காதனவற்றையும் தலைவரே எடுத்துக் காட்டி வாதிட்டவர்களின் திறமைக்குப் பரிசாக இல்லா மல், இயல்பாகவே கிடைக்கும் முடிவைத் தீர்ப்பாக வழங்குவதாகும். சகோதரர், அமரர், பாஸ்கரத் தொண்டைமான் இந்த நெறியைக் கடைப்பிடிப்ப வராவார்.

சகோதரர் தொண்டைமான் பட்டிமண்டபத்தில் எல்லையில்லாத ஈடுபாடுள்ளவர். கம்பன் விழாவுக்கு ஏற்பாடு செய்வதிலும் பட்டி மண்டபத்திற்கு ஏற்பாடு செய்வதில் அதிக அக்கறை காட்டினார் என்பதைப் பலரும் அறிவர். பல பட்டி மண்டபங்களில் பங்கு கொண்டு வாதிட்டுள்ளார். பல பட்டி மண்டபங்களில் தலைமை தாங்கியும் பொலிவூட்டியிருக்கிறார். அங்ஙனம் தாம் தலைமை தாங்கி வழங்கிய தீர்ப்புகளில் சிலவற்றை எழுதியும் வைத்துள்ளார். அவை தாம் இப்பொழுது நூல்வடிவெடுத்திருக்கின்றன.

இவ்வளவு அக்கறையோடு அவர் எழுதி வைத்து விட்டுச் சென்ற தீர்ப்புகளைக் காண, கண்டு துய்த்து மகிழ, எவ்வளவோ ஆர்வத்துடன் உள்ள உங்களை மேலும் காக்க வைக்காமல்.

''வாழ்க பாஸ்கரன் பணி!''

என்று வாழ்த்தி, வழிவிட்டு ஒதுங்கிக் கொள்ளுகிறேன்.

**சா. கணேசன்**

கம்பன் கழகம்,
காரைக்குடி.

# பட்டி மண்டபம் –சில சிரஞ்சீவி நினைவுகள்

– டி.கே.சி. நடராஜன்

'*பன்னரும் கலை தெரி பட்டி மண்டபம்*'- என்பது கவிச்சக்கரவர்த்தி கம்பன் வாக்கு. ''பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை; எட்டினோடு இரண்டும் அறியேனையே'' - என்பது மாணிக்கவாசகர் திருவாக்கு. இவர்கள் காலத்தில் அத்தனை பிரசித்தமாயிருந்து மறைந்த பட்டிமண்டபத்திற்குப் புத்துயிர் கொடுத்தவர்கள் காரைக்குடி, கம்பன் கழகச் செயலாளர் திரு.சா.கணேசன் அவர்கள். ஆனால் அதைப் பல விழாக்களிலும் ஏற்பாடு செய்து பிரபலப்படுத்திய தோடல்லாமல் ஒரு 'மவுஸையே' உண்டாக்கியவர்கள் மாமா, தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள்தான்.

பட்டி மண்டபம் என்பதுதான் இலக்கிய வழக்கு. ஆனால் இன்று நடைமுறையில் காரைக்குடிக் கம்பன் கழகத்தைத் தவிர மற்ற இடங்களில் பட்டி மன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள். பேச்சு வழக்கையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதானே.

நல்ல பல பட்டிமண்டபப் பொருட்களைத் தேர்ந்தெடுத்து, இலக்கிய அன்பர்களை எல்லாம் ஒரே

மேடையில் ஏற்றி, கட்சி பிரித்து விவாதிக்கச் செய்து இலக்கியத்தின் நயங்களை எல்லாம் வெளிப்படுத்தி எல்லோரையும் அனுபவிக்கச் செய்வதில் அவர்களுக்கு ஒரு தனி ஆர்வம். விழாக்கள் என்றால் கட்டாயம் பட்டி மண்டபம் இருக்க வேண்டும், அதற்குள்ள சுவையே வேறுதான் - என்றும் சொல்வார்கள். கோவையில் அன்பர் பாபுராஜு ஏற்பாடு செய்யும் பட்டிமண்டபங்களுக்குரிய பொருள் - விவாதத்துக்குரிய பொருள்தான் - தருவதும் மாமாவின் வேலைதான். பொருள் தருவதோடு மட்டும் அமையாது, அந்தப் பட்டிமண்டபங்களுக்குத் தலைமை தாங்கி, வாதப் பிரதிவாதங்களைப் பொறுமையுடனும், ஆர்வத்துடனும் கேட்டு, நல்ல சுவையான தீர்ப்புகள் வழங்குவதிலும் வல்லவர்கள் அவர்கள். அவர்களுடைய தீர்ப்புகள் அவர்களுக்கே உரிய பாணியில் இருக்கும். கடைசி நிமிஷம் வரை யாருக்கு வெற்றி என்று இலகுவாகச் சொல்லிவிட முடியாதபடி அவ்வளவு சமத்காரமாக இருக்கும். எதிர்பாராதபோது, எதிர் பார்த்த தீர்ப்பைச் சொல்லி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி விடுவார்கள். சில சமயங்களில் எதிர்பாராத தீர்ப்பைச் சொல்லி சபையோரை வியப்பில் ஆழ்த்துவதும் உண்டு. காரைக்குடியில் சமீபகாலமாக நடந்துவரும் ஜனநாயகத் தீர்ப்பு - நோக்கர்கள் மூலம் கூறப்படும் தீர்ப்பு - அவர்களுக்கு உடன்பாடில்லாத ஒன்று. அந்த முறை பட்டிமண்டபத் தீர்ப்பின் வேகத்தையும் விறு விறுப்பையுமே குறைத்துக் கெடுத்து விடுகிறது என்பது அவர்களது எண்ணம்.

கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக நானும் பட்டி மண்டப விவாதங்களில் பங்கெடுத்துக்கொண்டு வருகிறேன். என் துணைவியும் பங்கெடுத்துக் கொள்கிறாள். அவள் எனக்கு

வீட்டிலே மட்டுமல்ல, வெளியிலும் எதிர்க்கட்சிதான்! சபையோரும் எங்கள் இருவரையும் மேடையில் பட்டி மண்டப தம்பதிகளாகவே - எதிரெதிர் கட்சிகளில் நிறுத்தி வைத்து மோதவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். சபையோர் இருக்கட்டும், எந்தத் தந்தையும் தம் மகளும் மருமகனும் சண்டை போட்டுக் கொள்வதை விரும்ப மாட்டார். மாமா அதற்கு விதிவிலக்கு. மகள் ராஜேஸ்வரியும், நானும் போட்டுக் கொள்ளும் சண்டையை எல்லாம் விரும்புவதோடு மட்டுமல்லாமல், ரசிக்கவுமே செய்வார்கள்! சண்டை என்றால் பட்டி மண்டப அரங்குகளிலே போடுகின்ற சண்டைதான்! (வீட்டிலே நாங்கள் போடுகின்ற சண்டையை எல்லாம் அவர்கள் காது கேட்கப் போட்டதில்லை!) மகள் துடுக்குத் தனம் தெரிந்த காரணத்தினால், எந்த நேரத்தில் என் காலை வாரிவிடுவாளோ என்று பயந்து, ''ராஜேஸ்வரியை மாப்பிள்ளைக்கு முன்னால் போட்டு விடுங்கள்'' - என்று நண்பர் பாபுராஜுவுக்கு எச்சரிக்கை விடுத்ததும் உண்டு. அவளும் நானும் எதிரெதிர் கட்சிகளில் அமர்ந்து மாமா நடுவராகவும் இருந்துவிட்டால் சபையோர் கலகலப்புக்குக் கேட்கவே வேண்டாம். இப்படி மகளும் மாப்பிள்ளையும் எதிரும் புதிருமாக வாதிடுவதைப் பார்த்து முகமெல்லாம் மலர மாமா அவர்கள் ரசிப்பதைப் பார்த்துப் பார்த்து பரவசம் அடைந்தவர் நண்பர் பாபுராஜு அவர்கள்.

மாமா அவர்கள் தலைமையில் வாதிடும் பாக்கியம் எங்களுக்குக் கடைசியாகக் கிடைத்தது பேச்சிப் பாறை பட்டி மண்டபத்தின் போதுதான். அவர்கள் ஏறக்குறைய இருபத்து நான்கு பட்டிமண்டபங்களுக்குத் தலைமை வகித்து தீர்ப்புக்கூறி விட்டார்கள். தமது மணிவிழா

வைபவத்திற்கு முன்னரேயே இருபத்தைந்தாவது பட்டிமண்டபத் தலைமைக்கு பல இடங்களிலிருந்து அழைப்பு வந்தும், அங்கு செல்ல முடியாது ஏதாவது தடங்கல் ஏற்பட்டுக் கொண்டே வந்தது. உடல் நிலையும் இடம் கொடுக்கவில்லை. இருபத்தி ஐந்தாவது பட்டிமண்டபம் இப்படித் தட்டித் தட்டிப் போகிறதே என்பதில் அவர்களுக்கு மிகுந்த குறை. அந்தக் குறையும் பேச்சிப் பாறை பட்டி மண்டபத்துக்குத் தலைமை தாங்கியபோது நீங்கியது. அதுவே மாமா அவர்களின் வெள்ளி விழாப் பட்டி மண்டபம்!

அப்போது நான் கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அரசாங்க அலுவலர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நண்பர் திரு. T.S. ராமலிங்கம் (அப்போது அங்கு மாவட்ட நீதிபதியாக இருந்தவர்.) தலைமையின் கீழ் ஓர் இலக்கிய வட்டத்தை நடத்தி வந்தோம். மாதம் இரு முறை இலக்கியக் கூட்டங்கள் நடைபெறும். திருநெல்வேலி, அருகாமையிலேயே இருந்ததால் மாமாவும் அவ்வப்போது வந்து கலந்து கொண்டு எங்களுக்கு ஊக்கம் தருவார்கள். கூட்டங்களை வெவ்வேறு இடங்களில் நடத்துவதுமுண்டு. அப்படித்தான் 14-3-65 அன்று நாகர்கோவிலை அடுத்துள்ள பேச்சிப்பாறை அணைக்கட்டை ஒட்டியுள்ள இடத்திலே, ஒரு பட்டி மண்டபத்துக்கு ஏற்பாடு செய்தோம். மாமாவின் தலைமையிலே, தாயன்பில் தலை நின்றவர் கோசலையா, கைகேயியா, சுமித்திரையா?' - என்பதுதான் விவாதத்துக்குரிய பொருள். அரசாங்க அலுவலர்கள் மட்டுமின்றி, அவர் தம் துணைவியரும் பங்கு கொண்டு, அமோகமாக நடந்தது விழா. காலையில் ஆரம்பித்த விவாதங்கள், மத்தியான விருந்துக்குப் பின்னும்

தொடர்ந்து மாலையிலும் நடந்தன. பிறவி ஊமை ஒருவனுக்கு அந்த இடத்துக்கு வந்தபோது பேசும் சக்தி வந்ததால்தான் அதற்குப் 'பேச்சுப்பாறை' என்று பெயர் வந்ததாகவும், பின்னர் அதுவே 'பேச்சிப்பாறை'யாகத் திரிந்து விட்டதாகவும் ஒரு கதை உண்டு. அது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. ஆனால் அன்றைய விவாதத்தில், என்றுமே மேடையேறி அறியாத பலரும் பங்கு கொண்டு வெகு அருமையாகப் பேசினார்கள். உடல் நலக் குறைவால் பலவீனமாக இருந்தபோதிலும், மாமா அவர்கள் மிகுந்த உற்சாகத்துடனும் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்தார்கள். வழக்கம்போலவே அன்றும் அவர்கள் தீர்ப்பு ரஸமாக அமைந்து எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அவர்கள் நடுவராக இருந்த எந்தப் பட்டி மண்டபத்திலும் நான் வாதாடிய கட்சி வெற்றி பெற்றதில்லை! ஆனால், அன்று நான் வாதாடிய கோசலையின் கட்சியே வெற்றி பெற்றது. அதுவே அவர்கள் தலைமையில் நாங்கள் கலந்து கொள்ளும் கடைசிப் பட்டி மண்டபம் என்பது அப்போது தெரியாமல் போய் விட்டது!

இந்த விழா நடந்தது 14-3-65 ஞாயிற்றுக் கிழமையன்று. மறுநாளே மாமா திருநெல்வேலி திரும்பி விட்டார்கள். 20-3-65 சனிக்கிழமையன்று - சரியாக ஒரு வாரம் கூட ஆகவில்லை - மிதமிஞ்சிய ரத்த அழுத்தத்தால், சுய நினைவு இழந்த நிலையில் பாளையங்கோட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள், நினைவு திரும்ப ஒன்றிரண்டு தினங்களாகி விட்டன. டாக்டர் களுடன் சேர்ந்து குடும்பத்தினர் அனைவருமே எமனுடன் போராடிக் கொண்டிருந்தோம். நினைவு சற்று தடுமாறும் போதெல்லாம், ''மணி ஆறாகி விட்டது. கூட்டத்துக்கு

நேரமாகி விட்டது. எல்லோரும் காத்துக் கொண்டிருப்பார்கள்'' - என்றே அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்கள். நினைவெல்லாம் கூட்டம், பேச்சு, சபையோர் - இப்படியே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. மக்களைப் பற்றியோ, மனைவியைப் பற்றியோ, சொத்து சுகத்தைப் பற்றியோ அவர்களுக்குச் சிந்தனையே இல்லை. ஒரு நாள் இரவு அவர்களது உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாகி விட்டது. நினைவு தப்பிய நிலையில், நல்ல பட்டிமண்டபத் தீர்ப்பொன்றையே வழங்கி விட்டார்கள். 'படுக்கையிலிருந்தபடியே காவிய நாயகனான ராமனுடைய பண்புகளில் கவிச்சக்கரவர்த்தி கம்பனைக் கவர்ந்தது அவனது அறிவா, ஆற்றலா, அழகா என்பதைப் பற்றிய தீர்ப்பு. பேச்சில் ஒரு குழறலோ, தெளிவின்மையோ இருக்க வேண்டுமே... ம்... ஒன்று கூடக் கிடையாது! இரண்டொரு பாடல்களையுமே மேற்கோள் காட்டினார்கள். மிகத் தெளிவாக, அழுத்தமாக, அனுபவித்து வார்த்தைகளைச் சொன்னார்கள். பலமுறை சொல்லிச் சொல்லித் தழும்பேறிய நாவல்லவா?

செந்தாமரைக் கண்ணொடும்
    செங்கனி வாயினொடும்
சந்தார் தடந்தோளொடும்
    தாழ் தடக்கைகளோடும்
அம்தார் அகலத்தோடும்
    அஞ்சனக் குன்றம் என்ன
வந்தான் இவன் ஆகும்
    அவ்வல்லில் இராமன்

என்ற பாடலை, அடிபிறழாமல் சொல்லி ராமனுடைய அறிவைக் காட்டிலும் ஆற்றலைக் காட்டிலும், அழகே கவிச்சக்கரவர்த்தியை வெகுவாகக் கவர்ந்தது - என்று கூறி

முடித்தார்கள். சுற்றியிருந்த அனைவரும். கண்ணீருக் கிடையே, பதறும் நெஞ்சங்களுடன் அமைதியான அந்தப் பேருரையைக் கேட்டோம். பட்டி மண்டப அனுபவம் உள்ள காரணத்தால், என்னையும் ராஜேஸ்வரியையும் அந்தப் பேச்சு உருக்கியதோடு மட்டுமல்லாமல் வியப்பிலும் ஆழ்த்தி விட்டது. அதுவே அவர்களது கடைசிப் பட்டிமண்டப உரை. இது நடந்து நாலைந்து தினங்களுக்குள்ளாகவே இறைவன் அவர்களைத் தன் திருவடியில் சேர்த்துக் கொண்டான்.

பேச்சிப்பாறையில் அவர்கள் கடைசியாக நிகழ்த்திய பட்டி மண்டபத் தீர்ப்பும், மருத்துவமனையில் நினைவிழந்த நிலையிலே அவர்கள் நிகழ்த்திய உரையும் இன்றும் என் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டே இருக் கின்றன. அவற்றுக்கு அழிவில்லை. சிரஞ்சீவி நினைவுகள் அவை.

# பட்டி மண்டபம்

# பொருளடக்கம்

1. இலக்கியத்திற்கு ஆக்கம் தருவது
காதலா?
வீரமா? 19

2. தம்பியரிற் சிறந்தவன் யார்?
இராமன் தம்பி பரதனா?
வாலி தம்பி சுக்ரீவனா?
இராவணன் தம்பி விபீஷணனா? 29

3. உடன் பிறவாத் தம்பியரில் உயர்ந்த தம்பி யார்?
குகனா?
சுக்ரீவனா?
விபீஷணனா? 39

4. இராம சேவையில் தலை நின்றவர் யார்?
இலக்குவனா?
அனுமனா?
விபீஷணனா? 53

5. தாயன்பில் தலை நின்றவர் யார்?
கோசலையா?
கைகேயியா?
சுமத்திரையா? 65

6. கம்பனில் மேலோங்கி நிற்கும் பண்பு
புத்திர வாஞ்சையா?
சகோதர பாசமா?
பதி பக்தியா? 76

7. இராமகதையின் திருப்பு முனைக்கு உதவும் கொடிய பாத்திரங்களில் தலையானவர் யார்?
கூனியா?
கைகேயியா?
சூர்ப்பனகையா? 88

8. கம்பன் கண்ட இராமனில் சிறப்பாயிருப்பது
அவனது அழகா?
அறிவா?
ஆற்றலா? 97

9. காமம் கடிந்த காதல் வாழ்வில் தலைநின்றவர்
ஆண்டாளா?
மாணிக்கவாசகரா? 107

10. அழுது அருள் பெற்றவர் மாணிக்கவாசகர் -
அணைந்து அருள் பெற்றவள் ஆண்டாள் -
இவற்றில் எவரது முயற்சி சிறந்தது? 116

11. செயற்கரிய தொண்டு புரிந்த திருத்தொண்டர்களிலே
சிறந்த செயல் புரிந்தவர் யார்?
சிறுத்தொண்டரா?
திருநீலகண்டரா?
கண்ணப்பரா? 125

12. பக்தி கனிவிற்குப் பாலமாய் அமைவது
தொழுகையா?
அழுகையா? 136

13. இறைவன் திருவடி அடைய எளிய நெறி
பக்தியா?
ஞானமா?
கர்மமா? 145

# 1

# இலக்கியத்திற்கு ஆக்கம் தருவது காதலா? வீரமா?

அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் பெரு மன்றத்தில் ஒரு சொல்லரங்கம். அந்தச் சொல்லரங்கத்தில் எழுத்தாளர் பெருமக்கள் விவாதிக்க எடுத்துக்கொண்ட பொருள் இலக்கியத்திற்கு ஆக்கம் தருவது காதலா? வீரமா? என்பது. இதனால், இலக்கியங்களில் எல்லாம் இந்த இரண்டு ரஸங்களே உண்டு என்று முடிவுகட்டி விடக் கூடாதுதான். சாதாரணமாக நமது உணவு வகையிலே அறுசுவை 'ஷட்ரஸம்' உண்டே. இலக்கியத்தில், அதுவும் மகா காவியங்களில் ஒன்பது ரஸங்கள் உண்டென்றும், வடமொழி இலக்கிய கர்த்தர்களும் தமிழ் இலக்கிய கர்த்தர்களும் கூறுகின்றனர். பார்க்கப்போனால் ஒன்பது ரஸந்தானா? ஒன்பதினாயிரம் ரஸம் என்றல்லவா தோன்றுகிறது! அப்படி இருக்க, இரண்டே இரண்டு சுவைகளை மட்டும் எடுப்பானேன்? எத்தனை ரஸங்கள் இருந்தாலும் அவற்றில் தலையாய ரஸ்ங்கள் இரண்டே. அவைதாம் காதலும், வீரமும். அதிலும் தமிழில் இந்த இரண்டு ரஸங்களையும் அடிப்படையாகக்கொண்டுதான்

இலக்கியங்கள் வளர்ந்திருக்கின்றன. நமக்குத்தான் தெரியுமே, சங்க இலக்கியங்கள் எல்லாம் அகம், புறம் என்ற இரண்டு பாகுபாடுகளினுள்ளே அடங்கும் என்று. தமிழருக்குத் தெரிந்ததெல்லாம், வீட்டில் இருந்தால் காதல் பண்ணவும், வீட்டிற்கு வெளியில் வந்தால் போர்புரியவுந்தான். அதனால்தான் அகத்திணைப் பாடல்கள் எல்லாம் காதல் கவிதைகளாகவும், புறத் திணைப் பாடல்கள் எல்லாம் வீரம் செறிந்தவைகளாகவும் இருக்கக் காண்கிறோம். இராமாயணமும், பாரதமும் வீரகாவியங்கள்தாம். அவைகளில் இடையிடையே காதல் விரவி நிற்கக் காண்கிறோம். போர்க்களத்துப் பரணி பாட முனைந்த கவிஞர்களும் காதல் கவிதை பாட மறக்கவில்லை. கலிங்கத்துப் பரணி தெரியாதா நமக்கு? இல்லை, நந்திக்கலம்பகம் என்றாலும் அங்கும் வீரமும், காதலும் விரவிக் கிடக்கத்தானே காண்கிறோம்? மிக மிகப் பழமையான இலக்கியம் என்று கருதப்படும் முத் தொள்ளாயிரத்திலும் வீரமும், காதலம் சேர்ந்து தானே பரிமளிக்கின்றன? இந்த நிலையில்தான் இலக்கியத்திற்கு ஆக்கம் தருவது காதலா, வீரமா என்று விவாதிக்க முனைந்திருக்கின்றனர் நமது எழுத்தாளர்கள்.

விவாதத்தில் கலந்து கொள்ளும் பத்து எழுத் தாளர்களும் நல்ல நல்ல இலக்கியம் படைக்கிறவர்கள். பல இலக்கியங்களைக் கற்றுத் தெரிந்தவர்களும் கூட. ஆதலால் இவ்விவாதத்தில் கலந்து விவாதித்து நமக் கெல்லாம் ஒரு தெளிவை ஏற்படுத்த வல்லவர்கள். என்றாலும் கட்சி என்று ஏற்பட்டு விட்டால் தங்கள் தங்கள் கட்சிக்குரிய சான்றுகளைத் தேடுவதிலும், மற்றை கட்சியின் வாதங்களை முறியடிப்பதிலுமே கவனம்

செலுத்துகின்றனர். எல்லோரும் மிக்க திறமையோடு விவாதித்தனர் என்பதை நான் சொல்லி, அவையோர் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

இனி இவர்கள் வாதத்தில் சொல்லியவற்றைக் கொஞ்சம் தொகுத்துப் பார்க்கலாம். காதல் கட்சியில் - இலக்கியத்திற்கு ஆக்கம் தருவது காதலே என்று விவாதித்தார்கள்.

காதல் என்பது கவர்ச்சியிலே பிறப்பது. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படுவதாயிருக்கலாம். மானிடருக்கு அவர்கள் பிறந்த பொன்னாட்டின் மேல் பிறந்ததாக இருக்கலாம். இல்லை, தன்னைப் படைத்த கடவுள் பேரிலேயே திரும்பலாம். பிரேமையே காதலுக்கு அடிப்படை. அது உயிரினங்கள் எல்லாவற்றிற்குமே பொதுவான நியதி. காதல் இல்லாவிட்டால் வாழ்வு இல்லை, இன்பம் இல்லை. ஏன் கவிதை இல்லை. காவியம் இல்லை, கலையுமே உருவாவதில்லை. காளிதாஸனது 'சாகுந்தலம்' ஒரு காதல் நாடகம். சிருங்காரச் சுவை மிகுந்தது. வடமொழிக் காவியம், நாடகம் முதலிய இலக்கியங்களுக்கெல்லாம் அடிப்படை காதலே. ஏன் வடமொழி இலக்கியம் என்று மட்டும் குறிப்பிடுவானேன்? ஆங்கில இலக்கியம் அத்தனையும் காதல் வாழ்வைச் சொல்வது தானே? ரோமியோ ஜூலி யட், அந்தோணி கிளியபாட்ரா முதலிய ஷேக்ஸ்பியர் நாடகங்கள் எல்லாம் காதல் இலக்கியங்கள்தாமே. பாரசீகத்து அமர இலக்கியங்களான லைலாமஜ்னு, அனார்க்கலி முதலிய கதைகளும் காதலைத்தானே கூறுகின்றன. அவ்வளவு தூரம் எல்லாம் போவானேன்? தமிழில் எழுந்த ஐம்பெருங்காப்பியங்களில் சிறந்ததான

சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி மணம் முடித்து மனையறம் புகுந்ததும் அவர்கள் உள்ளத்தில் நிறைந் திருந்த காதலைத்தான் எப்படியெல்லாம் சொல் கிறார் இளங்கோவடிகள்!

மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
காசறு விரையே, கரும்பே தேனே
அரும் பெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வணிகன் பெரு மட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
யாழிடைப் பிறவா இசையே என்கோ?
தாழிருங் கூந்தல் தையால் நின்னை -

என்று கோவலன், கண்ணகியின் நலம் புனைந் துரைக்கும் போது, காதல் கவிதை அல்லவா பாடுகிறான்? கம்பனது காவியமான இராமாயணத்திற்கு ஆக்கம் தருவதே ராமன் சீதை காதல் தானே? மிதிலை நகரின் கன்னி மாடத்து மேடை மீது நிற்கும் சீதையை, தெரு வீதியிலே முனிவர் முன்செல்லத், தம்பி பின்வரக் கண்ட ராமன் பார்க்கிறான். சீதையும் பார்க்கிறாள். இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கின்றனர். இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்துகின்றனர்.

எண்ணரும் நலத்தினாள் இணைய நின்றுழி
கண்ணொடுகண் இணை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

என்பதிலே இருவரும் காதல் வயத்தராய் நின்ற காட்சியைத்தானே வர்ணிக்கிறான் கம்பன். இக்காதல்

வளர்கிறது. பின்னர் தண்டகாரண்யத்திலே இராவணன் தன் காதலியாம் சீதையைக் கவர்ந்து செல்ல அந்த இராவணன் மீது படைகொடு சென்று அவனை வென்று சீதையை மீட்க வேண்டியிருக்கிறது. இராவண வதத்திற்கு ராமன் வீரம் துணை நின்றிருக்கிறது என்றால் அந்த வீரத்தை விளைவிக்க, சீதையின் காதல் அல்லவா ஆக்கம் தந்திருக்கிறது?

மேலும் காதல் பேசுகிறது என்றால், கடவுளே பேசுகின்றார் என்றுதான் பொருள். வானுலகமே காதல் கவிதையில் சொக்கி நின்று விடாதா என்ன? ஷேக்ஸ்பியர் என்ற கவிஞன் கூறுகிறானே —

And when love speaks the voice of all the Gods
Makes heaven drowsy with the harmony

என்று. இன்னும் ஒரு மேல் நாட்டு அறிஞன் சொல்கிறான் - வீரனைக் கண்டு அஞ்சித் தலைவணங்கலாம். அறிவாளியைக் கண்டு மரியாதை செலுத்தலாம். ஆனால் காதலன் ஒருவனே அன்பை வளர்க்கிறான் என்று,

The conqueror is regarded with awe
The wiseman commands our respect
It is only the lover that wins our affection

என்பதுதானே அவனுடைய சித்தாந்தம். இதனால் இருவரை ஒன்று சேர்ப்பது காதல். ஒருவரை ஒருவரிடமிருந்து பிரிப்பது வீரம். அன்பை வளர்ப்பது காதல். பகைமையை உருவாக்குவது வீரம்.

Love is born of love.
Valour of envy and hatred.

இந்த நிலையில் மக்களுக்கெல்லாம் இன்பத்தை வாரி வழங்கும் இலக்கியத்திற்கு வீரத்தால் ஆக்கம் தர முடியுமா? முடியாதே. காதல் தான் ஆக்கம் தருதல் கூடும். ஆதலால் இலக்கியத்திற்கு ஆக்கம் தருவது காதலே என்பது ஒரு கட்சியார் வாதம்.

வீரத்தின் கட்சியில் நின்று பேசியவர்களும் சளைக்க வில்லைதான். அவர்களும் பல சான்றுகளைக் காட்டி னார்கள். ராமர் சீதை காதல் ஆதி காவியமாகிய வால்மீகி இராமாயணத்தில் இல்லை. ஏதோ கொஞ்சம் சுவை யுடையதாக்கிக் கொள்ளத்தானே வீர காவியமான இராமா யணத்திலே அதைச் சேர்த்திருக்கிறான் கம்பன். ராமனது வீரமும், இராவணனது வீரமும், போரிடாவிட்டால் இராமாயணமே ஏது? ராமனுடன் போரிட்டால் வெல்ல முடியாது தோற்றுப் போவாய் என்று இந்திரசித்து தன் தந்தையாம் இராவணனிடம் சொன்னபோது,

வென்றிலன் என்ற போதும்
  வேதம் உள்ளளவும் யானும்
நின்றுளன் அன்றே அவ்
  இராமன் பேர் நிற்குமாயின்
பொன்றுதல் ஒரு காலத்தும்
  தவிருமோ பொதுமைத்தன்றோ
இன்றுளார் நாளை மாள்வார்
  புகழுக்கு இறுதி உண்டோ

என்றல்லவா பேசுகிறான் இராவணன். போர்க் களத்திலே ராமன் ஏவிய கணையினால் உயிரிழந்து கிடக்கும் இராவணனைக் கவிச் சக்கரவர்த்தி கம்பன் எப்படிப் பாடுகிறான் என்றுதான் பாருங்களேன்.

வெம்மடங்கல் வெகுண்டனைய சினம் அடங்க
மனம் அடங்க வினையம் வீய
தெம்மடங்க பொரு தடங்கைச் செயல் அடங்க
மயல் அடங்க ஆற்றல் தேய
தம்மடங்கு முனிவரையும் தலைஅடங்கா
நிலை அடங்கச் சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தன அம் முறை துறந்தான்
உயிர் துறந்த முகங்கள் அம்மா!

என்று தானே இராவணன் வீரம் பாராட்டப்படுகிறது. இன்னும் மெலியும் இடை, தடிக்கும் முலை, வேயிளந்தோள், சேயரிக் கண் வென்றி மாதர் நெடும் புலவியினும் வணங்காத மகுட நிறை வயங்குகின்றவன் ஆயிற்றே அவன். இம்மட்டோ, இரணியன் வெகுண்டெழுவதைச் சித்திரிக்கின்ற போதும்கூட,

கோரிது நீயும் காண கிளர்ந்த கோளரியன்
தாளொடு தோளும் நீக்கி உன்னையும் துணித்து பின்னர்
வாளினைத் தொழுவதெல்லாம் வணங்குதல் மகளிர் ஊடல்
நாளினும் உளதோ என்றான்
அண்டங்கள் நடுங்க நக்கான்.

என்றுதானே வீரத்தைப் பாராட்டுகிறான்? இத்தனையும் இராம கதைக்கு ஆக்கம் தரவில்லையா என்ன? இன்னும், மகாபாரதம் முழுவதும் வீர காவியந்தானே? காவிய நாயகன் வீர புருஷனாக இல்லாவிட்டால் அந்த இலக்கியம் ஆக்கம் பெறுவது ஏது? வீரம் என்ற ஒரு உணர்ச்சியை உருவாக்காவிட்டால் இலக்கியம் ஆக்கமே பெறாது என்பது எதிர்க்கட்சியினர் வாதம்.

இந்த விவாதத்தில் தீர்ப்புக் கூறுவது எளிதான காரியம் அன்று. இலக்கியத்தின் வளத்துக்கு காதலும், வீரமும்

உரம் கொடுக்கின்றன, என்பதை மறுத்தல் இயலாது. உலக இலக்கியத்தையெல்லாம் சான்று காட்ட வேண்டிய தில்லை. தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தில் நடக்கும் இந்த விவாதத்தில் தமிழ் இலக்கியங்களையே சான்றாக எடுத்துக் கொண்டால் போதும். பண்டைய சங்க இலக்கியங்களைக் கூர்ந்து நோக்கினால் தமிழர் வாழ்வில் காதல் எவ்வளவு இடம் பெற்றிருக்கிறதோ, அதற்குக் கொஞ்சமும் குறையாமல் வீரமும் இடம் பெற்றிருக்கிறது என்று காண்போம். ஆம், அகநானூறு முழுவதும் தமிழன் காதல் வாழ்வு பேசப்பட்டால், புறநானூறு முழுவதும் தமிழன் வீரம் பேசப்படுகிறது. வாழ்க்கையைப் பிரதி பலிப்பதுதான் இலக்கியம் என்றால் தமிழிலக்கியத்தில் காதலும், வீரமும் சம அளவிலேயே இடம் பெற்றி ருக்கின்றன எனலாம். இவை ஒவ்வொன்றும் தனித்து நின்று ஆக்கம் தந்ததாக இலக்கிய வரலாறு கூறவில்லை. ஆதலால், ஒரு நாணயத்தின் இருபுறம் போலவே இலக்கியத்திற்குக் காதலும், வீரமும், ஆக்கந்தந்திருக் கின்றன என்று கொள்ளலாம். இப்படிக் கூறுவதற்கு ஏன் ஒரு சொல்லரங்கம், ஏன் ஒரு பட்டிமன்றம் என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கிறது. விவாதத்தின் தலைப்பு எப்படி இருத்தல் வேண்டுமென்றால், இலக்கியத்திற்கு மிகுந்த ஆக்கம் தருவது எது? காதலா? வீரமா? என்றிருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் இவ்விவாவத்திற்குத் தீர்ப்புக் கூற முடியும். அது கூட என் கல்வி அறிவின் துணைகொண்டோ, அல்லது ஆற்றலின் துணை கொண்டோ சொல்ல முடியும் என்று தோன்றவில்லை. எழுத்தாளர்களுக்கெல்லாம் நல்ல ஆதர்சமாக நிற்பவன் பாரதியாராயிற்றே? அவன் தானே இந்த எழுதுகோல் தெய்வம், எழுத்தும் தெய்வம் என்று எழுத்தாளர்களுக்கு

வணக்கம் செலுத்தி இருக்கிறான். ஆதலால், அவனையே நாடுவேன் நான். சொல்கிறான் அவன்.

காதலிலே கருத்து ஒன்றிக் கலந்து விட்டால்
கணமான மன்னவர் போர் எண்ணுவாரோ?
மாதருடன் மனம் ஒன்றி மயங்கி விட்டால்
மந்திரிமார் போர்த்தொழிலில் மனங் கொள்வாரோ?

உண்மைதானே? நம் இந்திய நாட்டின் எல்லையில் தொல்லை தரும் சீனனுக்குக் காதல் உணர்விருந்தால், இந்த எல்லைப்போரில் இறங்கி இருப்பானா? யாரோடும் பகை கொள்ளலன் என்றபின் போர் ஒடுங்கும், புகழ் ஒடுங்காது என்றானே கம்பன். மேலும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கொள்கை காதலை வளர்க்குமே தவிர, வீரத்தை வளர்க்காதே. இப்படி மலர்ந்த வாழ்வை யுடைய தமிழ் மக்களது இலக்கியத்திற்கு மிகவும் ஆக்கம் தருவது எதுவாக இருத்தல் கூடும்? பாடுகிறானே பாரதி மேலும்.

காதலினால் மானுடர்க்கு கலவி உண்டாம்
கலவியினால் மானுடர்க்கு கவலை தீரும்
காதலினால் மானுடர்க்கு கவிதை உண்டாம்
ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே
அஃதன்றோ இவ்வுலகத்தலைமை இன்பம்
காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்
கவலைபோம் அதனாலே மரணம் பொய்யாம்

என்று. ''பாரதியாரே சரி! காதலினால் கவிதை உண்டாம் அஃதன்றோ தலைமை இன்பம் என்று மட்டும் கூறியிருக்கின்றீரே இன்றைய பட்டிமன்றத்திற்கு எடுத்துக்கொண்ட வீரத்தைப் பற்றி ஒன்றுமே சொல்ல வில்லையே,'' என்று கேட்டேன் அவரிடம். அதற்கு

அவர், ''அது தெரியாதா தம்பி! வீரத்தை வளர்ப்பதே காதல்தானே; சொல்லப் போனால், வீரத்திற்கே ஆக்கம் தருவது காதல்தான், நான்தான் பாடியிருக்கிறேனே

காற்றிலேறி விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே

என்று. இது போதாதா?'' என்றார் அவர்.

உண்மை. வீரத்தை வளர்ப்பதே காதல்தான். ஆதலால் இலக்கியததிற்கு மிகவும் ஆக்கம் தருவது காதலே என்று தீர்ப்புக் கூறுவதில் ஒரு சிறிதும் சிரமம் இல்லை எனக்கு.

# 2

# தம்பியரிற் சிறந்தவன் யார்?

## இராமன் தம்பி பரதனா?
## வாலி தம்பி சுக்ரீவனா?
## இராவணன் தம்பி விபீஷணனா?

கம்பன் காவியமான இராமாயணம் பல பட்டி மன்றங்களுக்குப் பொருள் தந்து உதவுகிறது. இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட பொருள் தம்பியரில் சிறந்தவன் யார்? ஆதிகாவியமான வான்மீகரது இராமாயணம் எப்படி இருக்கிறதோ, கவிச்சக்கரவர்த்தி கம்பனது இராமாயணம் சகோதரத்வம் என்னும் அரிய பண்பை விளக்க எழுந்த காவியமாகவே காணப்படுகிறது. அதில்தான் எத்தனை எத்தனை அண்ணன் தம்பியர்? காவிய நாயகனான ராமனுக்கு உடன்பிறந்த தம்பியர் மூவர் என்றால், உடன் பிறவாத் தம்பியர் மூவர். எனவே ஆறு தம்பியர் என்று கணக்கு. இன்னும் கிஷ்கிந்தையில் வாலிக்கு ஒரு தம்பி என்றால் இலங்கையில் இராவண னனுக்கு இரண்டு தம்பியர்.

இந்திரஜித்தனுக்கு வேறே இரண்டு மூன்று தம்பியர். இப்படி ஒரே தம்பியர் கூட்டமாகவே காவியம் வளர்ந்திருக்கிறது. அனைத்துலக மனிதனை நோக்கி,

நமது கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் இன்று நடந்தால், அன்றே கம்பன் அனைத்துலக சகோதரத்வத்தை நோக்கி நடந்திருக்கிறான். இன்னும் ஒரு சிறப்பு என்னவென்றால், ஒரு தம்பி அண்ணனிடம், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்குச் சிறந்த உதாரணமாக இருந்தால், ஒரு சில தம்பியர், எப்படி இருக்கக் கூடாது என்பதற்குமே எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள். இத்தகைய ஒரு அரிய காவியத்திலே இன்று மூன்று தம்பியரின் தராதரத்தினை நிர்ணயித்து முடிவு காண வேண்டியிருக்கிறது.

இவ் விவாதத்தை இன்று துவக்கி வைத்த அன்பர் இந்த விவாதத்தின் தலைப்பை எத்தனை கோணங்களிலிருந்து பார்க்கலாம் என்று குறிப்பிட்டார். குறித்த தம்பியர் மூவரில் சிறந்த தம்பி யார் என்று பார்க்கலாம். இல்லை, தம்பியாக அமைந்த இம்மூவரில் சிறந்த பண்புகள் நிறைந்தவர் யாரென்றும் பார்க்கலாம். இன்னும் காவிய நாயகனான ராமனுக்கு உற்ற துணை வர்களாக இருந்து, அவன் காரியம் யாவினும் கைகொடுத்து நின்று அதில் சிறப்புற்றவர் யார் என்றும் பார்க்கலாம் என்றார். சரி, இத்தனை கோணங்களிலுமே நின்று பார்த்து இந்த மூவரையும் எடைபோட்டு விடலாம். முதலில் இவர்களது தன்மைகளை எல்லாம் கவிச்சக்கரவர்த்தி எப்படி விளக்குகிறான் என்று பார்த்து விடுவோம்.

பரதன் ராமனது தம்பி. இருவரும் ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள் அல்லர். ஒரு தந்தைக்கு இரண்டு தாயாரிடம் பிறந்த சகோதரர்கள் ராமனும், பரதனும். முதன்முதல் பரதனை நமக்கு அறிமுகப்படுத்துகிற கவிஞன்,

தள்ளரிய பெருநீதித்
தனியாறு புகமண்டும்

பள்ளம் எனும் தகையானை
    பரதன் எனும் பெயரானை
எள்ளரிய குணத்தாலும்
    எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே அனையானைக்
    கேகயர் கோன்மகன் பயந்தனள்

என்று பாடுகின்றான். கோசிக முனிவர் ராமனது குலமுறை கிளத்தும்போது, பரதனைப்பற்றி ஜனகரிடம் பேசுகிறார். உடல் அழகாலும், உள்ளப் பண்பாலும் ராமனையே ஒத்திருப்பவன் பரதன் என்பது முதல் அறிமுகம். பின்னர் பரதன் தனது குணத்தாலும், தியாகத்தாலும் வளர்ந்துகொண்டே போகிறான் கவிஞன் சிந்தனையில், இப்படி வளர்ந்த பரதனையே பிறகு கங்கை வேடனாகிய குகனால் ஆயிரம் ராமர் நின்கேன் ஆவரோ? என்றும், கடைசியில், ராமனது தாயாம் கோசலையின் வாயாலேயே

எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின் அருளுக்கு அருகாவரோ

என்றும் உயர்த்தியே விடுகிறான். ஆம், முன்னமேயே கோசலையாம் மாற்றாந்தாயாலேயே ''நிறை குணத்தவன், நின்னினும் நல்லன்'' என்று பாராட்டப் பெறும்பேறு பெற்றவன் ஆயிற்றே? இந்தப் பரதன் தனது அண்ணனை எப்படி மதிக்கிறான் என்பதை, ராமன் காடு சென்றபின், கேகய நாட்டிலிருந்து திரும்பியவுடன், கேகயர் கேமகள் இழைத்த கைதவத்தை அறியாத நிலையில் அவன் பேசும் பேச்சிலேயே தெரியலாம்.

எந்தையும், யாயும் எம்பிரானும், எம்முனும்
அந்தமிழ் பெருங்குணத்து ராமன்

என்று கூறி தன் தமையனே தனக்குத் தந்தை, தாய், குரு, தெய்வம் எல்லாம் என்று கருதுபவனாக அமைந் திருக்கிறான் அவன் என்று காட்டுகிறவன் கம்பன். பின்னர், தன்தாய் செய்த சூழ்ச்சியினால்தான் தமயன் காடு சென்றான். தந்தை இறந்தான் என்று அறிந்தபோது தன் தாயின்மேல் வெகுண்டு எழுகிறான். ''நீ என் தாயில்லை,'' ''பழிவளர்த்தவள்,'' என்றெல்லாம் திட்டுகிறான். அவளது ஆயுளை முடிக்காமல் இருந்தால், அது அவன் தாய் என்பதினால் அல்ல, தன் தமையன் கோபித்துக் கொள்வானே என்பதினால்தான் என்றும் கூறுகிறான். இப்படித் தாய் வரங்கொள்ள, தந்தை உதவிய ராஜ்யத்தை ஏற்க மறுத்து, ராமன் சென்ற காட்டிற்கே தானும் சென்று ராமனே திரும்பி வந்து ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறான். தர்ம நியாயங்களை எடுத்துக்கூறி ராமன் அவ்விதம் வர மறுத்தபோது அவனது பாதுகைகளை வாங்கி வந்து நகர்க்கு வெளிப்புறத்தில் நந்திக்கிராமத்தி லேயே தங்கி இருக்கிறான். பாதுகைகளுக்கே பட்டா பிஷேகம் நடத்தி, தான் ராமனின் பிரதிநிதியாக இருந்தே ராஜ்யாதிகாரம் பண்ணுகிறான். பதினான்கு வருஷங்கள் கழிந்தும் ராமன் வரக் காலந்தாழ்த்துவது கண்டு, எரி வளர்த்து அதில் பாய்ந்து உயிர் துறக்கவும் துணிந்து விடுகிறான். இத்தகைய தம்பியாகிய பரதன், ராமனிடத்து எவ்வளவு அன்புடையவனாக இருக்க வேண்டும்? எவ்வளவு சிறந்த பண்புகள் நிறைந்தவனாக இருக்க வேண்டும்?

வாலியின் தம்பியாகிய சுக்ரீவனோ, உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கம் உடைய குரங்கினத் தலை வனாக இருககிறான். பிலத்துக்குள் சென்ற அண்ணன் வரவில்லை என்றும், அங்கிருந்து உதிரம் பெருகுகின்றது

என்றும் அறிந்தபோது பிலத்தின் வாயிலையே அடைத்துவிட்டு கிஷ்கிந்தைக்குத் திரும்பிவிடுகிறான். மந்திரி பிரதானிகள் வேண்டிக்கொண்டபடி மகுடத்தையும் சூடிக் கொள்கிறான். பிலத்திலிருந்து தமையன் வெளி வந்ததும் ராஜ்யத்தைக் கொடுத்துவிடத் தயாராக இருக்கிறான். ஆனால், வாலியோ தம்பிமேல் சீறி அவனை நாட்டை விட்டுத் துரத்திவிடுவதுடன் அவன் மனைவியையும் அபகரித்துக் கொள்கிறான். இந்த விவரங்களை அனுமன் மூலம் ராமன் அறிகிறான்.

உரிமை என்று இவர்க்கு
உரிய தார மாம்
அரு மருந்தையும் அவன்
விரும் பினன்
இருமையும் துறந்து
இவன் இருந்தனன்

என்று அனுமன் சொன்னதும் ராமன் சுக்ரீவனைத் தன் தம்பியாக ஏற்றுக் கொள்கிறான். 'உன்னைச் செற்றார் என்னைச் செற்றார், உன்னோடு உற்றார் எனக்கும் உற்றார்' என்றே உறவு கொண்டாடுகிறான். வாலியைப் போருக்கு அழைக்கச் சொல்கிறான். வாலியும் சுக்ரீவனும் போரிடும் பொழுது மறைந்து நின்று வாலியை வீழ்த்தி விடுகிறான். இந்த சுக்ரீவன் ராமனது துணைவலியால் கிஷ்கிந்தையில் முடிசூட்டிக்கொண்டு வாழ்கிறான். அப்படி வாழும் போது கார்காலம் குறுக்கிடுகிறது. ராமன் செய்த நன்றியை மறந்து விடுகிறான். நட்பினையும் துறந்து விடுகிறான். பின்னர் இலக்குவன் வெகுண்டெழுந்தபோது, ஓடிவந்து ராமன் திருவடி பணிகிறான். தன்பிழை பொறுக்க வேண்டுகிறான். சீதையை தேட வானர வீரர்களை அனுப்புகிறான். அதன் பின் படையெடுத்து இராவண

னோடு போர் செய்யும் போது, பலவகையிலும் ராம னுக்குத் துணை நின்று, ராமன் வெற்றிபெற உதவுகிறான். இதுதான் சுக்ரீவன் வரலாறு.

இராவணன் தம்பி விபீஷணனோ தன் தமையனிடம் அளவற்ற அன்புடையவனாக வாழ்கிறான். ஆனால், அவன் தவறு செய்து அதனால் பழி எய்துகிறான் என்ற போது இடித்துரைக்கத் தவறவில்லை. தான் ஏன் அப்படி சொல்கிறான் என்பதையும் அவனே கூறுகிறான்.

எந்தை நீ, யாயும் நீ, எம்முன் நீ, தவ
வந்தனைத் தெய்வம் நீ, மற்றும் முற்றும் நீ
இந்திரப் பெரும் பதம் இழக்கின்றாய் என
நொந்தனன் ஆதலின் நுவல்வதாயினேன்

என்று தன் அன்பின் வெளிப்படையாகவே உரைக் கிறான். ஆனால், இராவணனோடு விபீஷணன் சொன் னதையெல்லாம்

'பிச்சர் சொல்லிய சொல்லினை'

என்று உதறிவிடுகிற போதும் இரணியன் கதையையே எடுத்துச் சொல்கிறான். அதையும் ஏற்காது தான் நினைத்த வழியே நடக்கும் அண்ணனைத் திருத்துதல் இனி இயலாது என்று காண்கிறான். தன்முன் நில்லாதே என்று இராவணன் அவனை விரட்டிய பின்தான், விபீஷணன் ராமனிடம் சென்று அவனை அடைக்கலம் அடைகிறான். அவன் விரும்பியது இலங்கை அரசை அல்ல. வீட்டரசை விரும்பியே ராமனைச் சரண் அடைகிறான். பின்னர் நடந்த போரில் இராவணனும், அவனைச் சேர்ந்தவர்களும் செய்யும் மாய மந்திரங்களை எல்லாம் ராமனுக்கு எடுத்துக் காட்டி அவன் போரில் வெற்றி பெறப் பலவகையிலும்

உதவுகிறான். இந்திரசித்தனை இலக்குவன் முடித்ததும் 'இது வீடணன் தந்த வெற்றி' என்றே ராமன் பாராட்டு கிறான். இராவணவதம் முடியும்வரை விபீஷணன் ராமனுக்குப் பக்கபலமாகவே நின்றிருக்கிறான். சாதியால் வந்த சிறுநெறியை, உடன்பிறப்பால் ஏற்படும் பாசத்தை எல்லாம் உதறத்தெரிந்து நீதியால் வந்த நெடுந் தரும நெறியில் நிற்க முனைந்தவன் என்று கம்பன் பாராட்டுகிறான். இவன் மேதாவிகளுக்கு எல்லாம் மேலானவன் என்றே பாராட்டப்படுகிறான்.

இப்படித் தம்பியர் மூவரும் சிறந்து நிற்கிறார்கள் காவியத்தில். இன்று இவ்விவாதத்தில் கலந்து கொண்ட அன்பர்கள் பொதுவாகச் சிறந்த தம்பியாகப் பரதனும், சிறந்த பண்புள்ளவனாக விபீஷணனும், ராமனுக்கு உற்ற சிறந்த துணைவனாக சுக்ரீவனும் இலங்குகின்றார்கள் என்றே விவரித்தனர். பரதனையும், விபீஷணனையும் பற்றி அவர்கள் சொன்னது எனக்கு உடன்பாடே. ஆனால், சுக்ரீவன் இருக்கிறானே, அவன் ராமனுக்குத் துணை யிருந்து சிறப்புப்பெற்றான் என்றால், அவனை விடச் சிறப்பாகவே துணை நின்றிருக்கிறான் விபீஷணன் என்றே சொல்லத் தோன்றுகிறது. விபீஷணன் இல்லாவிட்டால் ராமனால் இராவணவதத்தை முடித்திருக்க இயலுமோ என்னவோ என்று கூட ஐயம் தோன்றுகிறது. சுக்ரீவன் ராமனுக்குத் துணை நின்று எவ்வளவோ சிறப்புப் பெற்றான் என்றாலும் ராமன் துணை கொண்டு தன் அண்ணனைக் கொல்வதற்கு அடிகோலினான் என்ப தொன்றே அவனைக் கீழ்மகன் ஆக்கி விடுகிறது. ஆதலால், அவன் சிறந்த தம்பியாக இருத்தல் முடியாது. எப்போது ராமன் செய்த சேவையைக் கூட மறந்து ராஜ்ய வாழ்விலும், காமக் களியாட்டங்களிலும் மயங்கி

விடுகிறானோ, அப்பொழுது அவனைச் சிறந்த பண்புகள் நிறைந்தவன் என்றும் சொல்ல இயலாது. ஆதலால், முதலில் விவாதத்திலிருந்து இவனை நீக்கி விடலாம்.

இனி இருப்பவர் பரதனும், விபீஷணனுமே. விபீஷணன் சிறந்த குணவான், சிறந்த சத்யாக்கிரஹிதான், என்றாலும் அவன் சிறந்த தம்பியாக முடியாது. இராவணனது இன்னொரு தம்பி கும்பகர்ணன் - அண்ணன் தவறு செய்கிறான் என்றால் அவனைத் திருத்த முயலலாம். அப்படித் திருத்த முடியாவிட்டால் அவனை விட்டுப் பிரியாமல் அவனுடன் சேர்ந்து போர் செய்து அவன் சாவதற்கு முன்னமேயே சாவதுதானே தம்பியின் பணியாக இருத்தல் வேண்டும் என்று சொல்வதோடு நிற்காமல் அப்படியே நடந்தும் காட்டுகிறானே. இதைத் தானே கம்பன்

கருத்து இலா இறைவன் தீமை
  கருதினால், அதனைக் காத்துத்
திருத்தலாம் ஆகின் நன்றே
  திருந்துதல் தீராதாயின்
பொறுத்துறு பொருள் உண்டாமோ?
  பொரு தொழிற்கு உரிய ராகி
ஒருத்தரின் முன்னம் சாதல்,
  உண்டவர்க்கு உரியதம்மா!

என்று பாடுகிறானே. இந்த உரைகல்லின்படி விபீஷணன் சிறந்த தம்பியாக இருத்தல் இயலாதுதானே. இன்னும் சொல்லப்போனால் விபீஷணனே இந்த விவாதத்திலிருந்து ஒதுங்கிக் கொள்ள விழைகிறான் என்பதையும் காண்போம். நிகும்பலையில் இந்திரசித்தன் இவனைத் தூற்றுகின்றபோது

அறம் துணை ஆவது அல்லால்
அரு நாகு அமைய நல்கும்
மறம் துணை ஆக, மாயாப்
பழியொடும் வாழமாட்டேன்
துறந்திலேன் மெய்ம்மை
பொய்ம்மை உம்மையே துறப்பது அல்லால்
பிறந்திலேன் இலங்கை வேந்தன்பின்
அவன் பிழைத்த போதே!

என்றே கூறி விடுகிறான். ஆம், எப்போது வழிதவறிச் சென்று விட்டானோ அதன்பின் நான் அவன் தம்பியே அல்ல என்றல்லவா கூறியிருக்கிறான். அவனே withdraw பண்ணிக்கொள்ளும்போது அவனைச் சிறந்த தம்பி என்று பாராட்டுவானேன்? எஞ்சி நிற்பவன், பரதனே. இவனைச் சிறந்த தம்பி என்று கூறப் பல சான்றுகளைத் தேட வேண்டாம். ராமனே கூறுகிறான்,

எத்தாயர் வயிற்றில் பின் பிறந்தார்கள் எல்லாம்
ஒத்தால் பரதன் போல் பெரிதும் உத்தமன் ஆவதுண்டோ

என்று. இப்படிச் சொல்லும்போது, வீடணன் அரங்கிற்கு வரவில்லையென்றாலும், அவனையும் உள்நினைவில் வைத்துக் கொண்டேதான் கம்பன் பாடியிருக்கிறான் என்று தானே சொல்லத் தோன்றுகிறது. மேலும், சேண் உயர் தருமத்தின் தேவன் செம்மையின் ஆணி என்றும் அவனை உயர்த்திப் பேசுகிறான் ராமன். அவன் சிறந்த தம்பி மாத்திரம் அல்ல சிறந்த பண்புகள் நிறைந்தவனும் அவனே என்று எளிதாகக் கூற முடிகிறது. ராமனுக்குப் போரில் அவன் துணை நிற்கவில்லை என்கிறார் சிலர். உண்மைதான். அதற்கு அவனுக்கு வாய்ப்பு எங்கே இருக்கிறது? அதோடு, ராமன் காடு

சென்று துஷ்ட நிக்ரஹதம் செய்து கொண்டிருந்தபோது நாட்டிலிருந்து சிஷ்டபரிபாலனம் செய்து கொண்டிருக் கிறானே பரதன், தன் அண்ணன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அது போதாதா? ஆதலால் எல்லா வகை யிலும் தம்பியரில் சிறந்தவன் பரதனே என்றுதான் முடிவுகட்ட வேண்டியிருக்கிறது.

பட்டிமன்றத்தில் இந்த விவாதம் இன்றுதான் முதன் முதல் நடந்திருக்கிறது என்றில்லை. பல வருஷங்களுக்கு முன்னே தென்பாண்டி நாட்டை ஆண்டு வந்த வரதுங்கராம பாண்டியன் சபையிலும் நடந்திருக்கிறது என்று தெரிகிறது. அப்பட்டிமன்றத்திற்குத் தலைமை வகித்த வரதுங்கராமன் மனைவி இதே தீர்ப்பையே கூறியிருக்கிறாள்.

செங்கதிரோன்மைந்த னையும்
    தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும்
    பாராதே - விஞ்சு
விரதமே பூண்டு இந்த
    மேதினியை ஆண்ட
பரதனையும் ராமனையும் பார்

என்பதுதானே தீர்ப்பு. அதே தீர்ப்பைத்தான் நானும் வழங்கி இருக்கிறேன் இன்று. வரதுங்கன் மனைவியை விட நான் மிக அறிவுடையவன் என்று கூற முடியாதே.

# 3

# உடன் பிறவாத் தம்பியரில் உயர்ந்த தம்பி யார்?

## குகனா?
## சுக்ரீவனா?
## விபீஷணனா?

இராமகதை உலக இலக்கியத்திலேயே ஓர் உயர்ந்த இடம் பெற்ற கதை. இக்கதையை முதன் முதல் உலகுக்குத் தந்தவர் வடமொழிக் கவிஞரான வான்மீகி முனிவர். பின்னரே தமிழில் கவிச் சக்கரவர்த்தி கம்பனும், இந்தியில் துளசிதாஸரும் எழுதியிருக்கிறார்கள். இன்னும் இந்திய மொழி பலவற்றிலும் இக்கதை மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது.

ஆதிகவி வான்மீகி இக்கதையை ஏன் எழுதினார் என்பதற்கு ஒரு சுவையான கதை உண்டு. வான்மீகி முனிவர் காட்டிலேயே பர்ணசாலை அமைத்துக்கொண்டு வாழ்கிறார். ஒரு நாள் நாரதர் அவரைத் தேடிக்கொண்டு வருகிறார். அவரிடம் வான்மீகி கேட்கிறார், இந் நிலவுலகிலேயே நிறைந்த அழகும், சிறந்த குணங்களும் உடையவன் யார்? நல்ல ஆண்மையும் அருளும்

உடையவன் யார்? உயர்ந்த தருமங்களையும், நீதிகளையும் அறிந்தவன் யார்? ஆம், பதினாறு கல்யாண குணங்களும் உடைய உத்தம புருஷன் யார்? என்று கேட்கிறார். இத்தனை கேள்விகளுக்கும் பதில் ஒன்றுதான். அழகனாக, வீரனாக, சிறந்த குணங்கள் நிறைந்தவனாக இருப்பவன் ராமனே. சத்திய சந்தனும், தருமம் உணர்ந்தவனும் அவனே என்று கூறுகிறார் நாரதர். சகலகுண சம்பன்ன னாக, உத்தம புருஷனாக இருக்கும் ராமனது கதையையே, வான்மீகி ஓர் அற்புதமான காவியமாக எழுதுகிறார். அக்கதையில் வரும் குகனையோ, சுக்ரீவனையோ, இல்லை விபீஷணனையோ ராமன் சகோதரனாக ஏற்றுக் கொண்டான் என்று வான்மீகி கூறவில்லை. கடைசியில் ராமர் பட்டாபிஷேகம் நடக்கும்போது இவர்களில் ஒருவரையோ, அன்றி மூவரையும்தானோ ''பிராதா'' என்று குறிப்பிடுகிறார் என்பர் வடமொழியில் எழுந்த இந்த இராமகதையைக் கற்றவர்.

ஆனால்,

இந்தக் கதையை அற்புதமான பாக்களிலே எழுதிய கவிச் சக்கரவர்த்தி கம்பன் இக்காவியம் மூலம் ஓர் உலக சகோதரத்துவத்தை, ஒரு தேசிய ஒருமைப்பாட்டையே உருவாக்கியிருக்கிறான். காரணம் தமிழ்நாட்டின் வரலாற்றைப் படித்திருக்கிறான். சின்னஞ்சிறு ராஜ்யங் களாக தமிழ் நாடு சேர சோழ பாண்டிய பல்லவர்களால் ஆளப்பட்டு வந்திருக்கிறது. இத்தமிழ்நாட்டின் வரலாறே இவர்களுக்கிடையே பல நூற்றாண்டுகளாக நடந்த போர்களாகவே இருக்கக் கண்டிருக்கிறான். இப்படிப் போரிட்டுப் போரிட்டு சாம்ராஜ்ய வெறி கொண்ட தமிழ் அரசர்களையே கண்டவன், வான்மீகியின் இராமா கதையைக் கேட்டிருக்கிறான். அக்கதாநாயகனான ராமன்

தாய் வரங்கொளத் தந்தை ஏவுகிறான் என்பதற்காக ஒரு சாம்ராஜ்யத்தையே துறந்து காட்டிற்குச் செல்கிறான். ஒருவரும் ஏவாமலேயே அவன் இணைபிரியாத் தம்பியான இலக்குவன், வில்லைத் தூக்கி தோளில் மாட்டிக்கொண்டு காட்டிற்குச் செல்லும் அண்ணனுடனேயே புறப்பட்டு விடுகிறான். தாயாகிய கைகேயி, பலரது விருப்பத்திற்கு எதிராகத் தன் கணவனிடம் வரம் பெற்று அதன் மூலம் உரிமையாக்கிய சக்கரவர்த்தி பதவியைத் தூ வென்று தள்ளிவிட்டு காடு சென்ற அண்ணனைத் திரும்பவும் நாட்டுக்கு வரும்படி அழைக்கிறான் இன்னொரு தம்பி பரதன். அவன் வர இணங்காதபோது அவனது பாதுகையையே பெற்று வந்து அதற்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்து அவற்றின் பிரதிநிதியாக ஊருக்கு வெளியிலேயே இருந்து அரசு புரிகிறான் அவன்.

கானாளச் செல்கின்ற ராமன், கங்கைக் கரையில் வேட்டுவத் தலைவனான குகனையும், கிஷ்கிந்தையில் வானர வீரனான சுக்கிரீவனையும், இலங்கையில் தன் பகைவனின் சகோதரனான விபீஷணனையுமே தன் தம்பியர் குழாத்தில் சேர்த்துக் கொள்கிறான்.

குகனோடும் ஐவரானோம் முன்பு,
பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம்
எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனோம்
புகலரும் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் உந்தை

என்று ராமன் சொன்னதாகக் கம்பன் பாடுகிறான். ஆம். உடன்பிறந்த தம்பியர் மூவரோடு, உடன்பிறவாத் தம்பியராக மூவரையும் சேர்த்துக்கொண்டு நாங்கள் எழுவர் "We are Seven" என்று கட்டியங் கூறுகிறான் கம்பன் உருவாக்கிய ராமன். இப்படி ஓர் அற்புத சகோதரத்துவம் என்ற தன்மையையே இப்பாத்திரங்களின் மூலம் உருவாக்கிக் காட்டுகிறான் அவன்.

இந்த உடன்பிறவாத் தம்பியர் மூவரில் உயர்ந்த தம்பி யார் என்பதே இன்றைய பட்டிமன்றத்தில் விவாதிக்க எடுத்துக்கொண்ட பொருள். விவாதித்தவர்கள் எல்லாம் நன்றாகக் கம்பனைக் கற்றவர்கள். அக்காவிய நயத்தை யெல்லாம் உணர்ந்தவர்கள். ஆதலால், மிகவும் தெளி வாகத் திறமையாகத் தாங்கள் தாங்கள் எடுத்துக் கொண்ட கட்சியை விளக்கமாகவே எடுத்து உரைத்திருக்கிறார்கள்.

இந்த மூவரையும் எந்த எந்த நிலையில் ராமன் தம்பியாக ஏற்றுக் கொள்கிறான் என்று பார்ப்போம்.

அயோத்தியை விட்டுப் புறப்பட்ட ராமன், லக்ஷ்மணன், சீதை மூவரும் கங்கைக்கரை வந்து சேர்கிறார் கள். கங்கையைக் கடந்தே காடு செல்லவேண்டியிருக் கிறது. கங்கை இருகரை உடையவனாகவும், கணக்கிறந்த நாவாய்களுக்கு அதிபனாகவும் குகன் என்னும் வேட்டுவ அரசன் வாழ்கிறான். அவன் சக்கரவர்த்தித் திருமகனான ராமனைப் பார்த்ததில்லையே ஒழிய, அவனைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறான். அவனைக் காணவும் ஆசைப்பட்டுக் கொண்டு இருக்கிறான். அத்தகைய ராமன் தான் ஆட்சி செலுத்தும் கங்கைக் கரைக்கே வந்து, அங்குள்ள முனிவர்களோடு தங்கியிருக்கிறான் என்று அறிந்தபோது, தேனும் மீனும் எடுத்துக்கொண்டு

அவனைக் காண வருகிறான். முதலில் லக்ஷ்மணனைச் சந்திக்கிறான். குகனை அவன் அழைத்துச் சென்று ராமன் முன்பு நிறுத்துகின்றான். ''தேவா நின் கழல் சேவிக்க வந்துள்ள நாவாய் வேட்டுவன் நாயடியேன்'' என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொள்கிறான். ராமனிடத்து கரைகாணாக் காதல் பிறக்கிறது அவனுக்கு. ராமனும், அவனைத் தன் பக்கம் உட்காரும்படிப் பணிக்கிறான். அந்த அந்தஸ்தைப் பெறத் தனக்கு யோக்யதை இல்லை என்று உணர்ந்த குகன் இருக்க மறுத்து விடுகிறான். தான் கொண்டு வந்திருக்கும் உணவை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறான்.

இருத்தி ஈண்டு என்னலோடும்
　இருந்திலன் எளிய நீத்த
அருத்தியன், தேனும் மீனும்
　அமுதினுக்கு அமைவதாக
திருத்தினன் கொணர்ந்தேன்
　என்கொல் திருவுளம்

என்று மிக விநயமாகவே பேசுகிறான். ராமனோ அவனுடைய அளப்பரிய அன்பினை உணர்கிறான். அவன் கொண்டு வந்த தேனும், மீனும் அசுத்தமான பொருள்களாகப் படவில்லை. ஆம், அதைக் குகன் தன் அன்பினால் அல்லவா பொதிந்து கொண்டு வந்திருக்கிறான். ஆதலால், அவை பவித்திரமான பொருளாகிவிட்டது என்று தன் பக்கலில் உள்ள முனிவர்களுக்கெல்லாம் அறிவிக்கிறான். ''பரிவினில் தழீயது என்னில் பவித்திரம்'' என்றே பாராட்டுகிறான். அயோத்தி நிலமகள் நோற்றும் பெறாத பாக்கியத்தைத் தான் பெற்றுவிட விரைகிறான் குகன். தன்னுடனேயே ராமன் தங்கியிருந்து விட வேண்டு

கிறான். ராமனது தேவைகளையெல்லாம் தன்னால் பூர்த்தி செய்து விடக்கூடும் என்று நம்புகிறான்.

தேன் உளது; தினை உளது
  தேவரும் நுகர்தற்கு ஆம்
ஊன் உளது; துணை நாயேம்
  உயிர் உள, விளையாடக்
கான் உள புனலாடக்
  கங்கையும் உளது அன்றே
நான் உளதனையும் நீ
  இனிதிரு, நட, எம்பால்

என்றே உரிமையோடு பேசுகிறான். இதையெல்லாம் மறுத்துவிட்டு குகனது படகு ஒன்றில் ஏறி கங்கையைக் கடக்கிறான் ராமன். அப்போதும் குகன், சரி நீ என்னோடு தங்காவிட்டால் நான் உன்னுடனேயே வந்துவிடுகிறேன் என்கிறான். "பொருவருமணிமார்பா போதுவன் உடன்" என்றே முனைந்து நடக்கிறான். இந்த குகனது தீராத காதலையறிந்த ராமன், "தம்பி, நீ என்னோடு வந்து விட்டால் இங்குள்ள நமது கிளைஞர்களை யார் காப்பது? ஆதலால் இங்கேயே தங்கியிரு" என்று சொல்லிவிட்டு, நீயோ என் உயிர் போன்றவன், பக்கத்தில் நிற்கும் இந்த இலக்குவன் உன் தம்பி; சீதையோ உன் கொழுந்தி, நானோ உன் தொழில் உரிமையில் பங்கு கொள்ளுகிறவன் என்று பாராட்டிப் பேசுகிறான். இதைக் கம்பன் சொல்கிறான்:-

அன்னவன் உரைகேளா
  அமலனும் உரை நேர்வான்
'என்னுயிர் அனையாய் நீ,
  இளவல் உன் இளையான்,
நண்ணுதல் அவள் நின் கேள்,
  நளிர்கடல் நிலம் எல்லாம்.

உன்னுடையது நான் உன்'
தொழில் உரிமையில் உள்ளேன்

என்று சொல்லியதோடு அமையாது, முன்னர் நாங்கள் அண்ணன் தம்பியர் என்று நாலு பேர்தான் இருந்தோம். இன்று உன்னையும் சேர்த்து ஐந்து பேராகிவிட்டோம் என்றே சொல்கிறான்-

முன்புள ஒரு நால்வேம்
முடிவுள என உண்ணா
அன்புள இனி நாமோர்
ஐவர்கள் உளரானோம்

என்றே, தான் அவனைத் தன் சகோதரனாக ஏற்றுக் கொண்டதை அழுத்தமாகவே கூறுகிறான். இப்படித்தான் குகனைத் தன் சகோதரருள் ஒருவனாக ராமன் ஏற்றுக் கொண்டான் என்று கம்பன் காவியம் கூறுகிறது.

சுக்ரீவன் ராமனை அணுகுகின்றதையும் கம்பன் அழகாகவே சொல்கிறான். சுக்ரீவன் வானர அரசனாம் வாலியின் தம்பி. வாலி தனக்கு சுக்ரீவன் வஞ்சனை செய்து விட்டான் என்று எண்ணி அவனது மனைவியையும் கைப்பற்றிக்கொண்டு, அவனைக் கிஷ்கிந்தை நகரை விட்டே துரத்திவிடுகிறான். வாலியோடு போரிட இயலாத சுக்ரீவன், அமைச்சன் அனுமனோடு கிஷ்கிந்தையை அடுத்த ரிஷ்யமுக பர்வதத்திலே ஒளிந்து வாழ்கிறான். சீதையைத் தேடி வருகின்ற ராமனையும், லக்ஷ்மணனையும் அனுமன் சந்தித்து தன் தலைவனான சுக்ரீவனிடம் அழைத்து வருகிறான். வருகிறவர்கள் அழகர்கள் மாத்திரம் அல்ல நல்ல வீரர்களும் கூட என்று தெளிகிறான் சுக்ரீவன். ஆம், இவர்கள் தேவர்களுக்கு எல்லாம் தேவர்கள், மானுடராய் அவதரித்திருக்கிறார்கள்

என்பதையுமே உணர்கிறான். வாலியோடு தன் பகை முடிய இவர்கள் உதவுவார்கள் என்றே எண்ணுகிறான். ஆகவே ராமன் திருவடிகளிலே சரணம் அடைகிறான்.

சரண் உனை அடைந்தேன்
என்னைத் தாங்குதல் தருமம்

என்றே வேண்டிக் கொள்ளுகிறான். சுக்ரீவன் வரலாற்றையெல்லாம் அனுமன் எடுத்துரைக்கிறான். சிற்றன்னை சொன்னாள் என்பதற்காகப் பெரிய ராஜ்ய பதவியையே தன் தம்பி பரதனுக்குக் கொடுத்து விட்டு வந்த ராமன், தம்பியாகிய சுக்ரீவனை, வாலி, ராஜ்யத்தை விட்டு அடித்துத் துரத்திவிட்டான். அவன் மனைவியை அபகரித்துக் கொண்டான் என்று கேட்டபோது அந்த வாலி பேரில் அசாத்ய கோபம் எழுகிறது. தன்னைப் போலவே துயருறுபவன் என்றதும் அவன் பேரில் ஒரு அன்பு பிறக்கிறது. அந்த அன்பில் அவனையும் தம்பியாக ஏற்றுக்கொள்ளும் ஆவலும் அதிகரிக்கிறது. எப்படி சுக்ரீவனை ஏற்றுக்கொண்டான் ராமன் என்பதைக் கம்பன் சொல்கிறான்,

மற்று இனி உரைப்பது என்னே?
வானிடை மண்ணில் நின்னைச்
செற்றார் என்னைச் செற்றார்
தீயரே எனினும் உன்னோடு
உற்றார் எனக்கும் உற்றார்
உன் கிளை எனது, என் காதல்
சுற்றம் உன் சுற்றம்
நீ என் உயிர்த் துணைவன்

என்றே அவனை அணைத்துக் கொள்கிறான். இப்படித் தான் சுக்ரீவனும் ராமன் தம்பியாக உயர்வடைகிறான்.

இனி இந்த விபீஷணன் எப்படி ராமனை வந்து அடைந்தான் என்று பார்க்கலாம். இலங்கையர்கோனான இராவணனது தம்பியாக விபீஷண்ன் வாழ்கிறான். அரக்கனாய்ப் பிறந்தாலும் அந்தணனாகவே வாழ்கிறவன் அவன். இராவணன் தண்டகாரண்யத்திலிருந்து சீதையை எடுத்து வந்து அசோகவனத்தில் சிறை வைத்திருப்பதை ஆதிமுதலே கண்டித்து வருகிறான். சீதையை மீட்டுச் செல்ல ராமன் வானரப்படையோடு வந்து கொண்டிருக்கிறான் என்பதை அறிந்து இராவணன் தன் மந்திரக் கிழவரை அழைத்து ஆலோசனை செய்கிறான். அங்கும் விபீஷணன் தன் கருத்தை ஆணித்தரமாகத் தெரிவிக்கிறான். சீதையைச் சிறை எடுத்தது புகழ்தரத்தக்க செயல் அல்ல. சீதையை விடுதலை செய்து ராமனிடம் சேர்த்து விடுவதே நல்லது என்று சொல்கிறான்.

இசையும் செய்கையும்
    உயர்குலத்து இயற்கையும் எஞ்ச
வசையும் கீழ்மையும் மீக்கொள
    கிளையோடும் மடியாது
அசைவில் கற்பினாள் அணங்கை
    விட்டருளுதி, இதன்மேல்
விசயம் இல்லெனச் சொல்லினன்
    அறிஞரில் மிக்கோன்

என்று கம்பன் பாடுகிறான். இந்த அறிவுரையை ஏற்க மறுத்து, விபீஷணனைக் கடிந்து பேசுகிறான் இராவணன். இந்தச் சூழ்நிலையில் விபீஷணன் இனி இந்த அண்ணனுடன் இருந்து பயனில்லை என்று கருதி ராமன் தங்கியிருக்கின்ற பாசறை வந்து சேர்கிறான். ராமனும், அனுமன் ஆலோசனைப்படியே தன்னிடம் அடைக்கலம் புகுந்த

விபீஷணனை அணைத்துத் தன் ஆறாவது தம்பியாக ஏற்றுக் கொள்கிறான். அப்போதுதான்

எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவரானோம்
புகலரும் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் உந்தை

என்று கம்பன் பாடுகிறான். இப்படித்தான் குகன், சுக்ரீவன், விபீஷணன் மூவரையும் ராமன் தம்பியாக ஏற்றுக் கொண்டான் என்று காவியம் கூறுகிறது.

இந்த வரலாற்றைத்தான் இம்மூவர் கட்சியில் வாதாடிய அறிஞர்கள் விரிவாக விளக்கமாக எடுத்துரைத்தார்கள். மூவரும் ராமனது உடன்பிறவாத் தம்பியாக விளங்கினார்கள் என்று வெள்ளிடைமலை. இந்த மூவரில் யார் உயர்ந்த தம்பி என்பது முடிவு கட்ட வேண்டியதே இனி நான் செய்ய வேண்டிய பணி. கம்பன் சொல்வதைப் படிக்கும்போதே தெரிந்து விடும் இவர்களில் யார் உயர்ந்த தம்பி என்று. சுக்ரீவனும் விபீஷணனும் தங்கள் தங்கள் அண்ணன்மாரை விட்டு வந்து ராமனிடம் சரண் புகுந்தவர்கள். இவர்களில் சுக்ரீவனோ தன் அண்ணன் வாலியோடு பகையே கொண்டவன். அவனை வெல்வதற்கும், ஏன், கொல்வதற்குமே காலமும், இடமும், துணையையும் எதிர்பார்த்து இருந்தான். ராமனைப் போன்ற வீரன் ஒருவன் வந்திருக்கிறான் என்ற உடனேயே அவனிடம் சரண் புகுகிறான். தன்னைக்காக்க வேண்டும் என்று அபயக் குரலையே எழுப்புகிறான். ராமனைத் தன் துணைவனாகக் கொள்ளு முன்பு அவன் ஆற்றலைக் கூடச் சந்தேகிக்கிறான். அதற்காக மராமரங்களை எய்யச்

சொல்லுகிறான். துந்துபியின் எலும்பைத் தூக்கி எறியச் சொல்லுகிறான். இவனுக்கு ராமனிடத்து அளப்பரிய அன்பிருந்தது என்று சொல்ல இயலாது. இது மட்டுமல்ல. வாலியைக் கொன்று கிஷ்கிந்தை ராஜ்யத்தையே அவனுக்குக் கொடுத்து முடிசூட்டி வைக்கிறான் ராமன். கார்காலம் என்ற சாக்கில் உடனே சீதையைத் தேட ஆள் அனுப்ப முடியவில்லை. கார்காலம் முடிந்த உடனாவது அந்த நன்றியை நினைத்துத் தன் பணியைத் துவக்கினானா என்றால், இல்லை. கேளிக்கைகளிலே அமிழ்ந்து கிடக்கிறான். இதைக் கம்பனே சொல்கிறான், இராமன் வாயிலாக:-

பெறல் அருந்திருப்பெற்று உதவி பெரும்
  திறம் நினைந்திலன், சீர்மையில தீர்ந்தான்
அறம் மறந்தவன் அன்பு கிடக்க, நம்
  மறம் அறிந்திலன், வாழ்வின் மயங்கினான்

என்றும்

நன்றி கொன்று அருநட்பின் நார் அறுத்து
ஒன்றும் மெய்மை சிதைத்து உரை பொய்த்தான்

என்றும் குமுறுகிறான். சுக்ரீவன் காரியவாதி. தன் காரியம் முடிந்ததும் செய்த நன்றியை மறந்து விடுகிறான். இவனை உயர்ந்த தம்பி என்று கூறுதல் இயலாது தானே? இராவணனோடு ஏற்ற போரில் ராமனுக்குப் பக்கத் துணையாயிருந்தான். இராவணன் மகுடங்களையெல் லாம் பறித்தான். கும்பகர்ணன் மூக்கையே கடித்துக் குதறினான். ஆதலால் அவன் அன்பு ஆற்றல் மிக்க அன்பு என்று விவாதிக்கின்றனர் சுக்ரீவன் கட்சியார். இந்த ஆற்றலும், வலியும் அவன் நன்றி கொன்ற தன்மையில் அடியோடே அழிந்து போகிறது. ஆதலால் முதலில்

சுக்ரீவனை விவாதத்திலிருந்து அகற்றிவிடலாம் உயர்ந்த தம்பி அல்ல என்று.

இனி விபீஷணனது தன்மையைக் கவனிக்கலாம். கம்பன் விபீஷணனை ஓர் அற்புதமான பாத்திரமாகத்தான் சிருஷ்டி செய்திருக்கிறான். மேதாவிகட்கெல்லாம் மேலானவன். அறிவின் உம்பரான், கோதிலாதான் - சால்பு மிக்கான் என்றெல்லாம் கம்பன் அவனைப் பாராட்டு கிறான். இவை காரணமாக அவன் உயர்ந்த பண்புகள் நிறைந்தவன் என்று கொள்ளலாம். ஆம், நீதியால் வந்த நெடுந்தரும நெறியிலே வாழ்ந்தவன் அவன். சாதியால் வந்த சிறுநெறியை அறியாதவன். இப்படி எல்லாம் இருந்தாலும் அவன் சிறந்த தம்பி யாவானா? என்பது கேள்வி. ராமனிடம் வந்து அடைக்கலம் புகும்போது அவன் உள்ளத்தின் அடித்தளத்தில் இலங்கை மகுடம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்ற ஆசை இல்லா திருந்தது என்று சொல்ல இயலாது. அருத்தியும் அரசின் மேற்றே என்று கம்பன் கூறும்போது நாம் அவனது எண்ணங்களைச் சந்தேகிக்கவே ஆரம்பித்து விடுகிறோம். ராமன் இராவணனோடு ஏற்று நின்ற போரில் விபீஷணன் ராமனுக்கு எவ்வளவோ துணைபுரிந்திருக்கிறான். இந்திர சித்தனை இலக்குவன் வென்று பகை முடித்தபோது இது வீடணன் தந்தவெற்றி என்றே பாராட்டுகின்றான் ராமன். வீபிஷணன் அன்பு, ஞானம் கலந்த ஒன்று என்றே வாதிடு கின்றனர் அவன் கட்சியில் பேசுபவர்கள். எப்போது ஞானம் முந்திக் கொள்கின்றதோ அப்போது அன்பு குறைந்து விடுகிறது. ஆம், அவனுக்கு நீதிக்குப்பின் தான் பாசம், பாசத்திற்குப் பின் நீதி அல்ல. பாசம் எப்போது பின்னடித்து விடுகிறதோ, அதன் பின் அவன் உயர்ந்த தம்பியாக ஆவது எங்ஙனம்?

இனி எஞ்சி நிற்பவன் குகனே. அவன் அன்பே பயன் கருதாத அன்பு. எதையும் வேண்டி அவன் ராமனை அடையவில்லை. உன் சரணம் என்றோ, உன் அடைக்கலம் என்றோ கூறவில்லை ராமனிடம். ராமனோடு உளங்கலந்து, அவனுடன் ஒன்றி வருகிறான். அவனுடைய அன்பைக் கரைகாணாக் காதல் என்றே கம்பன் கூறுகிறான். ராமன் மாத்திரம் தானா இவனைத் தம்பி என்று ஏற்றுக் கொள்கிறான். இன் துணைவன் ராகவனுக்கு, இலக்குவற்கும் இளையவர்க்கும் எனக்கும் மூத்தான் என்றே பரதனும் அவனை அண்ணனாக ஏற்றுக் கொள்கிறான். இதைக் கேட்ட கோசலையும்,

நைவீரலீர் மைந்தீர்
இனித்துயரால் நாடிறந்து
காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும்
நலமாயிற்றாம் அன்றே
விலங்கல் திண்தோள்
கைவீரக் களிறனைய
காளை இவன் தன்னோடும்
கலந்து நீவிர்
ஐவீரும் ஒரு வீராய்
அகலிடத்தை நெடுங்காலம்
அளித்தீர்.

என்றே கூறுகிறாள். அசோகவனத்தில் சிறையிருக்கிற சீதையும் ராமன் குகனைத் தம்பியென்று ஏற்றுக் கொண்டதை நினைக்கிறாள்.

ஆழநீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பி நின் தம்பி, நீ

தோழன், மங்கை கொழுந்தி எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்

என்றே இந்த உறவைப் பலப்படுத்தி விடுகிறாள். இத்தகைய பேறு சுக்ரீவனுக்கோ, விபீஷணனுக்கோ கிடைக்கவில்லை. கிடைக்கவும் முடியாது. இதையெல்லாம் நோக்கும்போது உடன் பிறவாத் தம்பியரில் உயர்ந்த தம்பி யார் என்று இன்னும் பல சொல்ல வேண்டுமா என்ன?

# 4

# இராம சேவையில் தலை நின்றவர் யார்?

## இலக்குவனா?
## அனுமனா?
## விபீஷணனா?

இராம காதையில் ராமனை நடுநாயகமாக வைத்து மற்றப் பாத்திரங்கள் எல்லாம் அவனைச் சுற்றிச் சுற்றி வருவதையே பார்க்கிறோம். அமரர் பால் நாடார் அவர்கள் ஒரு தடவை சொன்னார்கள். 'இராமகாதையே ராமன் என்னும் ரவிகுல திலகனைச் சுற்றியே, எப்படி சூரியனைச் சுற்றி மற்ற கிரஹங்கள் சுழலுகின்றனவோ அப்படியே ராமனது சேவைக்கென்றே இலக்குவன், பரதன், சத்ருக்கனன் முதலிய தம்பியர் மாத்திரம் அல்ல குகன், சுக்ரீவன், அனுமன், விபீஷணன் முதலியோரும் படைக்கப்பட்டிருக்கின்றனரோ என்றே எண்ணத் தோன்றுகிறது. மக்கள், தேவர், வானரர் எல்லோருமே ராம கைங்கர்யத்தில் ஈடுபட்டு நிற்கின்றனர். இப்படி நிற்கின்றவர்களில் மூன்று பாத்திரங்களைத் தேர்ந்து எடுத்து அதில் சேவை செய்தவர்களில் சிறந்து நிற்பவர்

யார் என்று விவாதிப்பதற்கே இப்பட்டிமன்றம் கூடியிருக்கிறது. வழக்கம்போல் கட்சிக்கு மூன்று பேர் வாதமிட்டிருக்கின்றனர். எல்லோருமே கவிச்சக்கரவர்த்தி கம்பனது இராமாயணத்தை நன்கு கற்றவர்கள். அவரவர்கள் கட்சிக்கு நல்ல சான்றுகளைக் காட்டி வாதிட்டிருக்கின்றனர். கம்பனுமே கொஞ்சமும் வஞ்சகமில்லாமல் வேண்டும் சான்றுகளை ஒவ்வொரு வருக்குமே அள்ளி அள்ளித் தந்திருக்கிறான். இந்த வாதப்பிரதிவாதங்களையெல்லாம் கேட்டபின் இதில் தீர்ப்புக்கூறும் நிர்ப்பந்தம் எனக்கு நேர்ந்திருக்கிறது. கம்பன் துணை கொண்டே அத்தீர்ப்பைக் கூற முயல்கின்றேன் நான்.

முதலில் இம்மூவர் செய்த சேவையையும் கவிச் சக்கரவர்த்தி கம்பன் எவ்வாறு கூறுகின்றான் என்பதைப் பார்க்கலாம். இலக்குவன் ராமன் உடன் பிறந்தவன், ஒன்றாகவே வளர்ந்தவன். இளவயதிலிருந்தே அவனுடன் இணைபிரியாது வாழ்ந்தவன். விசுவாமித்திர முனிவர் அயோத்திக்கு வந்து தசரதனிடம் அவன் பிள்ளைகளில் 'கரியசெம்மல் ஒருவனைத் தந்திடுதி' என்றுதான் கேட்கிறார். ஆம், தன் வேள்விக்குப் பாதுகாப்பாக ராமன் ஒருவனே போதும் என்று எண்ணுகிறான் முனிவன். தசரதனும் ராமனை அனுப்ப இசைகிறான். அவனை அழைத்துவர ஆள் அனுப்புகிறான். ஆனால் ராமன் புறப்படும்போது ஒருவரும் ஏவாமலேயே இலக்குவனும் வில்லை ஏந்திக்கொண்டு புறப்படத் தயாராகி விடுகிறான்.

வந்த நம்பியைத் தம்பிதன்னோடும்
முந்தை நான் மறை முனிக்குக் காட்டி

முனிவருடன் இருவரையும் சேர்த்தே அனுப்பி வைக்கிறான் தசரதன். அன்றே தொடங்கிவிடுகிறது இலக்குவனது ராம சேவை. முனிவருடன் சென்று ராமன் தாடகையை வதைத்தபோதும், பின்னர் விசுவாமித்திர முனிவன் வேள்வி காத்தபோதும் உடன் இருந்து கண்ணினைக் காக்கின்ற இமையில் காக்கின்றான் இலக்குவன். சரி, மிதிலை சென்று ராமன் சீதையையும் இலக்குவன் ஊர்மிளையையும் மணந்து அயோத்தி திரும்புகின்றனர். பின்னர், கைகேயி தசரதனிடம் பெற்ற வரங்களால் ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள விட்டுவிட்டு, தாழிரு சடைகள் தாங்கி தாங்கரும் தவமேற்கொண்டு கானாளப் புறப்படுகின்றபோதும்; ராமனுக்கு முந்தியே காட்டுக்குப் புறப்பட்டு விடுகின்றான் இலக்குவன். தன்னுடைய தாய், தந்தை, தனயன், நாயகன் எல்லாம் அவனே என்னும்படி இலக்குவன் ராம சேவையில் ஈடுபடுகிறான்.

நல் தாதையும் நீ, தனி நாயகன் நீ,
வயிற்றில் பெற்றாயும் நீயே பிறரில்லை

என்று தானே அப்போது ராமனிடம் விண்ணப்பித்துக் கொள்கிறான் இலக்குவன்.

செல்லும் வழியிலே கங்கை குறுக்கிட்டால் குகன் தோணி கொண்டுவந்து அக்கரை சேர்க்கிறான். ஆனால் மேலும் நடக்கும்போது ஒரு கானாறு குறுக்கிடுகின்றது. அங்கு குகனைப்போல் ஒரு படகுடன் வேட்டுவத் தலைவன் காத்து நிற்கவில்லை. ஆற்றிலோ பெருவெள்ளம். ஆற்றைக் கடப்பது எப்படி என்று ராமன் அலமந்து நிற்கின்றபோது இலக்குவன் பக்கத்தில் உள்ள புதரிலிருந்து மூங்கில்களை வெட்டி அங்கு முளைத்துக்

கிடந்த கொடிகளால் ஒரு தெப்பமே கட்டி விடுகிறான். அந்தத் தெப்பத்தைத் தள்ளி அக்கரை கொண்டு சேர்க்க ஆள் இல்லை என்பதையும் கண்டு, அத்தெப்பத்தில் ராமனையும், சீதையையும் ஏற்றி தான் ஆற்றின் வெள்ளத்திலே நீந்திக்கொண்டு அத்தெப்பத்தை அக்கரை சேர்க்கிறான். இத்தனையையும் உடன் இருந்து கண்டவன்போல் கம்பனும் அழகாக சொல்லுகிறான் ஒரு பாட்டில்;

வாங்கு வேய்ங்கழை துணித்தனன்
 மாணையின் கொடியால்
ஓங்கு தெப்பம் ஒன்று அமைத்து
 அதன்மேல் உம்பரின் உலம்போல்
வீங்குதோள் அண்ணல் தேவியோடு
 இனிது வீற்றிருப்ப
நீங்கினான் அந்த நெடுநதி
 இருகையால் நீந்தி

என்பதுதானே கம்பசித்திரம். இப்படி எத்தனை எத்தனையோ சேவைகள்.

தண்டகாரண்யத்தில் பஞ்சவடி சென்று சேர்கிறார்கள் மூவரும். அங்கு ஒரு பர்ணசாலை கட்ட வேண்டியிருக்கிறது. இலக்குவனே அப்பணியையும் செய்து முடிககிறான். அவன் பர்ணசாலை கட்டும் அழகை கம்பன் மூன்று பாடல்களில் வர்ணிக்கிறான். மூங்கிலையும் நாணலின் புல்லையுமே கொண்டு காட்டுக் கொடிகளின் துணையுடன் எத்தனை அழகான பர்ணசாலையை, எவ்வளவு திறமையுடன் அமைக்கிறான் என்று கம்பன் விவரிக்கின்றபோது ‘அடடே இவன் ஒரு பெரிய இஞ்சினீயராகப் பிறக்க வேண்டியவன் அல்லவா என்று

எண்ணத் தோன்றுகிறது நமக்கு' ஆனால் நம்மையும் முந்திக்கொண்டு ராமன், 'தம்பி, நீ என்று கற்றனை இதுபோல் பர்ணசாலை கட்ட?' என்றே கேட்டு விடுகிறான்.

இராம சேவையில் இலக்குவன் மேலும் மேலும் உயர்ந்து விகசிக்கிறான். கங்கைக் கரையிலே ராமனும், சீதையும் துயிலும்போது, இரவு முழுவதும் விழித்திருந்து இலக்குவன் காவல் காத்த செயலை குகன் சொல்லிச் சொல்லி மகிழ்கிறானே!

அல்லையாண்டமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லையூன்றிய கையொடும்
வெய்துயிர்ப் பொடும் வீரன்
கல்லையாண்டமைந்த தோளாய்
கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பளவும் நின்றான்
இமைப்பிலன் நயனம்

என்று குக்ன் பரதனிடம் சொன்னதாகக் கம்பன் பாடிய பாடல்தான் பிரசித்தமான தாயிற்றே!

இன்னும் ராமன் சீதையைப் பிரிந்த பின்னர், அவனுக்கு வேண்டும் சிசுருஷைகளை எல்லாம் செய்து, அவனுடன் இலங்கைப் போர்க்களத்திற்கும் சென்று, அங்கு மிக்க வலியுடைய இந்திரசித்தனை நிகும்பலைப் போரில் வென்று அவன் உயிர் குடிக்கவும் துணை நிற்கிறானே. இந்திரசித்தன் தலையைக் கொண்டு வந்து ராமன் காலடியில், தம்பி இலக்குவன் போட்டதும், சிறையி லிருந்த சீதையையே மீட்டு விட்டதுபோல் குதூகலித் தானே ராமன்.

கம்பமதத்துக் களியானை
    காவல் சனகன் பெற்றெடுத்த
கொம்பும் என்பால் வந்து
    குறுகினன் நன்றெனக் குளிர்ந்தேன்
வம்புசெறி மலர்க் கோயில்
    மறையோன் படைத்த மாநிலத்தில்
தம்பி உடையான் பகை அஞ்சான்
    என்னும் மாற்றம் தந்தனையால்

என்று தன் தம்பியின் சேவையைக் காப்பியத் தலைவன் வாயாரப் போற்றுகின்றானே! இராவணனை வதம் செய்து வெற்றியோடு அயோத்தி திரும்பியபின் கம்பனுக்கே ஒரு ஐயம் எழுகிறது. காட்டிலே ராமனுடன் இருந்து சேவை செய்த இலக்குவன் நலிந்தது அதிகமா, இல்லை, நாட்டிலே தவமிருந்து உடல் நலிந்து நிற்கிறானே பரதன் அவன் வலிவு அதிகமா என்று எண்ணுகிறான்.

காடுறைந்து உலைந்த மெய்யோ
    கையறு கவலை கூறத்
நாடு உறைந்து உலைந்த மெய்யோ
    நைந்தது உலகம் நைய

என்றெல்லாம் பாடுகின்றபோது கம்பன் இலக்குவனது சேவையை எவ்வாறு போற்றுகின்றான் என்று சொல்லவா வேண்டும். இலக்குவன் கட்சியில் நின்று பேசியவர்கள் இத்தனை சான்றையும் இன்னும் இதற்கு மேலும் கூறி வாதிட்டிருக்கிறார்கள்.

அனுமன் ராமனுடன் இடைவழியில் வந்து சேர்கின்றவனே. கிஷ்கிந்தையில்தான் அவன் ராமனைக் காண்கிறான்; கண்டது முதல் இராமசேவையில் ஈடுபட்டு

நிற்கிறான். அவனைக் கண்ட உடனேயே அவன் பெருமை களை எல்லாம் தெரிந்து கொள்கிறான் ராமன்.

"இல்லாத உலகத்து எங்கும்
இங்கிவன் இசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே"
என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்று அன்றே?
யார் கொல் இச்சொல்லின் செல்வன்.

என்று ஒரு நல்ல பட்டமே கட்டி அவனைப் பாராட்டுகிறான். அதன்பின் நம்பிக்கையான சேவைக்கு ஏற்றவன் அவனே என்று கண்டு சீதையைத் தேடும் பணியில் முக்கியமான பங்கை அவனுக்கே கொடுக் கிறான். அவன் சீதையைக் கட்டாயம் கண்டு வருவான் என்ற நம்பிக்கையில்தான், அவனிடம் கணையாழி யையும் கொடுத்து அனுப்புகிறான். சீதையைக் கட்டாயம் 'கண்டு வருவான்' என்று காகுத்தன் நினைத்தான். 'கண்டு விட்டால் கொண்டே வந்து விடுவான்" என்று அவன் பூரண ஆற்றலையும் அறிந்த சுக்ரீவனும் எண்ணுகிறான்.

இந்த அனுமன் கடல் கடக்கிறான். இலங்கை செல் கிறான். அசோக வனத்திலும் நுழைகிறான். சீதையைக் காண்கிறான். அவளிடம்தான் தன்னை ஒரு சேவகன் என்றே அழகாக அறிமுகப்படுத்திக் கொள்கிறான்.

இலங்கையில் ராமன் ராவணனுடன் ஏற்றிருந்த போரில்தான் இந்த அனுமன் எவ்வளவு சேவை செய்தி ருக்கிறான். இந்திரசித்தன் ஏவிய பிரமாத்திரத்தால் ராமன் இலக்குவன் உள்பட எல்லா வானர வீரர்களும் கட்டுப்பட்டுக் கிடந்தபோது திரும்பவும் பாரதத்திற்கே தாவி வந்து மருத்துவ மலையையே வேரொடும்

பெயர்த்து எடுத்துக் கொண்டு சென்று அவர்களுக்கு எல்லாம் புத்துயிர் கொடுத்திருக்கிறானே. அதனால்தானே ராமனும் அனுமனைத் தன் தந்தையாகவே மதித்து பாராட்டுகிறான்.

மண்ணில் தோன்றினோம், முன்னர்
மாண்டு போய்
நின்னில் தோன்றிய நெறியில்
தோன்றினோம்

என்று தன்னை இப்போது பெற்றெடுத்தவன் அனுமனே என்றல்லவா ஒப்புக் கொள்கிறான். இப்படி எல்லாம் அரிய சேவை செய்தவனுக்கு 'நித்யத்வம்' வழங்கி என்றும் சிரஞ்சீவியாகவே வாழ வைத்து விடுகிறானே! இதை எல்லாம் எடுத்துக் காட்டி வாதாடினார்கள் அனுமன் கட்சியார்.

வீடணன் கட்சியாரும் சளைக்கவில்லை. ஏதோ கடைசிக் காலத்தில்தான் வீடணன் ராமனோடு வந்து சேர்கிறான் என்றாலும், இராமசேவையில் அவன் யாருக்கும் குறைந்தவனாக இல்லை. இராவணனுடைய கடைசித் தம்பி வீடணன், அரக்கர் குலத்தில் பிறந்தவனானாலும் அந்தணனாகவே வாழ்ந்தவன். இலங்கையில் புகுந்து சீதையைத் தேடிவரும் அனுமன் வீடணன் மனை புகுந்தபோது, அவனை

வேந்தர், வேதியர் மேல் உளோர்
கீழ் உளோர் விரும்பப்
போந்த புண்ணியனாகவே

காண்கின்றான். பின்னர் அவனை அனுமனே 'குற்றம் இல்லது ஓர் குணத்தினன் இவன்' என்றே பாராட்டும்

பேறு பெறுகிறான். அந்த வீடணனது மகளாகிய திரிசடையே அசோகவனத்தில் சீதைக்கு உற்ற தோழியாக இருந்து சேவை செய்கிறாள். இந்த வீடணனுக்கு தன் அண்ணனிடம் அபிமானம் இருந்தாலும் அவன் செய்யும் செயலுக்கு உடனாகி இருக்க முடியவில்லை. இராவணன் சீதையைக் கவர்ந்து வந்து அசோகவனத்தில் சிறை வைத்திருப்பதைச் சமயம் வாய்க்கும் போதெல்லாம் கண்டிக்கிறான்.

இசையும் செல்வமும் உயர்
குலத்து இயற்கையும் எஞ்ச
வசையும் கீழ்மையும் மீக்கொள
கிளையொடும் மடியாது
அசைவு இல் கற்பின்
அவ் வணங்கை விட்டு அருளாதி

என்றே உபதேசிக்கிறான். இந்த அறிவுரைகளை எல்லாம் 'பிச்சர் சொல்லுவ சொல்லினை' என்று இராவணன் ஒதுக்கி விட்டு வீடணனை விரட்டியபோது அதற்குமேல் இராவணனுடன் இருந்து பயனில்லை என்று கருதி ராமனிடம் சென்று சரணாகதி அடைகின்றான். அடைக்கலம் என்று வந்த வீடணனை ராமனும் ஏற்று அருள்புரிகின்றான். அது முதல் இராம சேவையிலேயே கழிக்கின்றான் வீடணன். இரத்த பாசத்தையெல்லாம் ஒதுக்கி விட்டு இராம சேவையிலேயே ஈடுபடுகிறான். நீதியால் வந்த நெடுந் தரும நெறியெல்லால் சதியால் வந்த சிறு நெறியை அறியாதவனாகவே வாழ்கிறான். அரக்கர் செய்யும் மாயங்களை எல்லாம் ராமனுக்கு எடுத்துச் சொல்கிறான். நிகும்பலை யாகம் செய்யும் இந்திரசித்தனது மாயைகளை எல்லாம் வென்று இலக்குவன் இந்திரசித்தனை முடிப்பதற்குப்

பெரிதும் உதவுகின்றான். இதனால் அன்றோ, இந்திர சித்தனை வதைத்த இலக்குவனைப் பார்த்து 'இது வீடணன் தந்த வெற்றி' - என்றே பாராட்டி மகிழ்கிறான் ராமன். இப்படி எல்லாம் வீடணன் இராமசேவையில் திளைக்கிறான் என்பது வீடணன் கட்சியார் வாதம்.

பார்க்கப் போனால், இலக்குவன், அனுமன், வீடணன் மூவருமே இராமசேவையில் சிறந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். என்றாலும், இந்த மூவருள்ளும் எவரது சேவை மிக மிக உயர்ந்தது என்று தீர்மானிப்பதே இப்பட்டிமன்றத்தின் குறிக்கோள்.

சேவை செய்வதிலே, சேவை செய்கிறோம் என்ற உணர்ச்சியே இல்லாமல் சேவை செய்வதுதான் உயர்ந்த சேவையாகக் கருதப்படும். மேலும் சேவைக்காகவே வாழ்கிற மனநிலை உடையவராக இருப்பவரே சிறந்த சேவை செய்பவர் என்று கருதப்படுவர். இந்த உரைகல்லை வைத்துக் கொண்டு இந்த மூவர் சேவை யையும் எடை போட்டுப் பார்க்கலாம். வீடணன் இராம சேவையில் ஈடுபடுமுன் இராவண சேவையில் இருந்த வன். இராவணன் தவறு செயகிறான் என்று தெரிந்த பின்னரே அவன் அவனை விட்டு விட்டு ராமனிடம் ஓடுகிறான்.

இராவணன் இந்திரசித்து முதலிய அரக்கர் செய்யும் மாயங்களை எல்லாம் எடுத்துக் கூறுகிறான்.ஒருக்கால் ராமன் ஏதாவது தப்புத் தவறுகள் செய்து விட்டால் அவனையும் விட்டு ஓடத் தயாராகவே இருப்பவன் அவன். சேவை அவனது லட்சியம் அன்று. நீதியால் வந்த நெடுந்தரும நெறியிலே நிற்பதே லட்சியம். அரச குடும்பத்தில் மூவுலகாளும் இலங்கேஸ்வரன் தம்பியாகப்

பிறந்த அவனிடம் சேவை செய்யும் உணர்ச்சி இல்லை. இருக்கிற சூழ்நிலையில் இராமசேவை செய்வதே தான் உய்வதற்கு வழி என்று கருதுகிறான். அப்படி சேவை செய்வதன் மூலம் இலங்கை அரசை விடப் பெரிய அரசான வீட்டரசு கிடைக்கும் என நினைக்கிறான். அதற்காகவே ராமனிடம் வந்து அடைக்கலம் புகுகின்றான். ஆதலால் இராம சேவையில் அவன் தலை நின்றவன் என்று கூறுதல் இயலாது. ஆதலால் விவாதத்திலிருந்து முதலில் அவனை விலக்கி விடலாம்.

அனுமனும் இலக்குவனும் தன்னலமற்ற சேவை செய்தவர்கள்தாம். அனுமன் என்ற ஒருவன் இல்லா விட்டால் ராமன் இராவணனை வெற்றி கண்டிருப்பானா என்பதே சந்தேகம்தான். என்றாலும், 'தான் சேவை செய்யப் பிறந்தவன்' என்ற எண்ணமும் உணர்வும் அவனிடம் இருக்கிறது. அதை வாய்விட்டு விளம்பரப்படுத்திக் கொள்ளவும் செய்கிறான்.

வண்ணக் கடலின் கிடைகிடந்த
மணலின் பலரால் வானரங்கள்
எண்ணற்கு அரிய படைத்தலைவர்
இராமற்கு அடியார், யான் அவர்தம்
பண்ணைக்கு ஒருவன் எனப் போந்தேன்
ஏவல் கூவல் பணி செய்வேன்.

என்றே தன்னைச் சீதையிடம் அறிமுகப்படுத்திக் கொள்கிறான். நான் இராமசேவை செய்கிறவன் என்பதிலேயே பெருமை கொள்கிறவனாக வாழ்கிறான் அவன்.

ஆனால் இலக்குவனோ தம்பி என்னும் படிக்கு அன்றி அடியாரின் ஏவல் செய்கிறான். சேவை செய்கிறோம் என்னும் உணர்வே அற்று, சேவையிலேயே ஒன்றி

விடுகிறான். கங்கைக் கரையில் ராமனும் சீதையும் படுத்துத் தூங்கினாலும் சரி, இல்லை பஞ்சவடிப் பர்ண சாலையில் இருந்தாலும் சரி, வில்லை ஊன்றிய கையொடும் வெய்துயிர்ப்பொடும் கங்குல் எல்லை காண்பளவும் நின்று காவல் புரிந்து தொண்டு செய்கிறான். ஆற்றைக் கடக்க வேண்டுமா? இல்லை பர்ணசாலை கட்ட வேண்டுமா? இல்லை, பகைவர்களை முடித்து வெற்றி சூடவேண்டுமா? எல்லா சேவையையும் சேவை செய்கிறோம் என்ற உணர்வே இல்லாமல், கர்மமே கண்ணாக இருந்து செய்கிறான். தான் செய்கிற பணியை எல்லாம் பிறர் அறிய வேண்டும் என்று விளம்பரப்படுத்திக் கொள்வதுமில்லை. சித்திரகூடத்தில் இலக்குவன் பர்ணசாலை கட்டியதும் ராமன் அதைக் கண்டு,

'குன்றுபோலக் குவ்விய தோளினாய்
என்று கற்றனை நீ இதுபோல்'

என்று கண்ணீரே வடித்து விடுகிறான். இலக்குவனது சேவையை ராமன் எப்படி மதிக்கிறான் என்பதை,

'மேவுகானம் மிதிலையர் கோன்மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன
தா இல் எம்பிகை சாலை சமைத்தன
யாவை யாதும் இலர்க்கு இயையாதவே

என்று பாராட்டுவது ஒன்றே போதுமே, இராம சேவையில் தலை நின்றவன் இலக்குவனே என்பதற்கு. அவனைத் தானே வைஷ்ணவப் பெரியோர்களும் 'கைங்கர்ய லட்சுமி' என்று பாராட்டுகிறார்கள். ஆதலால் ராமசேவையில் தலை நின்றவன் இலக்குவனே என்று தீர்ப்புக் கூறுகிறேன் நான்.

# 5

# தாயன்பில் தலை நின்றவர் யார்?

## கோசலையா?
## கைகேயியா?
## சுமத்திரையா?

இன்று இந்த பட்டிமன்றத்தில் கலந்துகொள்ள ஆறு தாய்மார்களும் பன்னிரெண்டு தந்தைமார்களும் வந்திருக்கின்றனர். உண்மையிலேயே தாயன்பைப்பற்றிப் பேசத் தகுதி உடையவர்கள் தாய்மார்களே. தந்தை மாரோ ஏதோ 'வந்தோம் போனோம்' என்ற அளவில்தான் விவாதத்தில் கலந்து கொள்ளக்கூடும். பத்து மாதம் தன் வயிற்றில் சுமந்து பெற்ற தாய்மார்க்குத்தானே தெரியும் தன் குழந்தையின் அருமை. ஆதலால் தன் குழந்தை களிடம் அன்பு செலுத்தாத தாயார் உலகிலேயே இருத்தல் இயலாது. அழகற்ற குழந்தையாகவோ, அறிவற்ற குழந்தையாகவோ, இல்லை உடலிலோ உள்ளத்திலோ ஊனம் உற்ற குழந்தையாக இருந்தாலும் பெற்ற தாய்க்கு அதனிடம் அன்பு இருக்கத்தான் செய்யும். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதுதானே பழமொழி.

கவிச்சக்கரவர்த்தி கம்பனது காவியத்தில் வருகின்ற தாயர் பலர். ராமன், இலக்குவன், பரதன், சத்ருக்கனன்

என்ற நால்வரையும் பெற்றெடுத்த தாய் மூவர். இந்திரசித்தனைப் பெற்றெடுத்த தாய் மண்டோதரி, அங்கதனைப் பெற்றெடுத்த தாய் தாரை - என்று ஐந்து தாயார்களைப் பற்றியும் கம்பன் பேசி இருக்கிறான். என்றாலும் இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டவர்கள் சக்கரவர்த்தி தசரதனது மனைவியர். ராமனையும் அவன் சகோதரர்களையும் பெற்றெடுத்த தாயாராம் கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற மூவருமே. இதில் ஒரு சிறப்பு என்ன என்றால் இந்த மூவரும் ஒரு கணவனின் மனைவியராக இருந்தவர்கள். இவர்கள் எல்லாம் சக்களத்திகள். இவர்கள் மூவரும் தன் பிள்ளை வேறு, தன் சக்களத்திப் பிள்ளை வேறு என்ற உணர்ச்சியில்லாமல் அன்பு காட்டிய தாயர். நமக்குத் தெரியும் இவ்வுலகில் மாற்றாந் தாயார் தம் மூத்தாளின் பிள்ளைகளிடம் எவ்வளவு கொடுமையாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று. அப்படி இருக்கும்போது இந்தத் தாயார் மூவரும் தன் பிள்ளைகளிடம் காட்டிய அன்பைவிட அதிகமான அன்பையே தன் மாற்றாளின் பிள்ளைகளிடமும் காட்டி வந்திருக்கிறார்கள் என்று கம்பன் காவியம் எழுதுகிறபோது, அந்தத் தாயன்பு யாரிடத்தில் மிகவும் சிறந்து விளங்குகிறது என்று விவாதித்து முடிவு கட்டுவது சிறப்பான ஒன்றல்லவா?

பதினெட்டுப் பேர் இந்தத் தாயாரின் தன்மைகளை எல்லாம் எடுத்துக் கூறினார்கள். கோசலை கட்சியில் வாதித்தவர் அவள் ராமனிடம் காட்டிய அன்பை விடப் பரதனிடமே அதிகம் அன்பு காட்டுகிறாள் என்று குறிப்பிட்டார். பரதன் பிறந்ததுதான் கைகேயி வயிற்றில், அவர் வளர்ந்ததெல்லாம் கோசலை மடியில் என்றுதானே கவிஞன் கூறுகிறான். அதனால், தான் பெற்ற ராமனிடத்து

அன்பு செலுத்தவும் அவள் தவறவில்லையே. தன் மகன் ராமனுக்குப் பட்டம் என்று கேள்விப்பட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறாள். தனக்கு அந்த நற்செய்தியைச் சொன்னவர் களுக்கு எல்லாம் வெகுமதிகள் அளிக்கிறாள். சுமித்திரை யையும் உடன் கூட்டிக்கொண்டு கோயிலுக்குச் சென்று திருமாலை வணங்குகிறாள். 'என் வயின் தரும் மைந்தர்க்கு இனி அருள் உன் வயத்தது' என்று பிரார்த்தித்துக் கொள்கிறாள். இப்படி ராமன் முடிசூடும் நிகழ்ச்சியை மிக்க மகிழ்ச்சியோடு எதிர் நோக்கிக் கொண்டிருந்த கோசலை முன், மறுநாள், முடிசூடுதல் தடைப்பட்டு தனியனாய் ராமன் வருகின்றான். அவன் வருகின்ற கோலத்தை,

குழைக்கின்ற கவரி இன்றிக்
  கொற்ற வெண் குடையும் இன்றி
இழைக்கின்ற விதி முன் செல்ல
  தருமம் பின் இரங்கி ஏங்க
மழைக் குன்றம் அனையான் மௌலி
  கவித்தனன் வரும் என்று
தழைக்கின்ற உள்ளத் தன்னாள்
  முன் ஒரு தமியன் சென்றான்

என்று கம்பன் பாடுகிறான். கிரீடம் சூடாத தலை யொடும், மஞ்சனப் புனித நீராட்டப்படாத சிகையொடும் வரும் மகனைக் கண்டு துணுக்கம் உறுகிறாள். நடந்தது என்ன? நெடுமுடி புனைதற்கு ஏதாவது இடையூறு நிகழ்ந்ததா? என்று மிக்க ஆதங்கத்தோடேயே கேட்கிறாள். காவிய நாயகனான ராமனும் மிகவும் பக்குவமாக "அம்மா! ஒன்றும் இல்லை - நின் காதல் திருமகன் பங்கமில் குணத்து எம்பி பரதனே துங்கமா முடி

சூடுகின்றான்'' - என்கிறான். இதைக் கேட்டதும் தன் மகன் ராமனுக்குப் பட்டம் இல்லை என்பது தெளிவாகி விடுகிறது கோசலைக்கு. இதனால் அவள் அதிர்ச்சி அடையவில்லை. ஏதோ வழிவழியாக மன்னர் பரம்பரையில் தலைமகனே பட்டம் சூடுவது என்பதுதான் முறையாக இருந்திருக்கிறது. இந்த முறை தவறினாலும் பரவாயில்லை. உன்னை விட நல்ல குணசாலியும் நிறை குணமும் உடைய பரதன்தானே முடி சூடுகின்றான் என்று சொல்லி ராமனையே தேற்ற முனைகிறாள். இதைச் சொல்லும் கம்பன் கோசலைக்குத் தன் பிள்ளை வேறு, மாற்றான் பிள்ளைகள் வேறு என்பது தெரியும். என்றாலும் அந்த வேற்றுமை உணர்வு தன் உள்ளத்தில் வேர் ஊன்றாதபடி ஆற்றல்சால் கோசலை தன் அறிவின் திறத்தாலே அந்த வேற்றுமையை மாற்றுகிறாள் என்கிறான்-

முறைமை அன்று என்பது
ஒன்று உண்டு - அதல்லது
நிறை குணத்தவன்
நின்னிலும் நல்லன்
குறைவு இலன் எனக்
கூறினாள் நால்வர்க்கும்
மறுஇல் அன்பினில்
வேற்றுமை மாற்றினாள்.

என்பது கம்பன் பாடல். இப்படியெல்லாம் நிறைந்த பண்புடையவளாக இருந்த கோசலை தன் மகன் ராமன் காடு செல்கிறான் என்று கேட்டதும் துடிதுடித்துப் போகிறாள்.

வஞ்சமோ மகனே! உனை மாநிலம்
தஞ்சமாக நீ தாங்கு என்ற வாசகம்

என்று குமுறுகிறாள். கடைசியில் தன் மகன் சுட்டிக் காட்டியபடி ராமனது பிரிவினில் வருந்தும் தசரதனைத் தேற்றுவதற்காகவே அயோத்தியில் தங்கியிருக்க உடன்படுகிறாள். இத்தனையும் அவள் தாயன்பை விளக்கவில்லையா?

இன்னும் தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னை தீவினை என்ன ஒதுக்கிவிட்டு காட்டிற்குச் சென்ற ராமனை மீட்டும் நாட்டிற்குக் கொண்டுவர பரதன் காடு செல்லும்போது கோசலையும் உடன் செல்கிறாள். கங்கைக் கரையில் இருந்த குகனை, பரதன், ''இராக வனுக்கு இன்துணைவன், இலக்குவதற்கும் இளைய வர்க்கும் எனக்கும் மூத்தான்'' - என்று அறிமுகப் படுத்தியபோது அவனையுமே தன்னுடைய மகனாக ஏற்று ''நைவீரலீர் மைந்தீர்! இனி இந்தக் குகனையும் சேர்த்துக்கொண்டு நீங்கள் ஐந்து சகோதரர்களாக வாழுங்கள்'' என்று ஆசி கூறுகிறாள். இப்படியெல்லாம் ராமன் மீது மாத்திரம் அல்ல பரதன், இலக்குவன், குகன் முதலியோரிடம் தாயன்பு காட்டும் தாயாக காவியத்தில் உலா வருகிறாள் கோசலை - என்பது கோசலை கட்சியாரது வாதம்.

கைகேயி வான்மீகரது காவியப்படி தசரதனுடைய மூன்றாவது மனைவி. பிள்ளைப்பேறு இல்லாதிருந்த தசரதன் கேகய மன்னனை அடுத்து அவன் மகளாகிய கைகேயியை மணம் பேசுகின்றான். அப்போது அவள் வயிற்றில் பிறக்கும் மகனுக்கே பட்டம் என்று வாக்களிக்கிறான். இதுவே அவனது சுல்கமாக இருக்கிறது. கவிச்சக்ரவர்த்தி கம்பன் கைகேயியைத் தசரதனது இரண்டாவது மனைவியாக்குகிறான். சுல்கத்தைப் பற்றி

ஒன்றும் குறிக்கவில்லை என்றாலும் கைகேயியை நிறைந்த தாயன்பு உடையவளாகவே சித்திரித்திருக் கிறான். ராமன் கோசலை வயிற்றில் பிறந்தாலும் வளர்ந்ததெல்லாம் கைகேயி இடத்தில்தான். இவளும் கோசலையைப் போல மாற்றாளின் மகன், தன் மகன் என்ற வேற்றுமை இல்லாமலேயே எல்லோரிடத்தும் அன்பு காட்டியவள். கோசலை வேற்றுமையை உணர்ந்தாலும் தன் அறிவாற்றலால் அந்த வேற்றுமையை மாற்றத் தெரிந்திருந்தாள். கைகேயியோ, அந்த வேற்றுமையையே உணராதவளாகவே இருக்கிறாள். அதானல்தான் அவள் 'வேற்றுமை உற்றிலன்' என்று கம்பன் அவளுக்கு ஏற்றம் கொடுக்கிறான். ராமனுக்குப் பட்டம் என்றறிந்த மந்தரை அதைத் தடுக்க கைகேயியை அணுகுகிறாள். தூங்குகின்ற கைகேயியை எழுப்புகிறாள். 'உனக்கு இடர் வருகிறது' என்றாள். அப்போது கைகேயி பேசுகிறாள்.

தெவ்வடு சிலைக்கை என்
  சிறுவர் செவ்வியர்
அவ்வவர் துறை தொறும்
  அறம் திறம்பலர்
எவ்விடர் எனக்கு வந்து
  அடுப்பது ஈங்கு!

என்றும்,

விராவரும் புவிக்கெலாம்
  வேதமே யன
இராமனைப் பயந்த எற்கு
  இடர் உண்டோ?

என்றும் பேசுகிறான். ''என் பிள்ளைகள் எல்லோருமே நல்லவர்கள்'' என்று வேற்றுமை காட்டாது பேசியதுடன்

"ராமனைப் பெற்ற தாயாகிய எனக்கு இடர் வருமோ" - என்று பேசும்போது தாயன்பில் சிறந்தவளாகக் காணப் படுகிறாள்.

இப்படி அன்பு காட்டிய தாய்தானே ராமனைக் காட்டிற்கு அனுப்பவும் முனைகிறாள் என்று குறை கூறுவோர்க்கு அது இராமாவதார ரகசியம். ராமன் பிறந்ததே அரக்கர்களை அழிக்கத்தானே? அதற்கு ராமன் காட்டிற்குப் போய்த்தானே ஆக வேண்டும். அரக்கர் செய்த பாவமும், நல்லவர்கள் செய்த தவமுமே சதி செய்து அவளை இப்படி ஒரு காரியம் செய்யத் தூண்டி யிருக்கின்றன. இதைத்தானே கம்பன்,

அரக்கர் பாவமும் அல்லவர்
இயற்றிய அறமும்
துரக்க, நல் அருள் துறந்தனள்
தூமொழி மடமான்

என்று கூறுகிறான். இந்த ஒரே காரியத்தால் அவள் தாயன்பு இல்லாதவள் ஆகிவிட மாட்டாள். சிறையிருந்த சீதையை மீட்டுவரும் ராமனும் விண்ணுலகில் இருந்து இழிந்து வந்த தந்தையிடம்,

தீயள் என்று நீ துறந்த
என் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்
வரம் தருக

என்று தானே வேண்டுகிறான். இப்படி காவிய நாயகனான ராமனாலேயே என் தெய்வம் என்று போற்றத் தகுந்த கைகேயியே தாயன்பில் சிறந்தவள் என்பது கைகேயி கட்சியினர் வாதம்.

மூன்றாவதாக வரும் சுமித்திரை கம்பனது காவியத்தில் தசரதனது மூன்றாவது மனைவியாக, இளைய மென் கொடியாக இருக்கிறாள். மற்ற இருவரும் ஒவ்வொரு பிள்ளையையே பெற இவள் மட்டும் இலக்குவன், சத்ருக்கனன் என்று இரண்டு புதல்வர்களைப் பெறுகிறாள். பெற்றாளே தவிர அவர்களை வளர்க்கவில்லை. இலக்குவனை ராமன் துணைவனாகவும், சத்ருக்கனனை பரதன் துணைவனாகவும் வளரும்படி விட்டு விடுகிறாள். இவளுக்கு ராமனிடத்து அன்பு அபரிமிதமாகவே இருக்கிறது. அதனால் ராமன் காட்டுக்குச் செல்லுகிறான் என்றபோது, தன் மகன் இலக்குவனையும் அவனுடன் அனுப்பத் துணிகிறாள். அத்தோடு 'இனி ராமன் இருக்குமிடமே அயோத்தி - ராமனே உனது தந்தை, சீதையே உன் தாய் என்றும் கூறுகிறாள். இத்துடன் நில்லாது

பின்னும் பகர்வாள், மகனே
இவன் பின் செல், தம்பி
என்னும் படிக் கன்று
அடியாரின் ஏவல் செய்தி
மன்னும் நகர்க்கே இவன்
வந்திடில் வா – அது அன்றேல்
முன்னம் முடி, என்றனள்
வாள் விழி சோர நின்றாள்

என்று கம்பர் பாடுவதிலிருந்து அவள் தாயன்பு எப்படித் தலையாய அன்பு என்று தெரிந்து கொள்ள லாமே. அதனால் தானே கங்கைக் கரையில் குகனும், 'அன்பின் நிறைந்தாளை உரை' என்று பரதனிடம் கேட்கிறான். இதனால் சுமித்திரையே தாயன்பில் சிறந்த வள் என்பது சுமித்திரை கட்சியார் வாதம்.

இம்மூன்று கட்சியாரது வாதத்தைக் கேட்டபின் அவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக்காட்டும் சான்றுகளைப் பார்த்தபின் அவரவர் கட்சிக்கே பலம் அதிகம் என்று தோன்றும். சிலர் வாதித்தபடி தன் சொந்தக் குழந்தைகளிடம் காட்டுகிற அன்பே அன்பு. மாற்றாள் மகனிடம் காட்டுகிற அன்பு உண்மையான அன்பல்ல என்ற வாதத்தை நான் ஏற்கத் தயாராக இல்லை. உண்மையிலே இப்படி தன் மகன், மாற்றாள் மகன் என்ற வேற்றுமையே இல்லாத அன்பு காட்டுகிற தாயர் மூவரை உருவாக்கிய பெருமை கம்பனுக்குத்தான் உண்டு.

ஆனால் விவாதத்துக்கு எடுத்துக்கொண்ட பொருள் தாயன்பில் தலை நின்றவர் யார் என்பது. மூவரும் தாயன்புடையவர்கள்தாம் என்றாலும் கைகேயியின் அன்பு நிலைத்த அன்பாக இருக்கக் காணோம். கைகேயி ராமனைத் தன் மகனாகவே கருதுகிறாள். அவனை மகனாகப் பெற்றதில் பெருமிதமே கொள்ளுகிறாள் என்றாலும், கூனி என்னும் ஒரு சேடி அந்த அன்பைக் கலைக்கும் அளவுக்கு ஆழ்ந்த அன்பு இல்லாதவளாகி விடுகிறாள். தெய்வக் கற்பினாள் என்று போற்றப்படும் அவளே சூழ்நிலை காரணமாகத் தன் அன்பை எல்லாம் மறந்து தன் கணவனிடம் வாதாடி வரம்பெற்று ராமனைக் காட்டிற்கு அனுப்பிவிடுகிறாள். இந்த நிகழ்ச்சிக்கு முன்வரை அவளைப் புகழ்ந்து கொண்டே வந்த கம்பன் அவளை 'இரக்கம் இலாள்' இடரிலா முகத்தாள் - 'தீயவை யாவினும் சிறந்த தீயாள்' என்றெல்லாம் திட்டித் தீர்க்கிறான். 'படரெலாம் படைத்தாள், பழி வளர்க்கும் செவிலி' என்று தன் மகனான பரதனும் இகழ்ந்து பேசும் வண்ணம் செய்து விடுகிறாள். ராமன்பேரில் உள்ள அன்பை மட்டுமா துறந்து நிற்கிறாள், தன் மகன் பரதனுக்கு தீராத பழி தரும் காரியத்தையல்லவா செய்து

விடுகிறாள். தன் கணவன் உயிரையும் குடிக்கும் காலனாக மாறுகிறாள். இத்தகைய தாயை, தாயன்பில் தலை நின்றவள் என்று கூறுவது எங்ஙனம்?

இனி சுமித்திரையைப் பார்க்கலாம். அவள் கட்சியில் நின்று பேசிய ஒரு பெண்மணி சொன்னதுபோல அவளு டைய பெருமை எல்லாம் இரண்டு 'கப்' பாயசம் குடித்து இரண்டு பிள்ளையைப் பெற்றதோடு சரி என்று அமைந்து விடுகிறது. அவள் தன் மக்களிடமோ, மற்றவர்களிடமோ அன்பு காட்டியதற்கு சான்றுகள் ஒன்றுமே கம்பன் தரவில்லை. அவதார மூர்த்தியாகிய ராமனின் சேவகனாக தன் மகன் இருந்து புகழ் பெற்றால் போதும் என்று நினைக்கிறாள். இராம சேவையில் உள்ள காதலால், தன் மகன் இலக்குவன் ராமன் இறப்பதற்கு முன்னரே இறந்து விட வேண்டும் என்று கூட விரும்பு கிறாள். இப்படி விரும்பும் சுமித்திரையை, உயர்ந்த பண்பும் தியாக புத்தியையும் உடையவள் என்று பாராட்டலாம். ஆனால் தாயன்பு உடையவள் என்று பாராட்ட முடியுமா என்ன?

தசரதனது முதல் தேவியான கோசலை தாயன்பிலும் முதல் ஸ்தானத்தைப் பெற்றவளாகவே நிற்கிறாள். அவளைப்பற்றி கவிச்சக்ரவர்த்தி கம்பன் பேசுகின்ற போதெல்லாம் நிறைந்த மொழியாலேயே பேசுகிறான். கொண்டல் வண்ணனாம் ராமனை நல்கியவள் அல்லவா அவள். உலகம் யாவையும் தன் வயிற்றில் அடக்கிய மாயனைத் தன் வயிற்றில் அடக்கும் தவத்தினள் ஆயிற்றே. மூன்றுலகம் ஈன்றானை முன்னீன்ற பேறு அவளுக்குத் தானே வாய்க்கிறது. இத்தோடு கோக்கள் வைகும் முற்றத்தாளான தசரதச் சக்கரவர்த்தியின் முதல் தேவி. இவள் ஆற்றல்சால் கோசலையாக, அன்புத் தாயாக உருவாகிறாள். அவளது அன்பு அறிவோடு கலந்த அன்பு.

அதனால்தான் தன் மகன் மாற்றான் மகன் என்றெல்லாம் வேற்றுமையை உணர்ந்தவளாயிருந்தும், அவ்வேற்று மையை எல்லாம் மாற்றி அந்த அன்பில் நிலைத்து நிற்க வும் அறிந்திருந்தாள். கைகேயியைப்போல, வேற்று மையை உணராதவளாக வாழ்ந்து பின்னர் ஒரு சேடியின் சூழ்ச்சியினால் நிலை தடுமாறித் தவிக்காத வளாக இருக்கிறாள். ராமன் காடு சென்றபின் அயோத்தி வந்த பரதனை முதன் முதல் கண்டபோது, அவனும் அவன் தாயின் சதிக்கு உடந்தையாக இருந்திருப்பானோ என்று சந்தேகிப்பதில் அவள் தாயன்பு நிலை தடுமாறு கிறதே, என்று கேட்கலாம். அங்கு அவள் பேசுவது எல்லாம் ''கேகயர் கோமகள் இழைத்த கைதவம் ஐய! நீ அறிந்திலைபோதும்!'' - என்ற கூற்றுத்தான். இதன் மூலம், கோசலை கண நேரத்திற்குப் பரதனையும் சந்தேகிககிறாள் என்று ஊகிக்க முடிகிறதே தவிர அப்படியே சந்தேகித்தாள் என்று உறுதியாகக் கூற முடியவில்லை-ஏதோ தகவல் அறியக் கேட்ட கேள்வியாகவும் இருக்கலாம் தானே?

இந்த ஒரு இடத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் அவள் பரதனைக் குறை கூறியதாகக் கம்பன் குறிக்கவே யில்லை. ராமனிடத்தும், பரதனிடத்தும், ஏன் இலக்கு வனிடத்தும் ஒரே தன்மையான அன்பு காட்டியவளாக அமைகிறாள். கடைசியில் ராமன் குறித்த காலத்தில் வராதது கண்டு தீக்குளிக்க நின்ற பரதனைப் பார்த்து, ''எண்ணில் கோடி ராமர்கள் எண்ணிலும் அண்ணல் நின் அருளுக்கு அருகாவரோ'' என்று கூறுகின்றாளே, அது ஒன்றே அவளை விண்ணுக்கு உயர்த்திவிடுகிறதே! அவள் தாயன்பே ஆரம்பம் முதல் கடைசிவரை நிலைத்து நின்று ஒளி வீசிய தாயன்பு. ஆம். தாயன்பில் தலை நின்றவள் கோசலையே என்று தீர்ப்புக் கூறி அமைதி பெறுகின்றேன்.

# 6

# கம்பனில் மேலோங்கி நிற்கும் பண்பு

## புத்திர வாஞ்சையா?
## சகோதர பாசமா?
## பதி பக்தியா?

இன்றைய பட்டிமன்றத்திற்கு உரியபொருள் கம்பனில் மேலோங்கி நிற்கும் பண்பு புத்திர வாஞ்சையா? சகோதர பாசமா? பதி பக்தியா? என்பதாகும். பண்பு என்றால் என்ன? வள்ளுவர் தந்த திருக்குறளில் பண் புடைமை என்று ஒரு அதிகாரம் இருக்கிறது. இதற்கு உரை கூறும்போது 'பண்புடையவராக வாழும் நல்வழி' என்றே கூறினார் ஆங்கில அறிஞரான டாக்டர் ஜி.யு.போப். இந்தப் பண்புடைமையை விளக்குதல் எளிதன்று. மேலைநாட்டு மொழிகளில் இதை விளக்க ஏற்ற சொல்லே இல்லை. Courtesy, Culture- என்ற ஆங்கிலச் சொற்கள் எல்லாம் பண்புடைமையின் நிறைந்த பொருளை விளக்குவதாக இல்லை. கொஞ்சம் விரித்தே சொல்லலாம் என்றால் 'நிறைவின் சிகரம்' (Crown of Perfection) என்றோ, சகல நற்குணங்களும் இணைந்து நிற்கும் ஓர் அரிய குணம் என்றோ சொல்லக்கூடும் என்கிறார். இன்றைய விவாதத்திற்குத் தலைப்பை

அமைத்தவர்கள் இத்தனை பொருள் இந்தப் பண்பு என்ற சொல்லுக்கு உண்டு என்பது அறிந்து அமைத்திருக்கிறார்கள் என்று நான் எண்ணவில்லை. கம்பன் காவியத்தில் காணும் தன்மைகள்(Aspects) என்ற பொருளிலேதான் இந்தப் பண்பு என்பதை அமைத்திருக்க வேண்டும் என்று கருதுகிறேன் நான்.

இனி விவாதத்திற்குள் நுழைந்து பார்க்கலாம். வழக்கம்போல் கட்சிக்கு மூன்று பேராக மொத்தம் ஒன்பது பேர் விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தி இருக்கிறார்கள். கம்பனும் அவரவர் கட்சிக்கு வேண்டிய ஆதாரங்களை எல்லாம் எடுத்துக் கொடுத்து அவர்கள் ஒவ்வொருவரையுமே ஊக்கி இருககிறான். ஆதலால், நாம், அவன் ஒவ்வொரு தன்மையைப் பற்றியும் என்ன என்ன சொல்கிறான் என்று பார்க்கலாம்.

கம்பன் காவியமாகிய இராமாவதாரத்தில் புத்திர வாஞ்சை என்ற தன்மை சிறப்பாகவே பேசப்படுகிறது. காவிய நாயகனாகிய ராமனின் தந்தை தசரதனும், தாய் கோசலையும் புத்திர வாஞ்சை மிக மிக உடைய தாய் தந்தையராகவே வாழ்கின்றனர். அதேபோல் இராவணனும் அவன் மனைவி மண்டோதரியும் மிகுந்த புத்திர வாஞ்சை உடையவர்களாகத்தான் இருந்திருக்கின்றனர். ஏன் உலகில் எந்தத் தந்தைதான், தாய்தான் புத்திரவாஞ்சை இல்லாதவராக வாழ்ந்திருக்கிறார்கள்? காவியத்தின் ஆரம்பத்திலேயே, ராமனைத் தன்னுடன் அனுப்ப வேண்டிய விசுவாமித்திரன் வந்து கேட்டபோது புத்திர வாஞ்சை மிகுந்த தசரதன் துடித்துப் போய் விடுகிறான். தான் செய்கின்ற தவ வேள்விக்கு அரக்கர் இடையூறு செய்யாவண்ணம் 'வேள்வி காக்க கரிய செம்மலாகிய ராமனைத் தந்தருளுதி'- என்று விசுவாமித்திரன் கேட்டது

தசரதனுக்குத் தன் உயிரையே கேட்டது போல் இருந்தது என்கிறான் கம்பன். மேலும் அம்பு துளைத்ததினால் மார்பில் ஏற்பட்ட புண்ணில் மீண்டும் தீக்கொழுந்து ஒன்று நுழைந்தது போல இருந்தது என்று தசரதன் அடைந்த துயரை வர்ணிக்கிறான் கம்பன். இன்னும் கைகேயி கேட்கும் இரண்டு வரங்களில் ஒன்று ராமனைக் காட்டிற்கு அனுப்புவதற்குரிய வரம் என்று அறிந்தபோது தசரதன்,

"பெண்ணே! வண்மைக்
கேகயன் மானே! யெறுவாயேல்
மண்ணே கொள் நீ!
மற்றையது ஒன்றும் மற!"

என்றும்,

"என் கண் என் உயிர்
என் மகன்
எல்லா உயிர்கட்கும் நன்மகன்
இந்த
நாடிறவாமை நய!"

என்றும் தானே ஏங்கித் துடிக்கிறான். ராமன் காடு சென்று விட்டான் என்பதை சுமத்திரன் மூலம் அறிந்ததும் உயிரையே விட்டு விடுகிறானே, அதைத்தான் கம்பன் எவ்வளவு அழகாக,

நாயகன் பின்னும் தன் தேர்ப்
பாகனை நோக்கி, நம்பி
சேயனோ, அணியனோ என்றான்
செய்ய
வேய் உயர் கானம், தானும் தம்பியும்
மிதிலைப் பொன்னும்
போயினன் என்றான்; என்ற
போழ்த்தத்தே ஆவிபோனான்

என்று கூறுகிறான். இதைவிடத் தசரதனது புத்திர வாஞ்சையை விவரிக்க வேறு என்ன சான்று வேண்டும்?

தசரதனைப் போலவே, கோசலையும் ராமனிடம் மிகுந்த புத்திரவாஞ்சை உடையவளாகத்தான் இருந்திருக்கிறாள். மகுடம் சூடியவனாக ராமன் வருவான் என்று எதிர்நோக்கியிருக்கும் தாய்முன் குழைக்கின்ற கவரியின்றி கொற்றவெண் குடையும் இன்றி வந்து சேருகிறான் ராமன். "நேர்ந்தது என்? இடையூறு உண்டோ நீள்முடி புனைதற்கு?" என்று கேட்ட தாயிடம், "அம்மா நின் காதல் திருமகன் எம்பி பரதனே, துங்க மாமுடி சூடுகின்றான்" என்று சொல்கிறான் ராமன். இதைக் கேட்ட கோசலை கொஞ்சமும் பதற்றம் அடையாமல்

முறைமை யன்று - என்பது
ஒன்று உண்டு, மும்மையின்
நிறை குணத்தவன்
நின்னிலும் நல்லன்

என்றே பரதனைப் பாராட்டுகிறாள். ஆனால் இதே தாய் பின்னர் தன் மகன் ராமன் பதினான்கு வருஷம் காடு செல்லப்போகிறான் என்று அறிகிறபோது துடிதுடித்துப் போய் விடுகிறாள்.

"வஞ்சமோ மகனே! இம்மா நிலம்
தஞ்சமாக நீ தாங்கென்ற வாசகம்
அஞ்சும் அஞ்சும்
என் ஆருயிர் அஞ்சுமால்"

என்றே புலம்ப ஆரம்பித்து விடுகிறாள். இப்படி நைந்து உருகும் தாயின் உள்ளம்தான் எத்தனை புததிரவாஞ்சை உடையதாக இருக்க வேண்டும்?

இத்தகைய சந்தர்ப்பங்கள் இராவணனுக்கும், மண்டோதரிக்கும் கிடைக்கவில்லைதான் என்றாலும், அவர்

தம் அருமை மகன் இந்திரசித்தன் இலக்குவனது கணை யால் மாண்டு மடிந்து மண்மேல் கிடக்கின்றபோது, வந்து கண்டு, பிரலாபிக்கின்றார்களே, அந்தப் பிரலாபம் எல்லாம் அவர்களது புத்திர வாஞ்சையை எடுத்துக் காட்டுவதாக அமையாதோ? போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கும் அருமை மகனைக் கண்ட இராவணன் ஆம் இரக்கமே இல்லாத அரக்க நெஞ்சம் படைத்தவனா யிருந்தும்கூட,

''மைந்தவோ' எனும், 'மாமகனே!' எனும்
'எந்தையோ!' எனும், 'என் உயிரே!' எனும்

என்றுதானே புலம்புகிறான். இராவணனைப் போலவே மண்டோதரியும் தன் மகனது இளமை நினைவுகளை எல்லாம் நினைவுக்குக் கொண்டு வந்து குமுறி அழுகிறாள்.

கலையினால் திங்கள் அன்ன
வளர்கின்ற காலத்தே உன்
சிலையினால் அரியைக் கொல்லக்
காண்பதோர் தவம்முன் செய்தேன்
தலையிலா யாக்கை காண
எத்தவம் செய்தேன், அந்தோ!
நிலை இலா வாழ்வை இன்னும்
நினைவெனொ நினைவிலாதேன் -

என்று மருகும்போது, அவளது பாசத்தின் அளவை நம்மால் ஊகிக்க முடிகிறதல்லவா? இதுபோலவே வாலி தன் மகன் அங்கதனிடம் புத்திரபாசம் உடையவனாக வாழ்கிறான். காப்பியத்தில் வருகின்ற தாய் தந்தையர் அனைவருமே புத்திரவாஞ்சை உடையவர்களாகத்தான் வாழ்கிறார்கள். அத்தனையையும் அழகுபடச் சொல் கிறான் கம்பன்'' - என்று புத்திரவாஞ்சைக் கட்சியிலே நின்று வாதாடியவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

இனி, சகோதர பாசத்தைக் கம்பன் எப்படிக் கூறுகிறான், என்பது பற்றி அந்தக் கட்சியினர் கூறுவதையும் பார்க்கலாம். ராமனுக்குத் தம்பியர் மூவர், இலக்குவன், பரதன், சத்ருக்கனன் என்று அறிவோம். இலக்குவனோ ராமனைப் பிரியாது எப்போதும் அவன் நிழல் போலவே தொடர்ந்து, தொண்டு புரிந்து வாழ்ந்தவன். ராமனது இன்ப துன்பங்களில் எல்லாம் பங்கு கொண்டவன். இராம சேவைக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன். இந்திரசித்தனை வதைத்துவிட்டு ராமனிடத்தில் வந்த போது ராமனே சொல்கிறான்.

வம்பு செறி மலர்க்கோயில்
மலரோன் படைத்த மாநிலத்தில்
தம்பி உடையான் பகை அஞ்சான்
என்னும் மாற்றம் தந்தனை

என்று இலக்குவனது பாசத்தை உணர்ந்து பேசுகிறான். பரதனைப்பற்றியோ கேட்கவே வேண்டாம். 'தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினை என்ன நீந்து'- காட்டிற்கே சென்று ராமனை நகர் திரும்பி மகுடத்தை ஏற்றுக் கொள்ளச் சொல்கிறான். அதனை ராமன் மறுத்தபோதும் விடாது, அவனது பாதுகைகளை இரந்து பெற்று, அப்பாதுகைகளுக்கே மகுடம் சூட்டி அதன் பிரதிநிதியாகவே இருந்து தவக்கோலம் தாங்கி அரசு புரிகின்றான். இவனது சகோதர பாசமும் அளவிட முடியாத ஒன்றுதான். கடைசித் தம்பியான சத்ருக்கனனைப் பற்றி அதிகம் பேச்சில்லை- காவியத்தில். இந்தப் பேசாத் தம்பியும் ஒரே ஒரு தடவை வாய் திறந்து பேசி தன் சகோதர பாசத்தை மாத்திரம் அல்ல, இலக்குவன், பரதன் இவர்கள் பாசத்தையுமே அளவிட்டு உரைக்கும் ஆற்றல் பெற்று விடுகிறான். காடு சென்ற ராமன் குறித்த தவணையில் நாடு திரும்பவில்லை

என்றதும் ராஜ்யபாரத்தை தம்பி சத்ருக்கனிடம் கொடுத்து விட்டு தான் தீப்பாய விரைகிறான். அப்போது பேசாத தம்பி பேசுகிறான். அதைக் கம்பன் சொல்லுகிறான்.

கானாள நிலமகளைக் கைவிட்டுப்
போனவனைக் காத்துப் பின்பு
போனாலும் ஒரு தம்பி, போனவர்கள்
வரும் அவதி போயிற்றென்னா
ஆனாத உயிர்விட என்று அமைவானும்
ஒரு தம்பி, அயலே நாணாது
யானாம் இவ்வரசாள்வன், என்னே
இவ்வரசு, மற்று இனிதே அம்மா!

என்பதாக இந்தப் பாடல்தான் ராமனிடத்துத் தம்பியர் மூவரும் கொண்டிருந்த பாசத்தை முறைப்படுத்திச் சொல்லி விடுகிறதே. உடன்பிறந்த தம்பியர் கதை இது என்றால் உடன் பிறவாத் தம்பியர்களான குகன், சுக்ரீவன், விபீஷணன் இவர்களிடம் ராமன் காட்டும் பரிவும் அவர்கள் மூவரும் ராமனிடம் வைத்திருக்கும் பாசமும் கம்பன் கவிதையிலே சிறப்பாக இருப்பதையும் பார்க்கிறோம்.

குகனோடும் ஐவரானோம், வனத்திடை
குன்று சூழ்வான்
மகனோடும் அறுவர் ஆனோம்
எம் முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும்
எழுவரானோம்
புகலரும் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தாள் உந்தை...

என்ற கம்பன் பாடலை அறியாதார் யார்? - சக்கரவர்த்தித் திருமகனான ராமன், வேட்டுவனாகிய குகனை

யும், குரங்கினத்தைச் சேர்ந்த சுக்ரீவனையும், அரக்கனாகிய விபீஷணனையும் தம்பியராக ஏற்று அவர்களிடம் காட்டும் பாசமும் அன்பும் அளவிட முடியாத ஒன்றாக அல்லவா இருக்கிறது.'' இப்படியெல்லாம் எடுத்துக் கூறினார்கள் சகோதர பாசம் கட்சியில் நின்று வாதாடிய அன்பர்கள்.

இனி பதிபக்திக் கட்சியார் கூறுவதைக் கேட்கலாம். அந்தக் கட்சிக்காக வாதாடிய அன்பர்கள் பதிபக்திக்கு அடிப்படை மனைவியரது கற்பொழுக்கமே என்றும், அக்கற்பொழுக்கத்தில் தலை நிற்பவள் சீதை என்றும் கூறினர். இராவணன் மனைவியான மண்டோதரி தன் கணவனான இராவணன் போர்க்களத்தில் ராமனது அம்பால் வீழ்த்தப்பட்டு விழுந்து மடிந்தபோது மேலே விழுந்து புரண்டு அழுது அரற்றி, அவனது உடலைத் தழுவியபடியே உயிர் நீத்துவிடுகிறாள். வான்மீகரது கதையில் கற்பொழுக்கம் அற்றவளாக சித்தரிக்கப்பட்ட வாலியின் மனைவி தாரையைக் கூட சிறந்த கற்பொழுக்கம் உடைய மங்கையாகக் காட்டுகின்றானே கம்பன்! இப்படி இராமகதை நெடுகிலும் மனைவியரது பதிபக்தியை எல்லாம் சிறப்பாகக் கூறுவதில் கம்பன் இணையற்று நிற்கிறான் என்பது இக்கட்சியினரின் வாதம்.

இத்தனை வாசாலகத்தையும் கேட்டபின், இதில் எந்த உணர்வு, எந்தப் பண்பு கம்பன் காவியத்தில் மேலோங்கி நிற்கிறது என்று கூறுவது எளிதான காரியம் அல்லதான். என்றாலும் கம்பன் என்ன கருதுகின்றான் என்பதை அவன் பாடிய கவிதைகளைக் கொண்டே கொஞ்சம் ஆராய்ந்து தெளியலாம் அல்லவா? முதலில் கம்பனில் புத்திர வாஞ்சை என்ற பண்பு மேலோங்கியிருக்கிறதா என்று பார்க்கலாம். புத்திரவாஞ்சையில்லாத தாய் தந்தையர்

எவராவது உலகத்தில் உண்டா? அழகில்லாத பிள்ளை யானாலும், அறிவில்லாப் பிள்ளையானாலும் அதன் பெற்றோரும் அதனிடம் வாஞ்சை இல்லாமல் இருந்த தில்லையே. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதானே. பாரதத்தில் நற்குணம் நிரம்பிய பஞ்ச பாண்டவரிடத்தில் புத்திரவாஞ்சை உடையவராய் குந்திதேவி இருந்தாள் என்பதில் வியப்பில்லை. சகல துர்க்குணங்களுக்கும் இருப்பிடமான துரியோதனாதி யரிடத்தும், அவரது தந்தை திருதராட்டிரனும் தாய் காந்தாரியும் புத்திர வாஞ்சை உடையவர்களாகத்தானே இருந்திருக்கின்றனர். அப்படி இருக்க சகல நற்குண சம்பன்னனான ராமனிடத்து தசரதன் வாஞ்சையுடன் இருந்தான் என்பதிலும் சிறந்த வீரனான இந்திர சித்தனிடம் இராவணன் வாஞ்சையுடன் இருந்தான் என்பதிலும் யாதொரு சிறப்பும் இல்லை. புத்திரவாஞ்சை என்பது பெற்றோரிடத்தில் ஊறி நிற்கும் ஒரு இயற்கை யான பண்பு. அந்தப் பண்பு கம்பன் காவியத்திலே மேலோங்கி நிற்கிறது என்று சொல்வதிலே அர்த்தமே இல்லை. இயல்பான ஒரு பண்பை, கம்பன், அருமையாகப் பாடியிருக்கிறான் என்ற அளவிலே தான் அதற்குச் சிறப்பு. காவியத்திலேயே அந்தப் பண்புதான் மேலோங்கியிருக்கிறது என்று சொல்ல முடியாது.

அடுத்த பதிபக்தி என்னும் பண்பு. பண்டைத் தமிழ் மக்களிடம் இப்பண்பு நிறைந்திருக்கிறது என்று விவாதித்தவர்கள் எடுத்துக்காட்டினார்கள். பதிபக்தியே மேலோங்கி நிற்கிறது என்று தீர்ப்புக் கூறாவிட்டால் தமிழ் மக்களது நாகரிகத்தையும் கலாச்சாரத்தையுமே பழிப்ப தாகும் என்று கூட மிரட்டிப் பார்த்தார் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவர். ஆனால் இந்தப் பட்டிமன்றத் தலைவரோ இத்தகைய மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் அஞ்சாதவர்

என்பதை மறந்து விட்டார் அவர். நமது தமிழ் இலக்கியங்களில் கற்புடைய பெண்டிரது பெருமையும் சிறப்பும் பலபடப் பாராட்டப் பெற்றிருக்கிறது.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை உண்டாகப் பெறின்

என்றார் வள்ளுவப் பெருந்தகை. அவரது அடி யொற்றியே இளங்கோவும் கற்பொழுக்கத்தில் தலை நிற்கும் ஒரு கண்ணகியைச் சிருஷ்டித்து அவளைப் பத்தினித் தெய்வமாகவே வழிபட வகை செய்திருக்கிறார். 'நிதிவழி நேயம் நீட்டும்' கணிகையர் குலத்திற் பிறந்த மாதவியைக்கூட கற்பொழுக்கத்தில் சிறந்தவளாக அமைத்து உருவாக்கியிருக்கிறார். இது எல்லாம் கூடப் பெரிதில்லை. தமிழர் கற்பு நிலைக்கு விளக்கம் சொன்ன போது 'கற்பெனப்படுவது பிறர் நெஞ்சு புகாமை' என்றல்லவா சொல்லியிருக்கிறார்கள். மணிமேகலையில் வரும் ஆதி மந்தியார் - தன் கணவன் வெளியூர் சென்றிருந்தபோது தன்னைக் கண்டு பிற ஆடவர் காமுறா வண்ணம் தன் முகம் குரங்கு முகமாக மாற வேண்டும் என்று சதுக்க பூதத்தின் கோயிலில் வேண்டிக் கொண்டாள் என்றெல்லாம் அறிந்திருக்கிறோம். ஆகவே கற் பொழுக்கமோ, பதிபக்தியோ நமக்குப் புதிய விஷயமே அல்ல. நல்ல தமிழ் மகனான கம்பனும் சீதையின் கற்பொழுக்கத்தை, பதிபக்தியைக் கொண்டாடுகிறான் என்றால் அதில் வியப்பில்லை. சிறையிருந்த சீதையின் ஏற்றம் கூறவந்த கம்பன், அவளைக் கற்பின் கனலி என்றும் தவம் செய்த தவம் என்றும் போற்றிப் புகழ்வதோடு நில்லாமல், என் பெருந்தெய்வம் என்று வணங்கவுமே செய்கிறான். பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோர் ஏத்துதல் தமிழ் மரபு. கம்பன் தன் காவியத்திலே சீதையின் பதிபக்தியைப் பற்றி

மட்டும் பேசவில்லையே. ராமனைப் போன்று 'இந்த இப்பிறவிக்கு இருமாதரை சிந்தையாலும் தொடேன்' என்ற செவ்விய வரம்பில் நிற்கும் ஆடவர் திலகமான ராமனது சதி-பக்தியையும் அல்லவா பாராட்டுகிறான்! இந்த நிலையில் காவியத்தில் பதிபக்தி மட்டுமே மேலோங்கி நிற்கிறது என்று சொல்வது எங்ஙனம்? வள்ளுவனும், இளங்கோவும் காட்டிய வழியிலேயே நின்று கம்பன் தன் காவிய நாயகியைப் படைத்திருக் கிறான் எனறு வேண்டுமானால் சொல்ல லாம். தமிழ் நாடும், தமிழ்ப்பெரும் புலவர்களும் காட்டிய மரபு அது. அந்த மரபு வழுவாமல் கம்பன் தன் காவியத்தை உருவாக்கியிருக்கிறான் என்றுதான் கொள்ள வேண்டும். அதைவிட்டு பதிபக்தி என்ற பண்புதான் காவியத்தில் மேலோங்கி நிற்கிறது என்று முடிவு செய்துவிட முடியாது.

இனி எஞ்சியிருப்பது சகோதர பாசமே. இது உலக மக்களிடையே காணக்கிடைக்காத ஒரு அரிய, அபூர்வ மான பண்பு என்பதைக் கம்பன் கண்டு உணர்ந்திருக் கிறான். உள்ளங்கை அகலமே உடைய சின்னஞ்சிறு நாடுகளைப் படைத்திருந்த தமிழ் மன்னர் களான சேர, சோழ, பாண்டியர், பல்லவர் முதலியோர் தமக்குள் நிகழ்த்திய சண்டைகளை எல்லாம் கண்டும் கேட்டும் இருக்கிறான். அரைக்காணி நிலத்துக்கு அல்லும் பகலும் போரிட்டு மடியும் சகோதரர்களையும் பார்த்திருக்கிறான் - 'பங்காளிக் காய்ச்சல்' என்பது எந்தக் காலத்திலும் உள்ளதுதானே? லட்சிய காவியத்தைப் படைக்கத் துணிந்த கம்பன், சாதாரண மக்களிடையே காணப்படாத ஒரு பண்புக்கு ஏற்றம் கொடுக்க முனை கிறான். ஆகவேதான், ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே துறந்து செல்லும் சக்கரவர்த்தித் திருமகனாம் ராமனையும், அவனுடன்

இணைபிரியாது நாட்டிலும் காட்டிலும் உடன் திரிந்த தம்பியாம் இலக்குவனையும், தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினை என்ன நீத்ததோடு மட்டுமல்லாமல், தமையன் பின்னாலேயே சென்று அவன் நாடு திரும்ப இணங்காத நிலையில், பாதுகையைப் பெற்றுத் திரும்பும் பரதனையும் உருவாக்கியிருக்கிறான். தமிழ் மக்கள் மட்டுமல்ல மக்கள் குலமே உணர வேண்டிய பண்பு இது என்றும் எண்ணியிருந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட உயர்ந்த சகோதர பாசம், ஒரு தந்தையின் மக்களாய்ப் பிறந்த சகோதரர்களிடையே இருந்ததில் பெரிய அற்புதம் ஒன்றுமில்லை. வேடனான குகனையும், குரங்கினத் தலைவனான சுக்ரீவனையும் அரக்கர் கோமானான வீடணனையுமே, அந்தச் சகோதர பாசம் என்ற வட்டத்துள் ராமன் இழுத்து அணைத்துக் கொள்கிறானே, அதுதான் மிக மிக அற்புதம். அயோத்தியை விட்டுக் கிளம்பி இலங்கை வந்து சேருவதற்குள், உடன் பிறந்தார் மூவரோடு, உடன் பிறவாத தம்பியர் மூவரையும் தேடிக்கொண்டு இந்த சகோதர பாசத்தைக் காவியம் நெடுகிலும் நிலை நிறுத்தியிருக்கிறானே அந்த அருமையை என்ன என்று சொல்ல? 'ஒருமைப்பாடு ஒருமைப்பாடு' என்று இன்று சொல்லிக் கொண்டிருக்கிறோமே, அந்த ஒருமைப்பாட்டை, கம்பன் இந்தச் சகோதர பாசத்தின் மூலம் அன்றே விளக்கிக் காட்டியிருக்கிறானே! இந்த அற்புதமான, அருமையான பண்பை விளக்கவே கம்பன் தன் காவியத்தை எழுதியிருக்கிறான் என்றே சொல்லத் தோன்றுகிறது எனக்கு.

ஆகவே கம்பன் காவியத்தில் மேலோங்கி நிற்கும் பண்பு சகோதர பாசமே! சகோதர பாசமே! சகோதர பாசமே! என்று தீர்ப்புக் கூற நான் தயங்க வேண்டியதில்லையே.

# 7

# இராமகதையின் திருப்பு முனைக்கு உதவும் கொடிய பாத்திரங்களில் தலையானவர் யார்?

## கூனியா?
## கைகேயியா?
## சூர்ப்பனகையா?

இராமகதையின் பிரதான சம்பவம் இராவணவதம். அயோத்தியில் சக்கரவர்த்தித் திருமகனாக அவதரித்த ராமன் மகுடம் சூடி அயோத்தியை ஆண்டு தன் வாழ்வை நிறைவு செய்திருந்தால் இராமகதை காவியமாக உருவாகியிருக்காது. இராவண வதம் நிகழ்வதற்கு ராமன் காடு செல்ல வேண்டும். அங்கு சீதையை இராவணன் அபகரித்துப் போய் சிறை வைக்க வேண்டும். சிறையிருந்த செல்வியை மீட்டு வர ராமன் இலங்கை மீது போர்கொடு சென்று இராவணவதம் முடித்தல் வேண்டும். இப்படியெல்லாம் கதையைத் திருப்பி விட்டால் தானே கதை காவியமாகும். அப்படிக் கதையில் திருப்பு முனைகளாக அமைவதுதான் மந்தரையின் சூழ்ச்சி, கைகேயின் சூழ்வினை, சூர்ப்பனகையின் மானபங்கம் -

எல்லாம். இதைத்தானே கவிச்சக்கரவர்த்தி கம்பன் அயோத்தியா காண்டம் கடவுள் வணக்கத்திலேயே குறிப்பிடுகிறான்.

வான் நின்று இழிந்து
வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பு எங்கும்
ஊனும் உயிரும் உணர்வும் போல்
உள்ளும் புறத்தும் உளன் என்ப
கோனும் சிறிய கோத்தாயும்
கொடுமை இழைப்பக் கோல் துறந்து
கானும் கடலும் கடந்து இமையோர்
இடுக்காண் காத்த கழல் வேந்தை

என்பது தானே பாட்டு. அதிலேயே கம்பன் குறிப்பிடு கிறானே கூனியும் சிறிய தாயான கைகேயியும் சேர்ந்து செய்த சூழ்ச்சியினால்தான் ராமன் காடு செல்கிறான் என்று. அப்படி அவன் செல்வதானால்தான், இமையவர் இடுக்கண் தீர்கிறது. இராவணவதமும் முட்டின்றி முடிகிறது, என்பதை இந்தப் பாடலே விளக்குகின்றது. இன்னும் அரண்மனைத் தாதியான கூனி காவிய அரங்கில் வந்ததும் அவளை அறிமுகப்படுத்தும் கவிஞன்,

இன்னல் செய் இராவணன்
இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடு மனக்
கூனி தோன்றினாள்

என்று தானே கூறுகிறான். ஆதலால் காவியத்தின் திருப்பு முனை (fulcrum) மந்தரை சூழ்ச்சியாகவும் கைகேயி பெறும் வரங்களுமாகத்தான் முதலில் அமை கின்றன.

காடு சென்ற ராமன் பதினான்கு வருஷம் பஞ்ச வடியிலே இருந்து அயோத்தி திரும்பினாலும் கதைப்

போக்கு தடைப்பட்டுப் போகும். ஆரணிய காண்டத் தோடேயே காவியம் முற்றுப் பெற்றுவிடும். எந்தக் காரணத்திற்காக பரந்தாமன் அவதரித்தானோ அது முற்றுப் பெறாமலே போய் விடும். அதனால் சூர்ப்பனகை காமவல்லியாம் கன்னியாக அரங்கில் வரவேண்டியிருக் கின்றது. ராமனிடத்து தன் காமம் கலந்த காதலைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. அது நிறைவேற ராமனுடன் இருக்கும் சீதையைத் தூக்கிச் செல்ல முயல வேண்டியிருக்கிறது. அந்த முயற்சியில், இலக்குவன் இடை புகுந்து அவள்தன் மூக்கு அறுக்க வேண்டியிருக் கிறது. இன்னும் இந்த மூக்கறுபட்ட மூளி சூர்ப்பனகை இராவணனிடத்து சீதையின் அழகை வர்ணிக்க வர்ணிக்க அவன் சீதையின் பேரில் தகாத காதல் கொண்டு வஞ்சனை யால் சீதையைக் கவர்ந்து சென்று அசோக வனத்தில் சிறைவைக்க வேண்டியிருக்கிறது. அந்தச் சிறையிருந்த செல்வியை மீட்கும் பொருட்டு ராமன் இலங்கை மீது வானரப்படை கொடு சென்று இராவண வதம் முடிக்க வேண்டியிருக்கிறது. இத்தனையும் தேவர் துயர் தீர்க்கவும், தேவர் கோனாகிய இந்திரன் பெற்ற வரபலத்தாலும் நிகழ வேண்டியிருக்கிறது. இப்படித் தானே கம்பன் சித்தாந்தப் படுத்துகிறான். பேசுகிறானே மண்டோதரி மூலம்

காந்தையருக் கணி அனைய
    சானகியார் பேர் அழகும்
அவர் தம் கற்பும்
ஏந்து புயத்து இராவணனார்
    காதலும் அச் சூர்ப்பனகை
இழந்த மூக்கும்
வேந்தர் பிரான் தயரதனார்
    பணியினால் வெங்கானில்
    விரதம் பூண்டு

போந்ததுவும் கடைமுறையே
புரந்தனார் பெருந் தவமாய்ப் போயிற்றம்மா!

என்றுதானே திருப்பு முனைகளை எல்லாம் முறைப் படுத்திக் கூறுகிறாள். ஆதலால் கூனி, கைகேயி, சூர்ப் பனகை மூவருமே காப்பியத்தின் திருப்பு முனைக்கு கைகொடுத்து உதவுகிறார்கள் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

ஆதலால் இப்பட்டிமன்றத்தின் அடுத்த பிரச்சனை இந்த மூன்று பாத்திரங்களில் கொடுமை செய்தவர்களில் தலையானவர் யார் என்பது தான். இந்தப் பிரச்சனை யையும் கம்பன் எவ்வாறு கூறுகிறான் என்பதை விவாதத் தில் கலந்து கொண்ட அன்பர்கள் சாங்கோ பாங்கமாக, தக்க தக்க சான்றுகள் காட்டி விளக்கினார்கள். அவர்கள் சொன்னதைக் கொஞ்சம் தொகுத்து முதலில் பார்த்து விடலாம் தானே.

கூனி கைகேயியின் தாதி. கேகய நாட்டிலிருந்தே உடன் வந்தவள். கைகேயி ராமனிடம் காட்டும் அளப்பரிய அன்பை எல்லாம் அறிந்தவள். அந்த ராமனுக்கு மகுடாபிஷேகம் என்றதும் காரணம் இல்லாமலேயே கலகம் செய்ய நினைக்கிறாள். தேவர்கள் இயற்றிய தவமும், இராவணன் செய்த தீமையும்தான் அவளைச் சூழ்ச்சி செய்யத் தூண்டுகின்றன. ராமனுக்குத் தீங்கு இழைக்கப் போதிய காரணம் இல்லை என்றாலும் அவன் சிறு பிள்ளையாயிருந்தபோது அவள் தன் கூனிய முதுகில் மண்ணுருண்டைகளை வில்லில் வைத்து அடித்ததை யெல்லாம் ஞாபகத்துக்குக் கொண்டுவந்து கோபத்தை வருவித்துக் கொள்கிறாள்.

பண்டை நாள் இராகவன்
பாணி வில் உமிழ்

உண்டை உண்ட தனை
உள்ளத்து உன்னுவாள்

என்று கம்பன் பேசும் போது ஷேக்ஸ்பியரது ''ஒத்தெல்லோ'' நாடகத்தில் அயாகோ என்ற கொடியவன் தனக்கு ஒத்தொல்லோ தம்பதிகள் பேரில் கோபம் உண்டாக எண்ணிய எண்ணங்கள் ஞாபகத்திற்கு வருகிறது. அதைத் தானே சிறந்த விமர்சகனான பிராட்லீ "the motive hunting of a motiveless malignity' என்று கூறுகிறான். இந்தக் கூனி, கைகேயியின் அந்தப்புரம் நுழைந்து தூங்கும் கைகேயியை எழுப்பி ராம பட்டா பிஷேகச் செய்தியைக் கூறுகிறாள். கைகேயியோ இந்த நல்ல செய்தி கொண்டு வந்ததற்காக அவளுக்கு ஒரு முத்து மாலையையே பரிசளிக்கிறாள். தன் எண்ணம் ஈடேறாதது கண்டு கொஞ்சம் கொஞ்சமாக புரை ஏற்றிக் கைகேயி யிடம், ''ராமன் பட்டத்திற்கு வந்த பின் கோசலைக்குத் தான் எல்லாச் சிறப்பும் இருக்கும், நீயும் உன் மகனும் அவர்களிடம் இரந்துதான் வாழ வேண்டியிருக்கும்'' - என்று சக்களத்திப் பகையை ஊட்டிய பின் தான் கைகேயியின் மனம் திரிகிறது. எண்ணியதைப் பெற முன்னர் தசரதன் வாக்குக் கொடுத்திருந்த வரங்ளைக் கேட்கவும் மந்தரையே சொல்லிக் கொடுக்கிறாள். இதனாலேயே கம்பன் அவளைத் தீய மந்தரை என்றும், 'காலக்கோள் போன்றவள்' என்றும் கூறுகிறான். உடலில் மட்டும் கூன் இல்லை உள்ளமும் கோடிய கொடியள் அவள் என்பது கவிச்சக்கரவர்த்தியின் முடிவு. அசோக வனத்திலிருக்கும் சீதைகூட, அங்கு காவல் காத்து நிற்கும் அரக்கியரைப் பற்றிப் பேசும் பொழுது அனுமனிடம் கூனியிற் கொடியார் அலர் இவர் என்று கூறுகின்றாள். இந்தச் சான்றுகளை எடுத்துக் காட்டியே கூனி கட்சியில் விவாதித்தனர்.

கைகேயியைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவள் செய்த வினை எல்லாம் நமக்குத் தெரியும். அதனால் தானே அவளைத் தீயவை யாவினும் சிறந்த தீயாள் என்றும், வசை வெள்ளம் நீந்துவாள் என்றும், முனியும் செய்கைக் கொடியாள் என்றும் கூறுகிறான் கம்பன். அழைத்த அழைப்பை ஏற்று அவள் முன்னே ராமன் வருவதை, 'தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியன் வந்தாள்' - என்றே கூறுவான். கேகய நாட்டிலிருந்து திரும்பி வந்த பரதன் தன் தாய் செய்த காரியங்களை எல்லாம் தெரிந்த பின் அவளைத் தாய் என்றே கருதுகின்றிலன். அவளைக் கொன்று விடக் கூடத் துடிக்கிறான். அப்படி ஏதாவது செய்தால் தமையன் ராமன் கடிந்து கொள்வானே என்பதற்காகவே அஞ்சுகிறான்.

ஆயவன் முனியும் என்று
அஞ்சினேன் அலால்
தாய் எனும் பெயர்
எனைத் தடுக்கற் பாலதோ -

என்று தானே கூறுகிறான். இன்னும் கங்கைக் கரையிலே குகனிடம் தன் தாயை அறிமுகப்படுத்தும் போதும் படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும் செவிலி என்று பழித்தே உரைக்கிறான். அவளுடைய கொடுமையின் எல்லை, காடு செல்ல இருக்கும் ராமனுக்கும் சீதைக்கும் தோழியர் மூலம் மரவுரியைக் கொடுத்து அனுப்பினாளே அதுதான் என்பது கைகேயி கட்சிக்காரரது வாதம்.

இனி சூர்ப்பனகை செய்த கொடுமையும் நமக்குத் தெரியும். மூக்கறுபட்ட இந்த மங்கை அரங்கில் வரும் போதே

"நீலாமாமணி நிருதர் வேந்தனை
மூல நாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்"-

என்று கவிச்சக்கரவர்த்தி அறிமுகப்படுத்தி விடுகிறான். ஆம், அவள்தான் தொடர் குலத்தையெல்லாம் தொலைக்கு மாறு நினைத்து தன் கிளைக்கு இறுதி காட்டுபவளாகவே அமைகிறாள். வஞ்சமகள், ''நிந்தனை அரக்கி, நீதி நிலையிலாள்'' என்பது தானே கம்பனது வருணனை. அவளே ஒத்துக் கொள்கிறாளே -

மற்று நின் மனையில் வாழும்
கிள்ளை போல் மொழியார்க்கு எல்லாம்
கேடு சூழ்கின்றேன் -

என்று பல பல சான்றுகள் காட்டி சூர்ப்பனகை மிகக் கொடியவள் என்று வாதித்தனர்.

மூன்று கட்சிக்காரர்கள் வாதங்களையும் கேட்டதில் நமக்கு எல்லாம் தெளிவாகத் தெரிவது மூவரும் கொடிய வர்கள் - என்பதுதான். சொல்லப்போனால் கொடுமை செய்வதில் ஒருவரை ஒருவர் விஞ்சுவதாகவே இருக் கிறார்கள். என்றாலும் நம் பிரச்சனை இம்மூவரின் கொடிய பாத்திரங்களிலும் எவர் தலையானவர் என்பதல்லவா? சூர்ப்பனகை இராவணவதத்திற்கு நேரடியாக உதவுகிறாள் என்பது உண்மைதான்.

கொலை துமித்து உயர் கொடுங்கதிர்
வாளின் அக் கொடியாள்
முலை துமித்து உயர்மூக்கினை
நீக்கிய முறைமை
மலை துமித்தென இராவணன்
மணியுடை மகுடத்
தலை துமித்தற்கு நாள் கொண்டது
ஒத்தது ஓர் தன்மை -

என்று கம்பன் கூறும் போது சூர்ப்பனகை எப்படி இராவணவதத்திற்கு உடனடியாக உதவுகிறாள் என்பது

விளங்குகிறது. ஆனால் இராவணவதத்தை முடித்து வைத்தது ஒரு கொடுமையான செயலா? கெடுதலான காரியங்களே செய்து வாழ்கின்றவன் நியாயமாக எய்த வேண்டிய முடிவுதானே அது. ஷேக்ஸ்பியரது துன்பியல் நாடகங்களை விமரிசனம் செய்த அறிஞன் பிராட்லி சொல்கிறான், ''டிராஜடி என்னும் துன்பியல் முடிவு கெட்டவன் ஒருவன் அழிவதினாலே ஏற்படுவதில்லை; நல்லவன் ஒருவன் துயர் அடைவதினாலே தான் ஏற்படுகிறது'' என்று. There is no tragedy in the expulsion of the evil, but the tragedy is that it involves the waste of priceless good, என்பதே அவனது விளக்கம். ஆதலால் இராவணவதத்தை முடித்து வைப்பது அப்படி ஒன்றும் கொடிய செயல் அல்ல. இதை உணர்ந்து தானோ என்னவோ கம்பனும் அவளைக் கொடியவள் என்று வலியுறுத்தவில்லை. ஒரே ஒரு இடத்தில், தான் 'பொய் நின்ற நெஞ்சிற் கொடியாள்' என்று கவிக் கூற்றாகக் கூறுகிறான். இதை மாத்திரம் வைத்துக்கொண்டு சூர்ப் பனகை மிகமிகக் கொடியவள் என்றோ கொடிய பாத்திரங் களில் தலையானவள் என்றோ கூறுதல் இயலாது. ஆதலால் முதலில் அவளை விவாதத்திலிருந்து விலக்கி விடுகிறேன். இனி இருப்பவர் கூனியும், கைகேயியுமே, இருவரில் எவர் மிகமிகக் கொடியவர் என்று பார்ப்பது தான் இப்போது செய்ய வேண்டிய வேலை.ஆம் இராவண வதத்தைவிட, ராமனைக் காடு செலுத்தியது மிகமிகக் கொடுமையானதுதான். நல்லவன் ஒருவன் அல்லவா சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாகிறான். ராமன் காடு செல்வதற்குத் துணை புரிகிறவர் கூனியும் கைகேயியும் என்றாலும், கூனியின் சேவை எல்லாம் கைகேயியைத் தூண்டுவதோடு நின்று விடுகிறது. அந்த எண்ணத்திற்கு வித்திட்டவள் என்ற அளவுக்கு மேலே

அவள் கொடுமை செய்யவில்லை. மேலும் அவள் ஒரு தாதி. ராமனிடம் அன்புடையவள் அல்ல. சொல்லப் போனால் ராமனே தன் மகன் என்று சொல்லும் அளவிற்கு அன்பு காட்டியவள். அவள் கொடுமை செய்கிறாள். தன் கணவனிடம் வரம் வாங்குகிறாள். வரங்கொடுத்த தசரதன் இரங்கிக் கேட்டதை எல்லாம் மறுத்துத்தானே, ராமனைக் கூப்பிட்டனுப்பி அவனைக் காடு செல்லச் சொல்கிறாள். ஒருவரும் ஏவாமலேயே அவளே ராமனுக்கும் சீதைக்கும் மரவுரி கொடுத்தனுப்புகிறாள். இப்படி எல்லாம் கொடுமை இழைத்து தன் புருஷனான தசரதனது உயிருக்கே உலை வைக்கிறாள். இத்தனையும் செய்த பின்னும் இடரிலா முகத்தாளாக வாழ்கிறாள். இப்படி ஒரு பாத்திரத்தைச் சிருஷ்டித்த கவிச்சக்கரவர்த்தி கம்பன் தன்னுடைய கவிக்கூற்றாகவே கைகேயியை,

சுடு மயானத்திடை தன் துணை ஏக
    தோன்றல் துயர்க் கடலின் ஏக
கடுமை ஆர் கானகத்து கருணை ஆர்
    கலி ஏக கழற்கால் மாயன்
நெடுமையால் அன்று அளந்த
    உலகு எல்லாம் தன் மனத்தே

- நினைந்து செய்யும்

கொடுமையால் அளந்தாள்

என்றே மிகவும் கடுமையாகவே கூறிவிடுகிறான். இதை விடக் கடுமையாக கூனியையோ சூர்ப்பனகை யையோ கம்பன் கூறியதாக இல்லை. ஆதலால் கம்பன் கருதியபடியே கைகேயிதான் இராம கதையின் திருப்பு முனைக்கு உதவும் கொடிய பாத்திரங்களில் தலையான வள் என்று தீர்ப்பு கூறுகிறேன்.

# 8

# கம்பன் கண்ட இராமனில் சிறப்பாயிருப்பது

## அவனது அழகா?
## அறிவா?
## ஆற்றலா?

இலக்கியத்தை வளப்படுத்துவது காப்பியங்கள். தமிழ் இலக்கியத்தில் சங்க காலத்திற்குப் பின்னால் எழுந்தவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி குண்டலகேசி. இவைகளையே ஐம்பெருங் காப்பியங்கள் என்று குறிப்பிடுகிறோம். இக்காப்பியங்களில் வளையா பதியும் குண்டலகேசியும் முழுவதாய் நமக்கு இன்னும் கிடைக்கவில்லை. இந்த காப்பியங்களுக்கு எல்லாம் பின்னால் எழுந்த காப்பியமே கம்பனது இராமாவதாரம்.

காப்பியம் என்றால் அதில் நடுநாயகமாய் ஒரு காப்பியத் தலைவன் இருக்க வேண்டுமே. சிலப்பதி காரத்தில் காப்பியத் தலைவன் கோவலன். ஆனால் அவன் காப்பியத் தலைவனாகும் தகுதியைப் பெறவில்லை. அந்தக் காப்பியத்தில் காப்பியத் தலைவியாக நிற்பவள் கண்ணகியே. மணிமேகலையில் காப்பிய அமைதியையே

காண முடியவில்லை. பல துண்டு துக்கடாக்களை ஒன்று சேர்த்துக் காப்பியம் ஆக்க முயன்றிருக்கிறார் சாத்தனார். ஆனால் வெற்றி காணவில்லை. இந்த நிலையில் அதில் காப்பியத் தலைவனையோ அல்லது தலைவியையோ காண இயலாது போவது அதிசயமன்று. சிந்தாமணியில் வரும் சீவகனோ தமிழ்ப் பண்புக் கெல்லாம் ஒவ்வாதவ னாக இருக்கிறான். ஒருவனும் ஒருத்தியுமாக வாழ்ந்த தமிழகத்தில் செல்லுமிடங்களில் எல்லாம் ஒவ்வொரு பெண்ணாக மணந்து எட்டுப் பெண்களின் நாயகனாக இருப்பவனைக் காவிய நாயகன் என்று கூறுவது பொருத்த மில்லை. இந்த நிலையில் இவர்களுக்குப் பின்னர் காப்பியம் பாடிய கவிஞன் கம்பன். அவனது காவியம் ராமன் என்னும் லட்சிய புருஷனைச் சுற்றிச் சுழல்கிறது. காப்பிய நாயகனாக இருக்க எல்லாத் தகுதியும் பெற்றவ னாக ராமன் விளங்குகின்றான். ஒரு காப்பிய நாயகனுக்கு இருக்க வேண்டிய அழகு, அறிவு, ஆற்றல் எல்லாம் நிறைந்தவனாக இருக்கிறான். அந்த அழகு, அறிவு, ஆற்றலை எல்லாம் கவிச்சக்கரவர்த்தி கம்பன் சிறப் பாகவே எடுத்துக் கூறுகிறான். அப்படிக் கம்பன் உரு வாக்கும் காப்பியத் தலைவனாகிய ராமனிடத்து மிகச் சிறப்பாக இருப்பது அவனது அழகா, அறிவா, ஆற்றலா என்பது இன்றைய பட்டி மண்டபத்தில் நடக்கும் விவாதம். கம்பன் காவியத்தை நன்றாகப் படித்துச் சுவைத்த ஒன்பதின்மர் கலந்து கொண்டு விவாதித்து இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரவர் கட்சிக்கு வேண்டும் ஆதாரங்களை எடுத்துக் கூறித் தங்கள் கட்சியை நிலைநாட்ட முயன்றிருக்கிறார்கள். இவர்களுடைய ஆற்றல் பாராட்டுக்குரியது.

காவிய நாயகனான ராமன் முதல் நூலாம் வான்மீகத்தி லும் வழி நூலாம் கம்ப இராமாயணத்திலும் நல்ல கரிய

நிறமுடையவனாகவே வர்ணிக்கப்படுகிறான். நீலமேக சியாமள வண்ணனான ராமனை 'அலையாண்டு அமைந்த மேனி அழகன்' - என்றே அழகாகக் குறிப்பிடுகின்றான் கம்பன். கறுப்பிலே ஒரு அழகு - குளிர்ச்சியிலே ஒரு ருசி' - என்ற பழமொழியை அடி ஒற்றிக் கூறியிருக்கிறான் என்று மட்டும் கொள்ள முடியுமா? இல்லை, உண்மையிலேயே ராமன் அழகு வாய்ந்தவன் தானா? ராமனை மிதிலை மன்னனாம் ஜனகனிடம் அறிமுகப்படுத்தும்போது விசுவாமித்திரன், 'இருங் கடகக் கரதலத்து எழுதரிய திருமேனிக் கருங்கடல்' - என்றே வர்ணிக்கிறான். இந்த ராமனைத்தான் மதனர்க்கும் எழுத ஒண்ணா அழகுடைய சீதை தன் கன்னி மாடத்திலிருந்து கண்டு காதல் கொள் கிறாள். அவள் ராமனது அழகை அனுபவித்ததைக் கம்பன் சொல்கிறான்.

இந்திர நீலம் ஒத்து
    இருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும்
    தாழ்ந்த கைகளும்
சுந்தர மணி வரைத்
    தோளுமே அல
முந்தி என் உயிரை
    அம் முறுவல் உண்டதே -

என்பது சீதையின் கூற்று. இப்படிக் கண்டு காதலுற்ற கன்னி, கண் வழி நுழைந்த அக் கள்வனாம் ராமனது அழகில் ஈடுபட்டு நின்றதில் வியப்பில்லை. மிதிலை நகரிலே ராமன் உலா வந்தபோது வீதியில் உள்ள வீடு களில் பெண்கள் எல்லாம் தலைவாயிலுக்கே ஓடிவந்து ராமனைக் கண்டு அவனது அழகில் மெய் மறந்து நிற்கிறார்களே! அதைச் சொல்கிறானே, கம்பன் மிகவும் அழகாக,

தோள் கண்டார் தோளே கண்டார்
தொடுகழல் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார்
தடக்கை கண்டாரும் அஃதே!
வாள் கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்
ஊழ் கொண்ட சமயத்து அன்னான்
உருவு கண்டாரை ஒத்தார்

*இப்படி அவனது ஒவ்வொரு அங்க அழகிலும் ஈடுபட்டு நின்றதிலிருந்தே அவன் சர்வ அங்க சுந்தரனாக இருக்கிறான் என்பது பெறப்படுகிறதே!*

*சீதையும், மிதிலை நகரத்துப் பெண்களும் அவன் அழகில் ஈடுபட்டு நிற்பது வியப்பில்லை. பஞ்சவடிவிலே காமரூபியாம் கன்னி வடிவில் வந்த சூர்ப்பனகை ராமனது அழகிற்கு எல்லை என்பதே இல்லையே என்று மயங்கு கிறாள். பின்னர் இராவணன் முன்னிலையில் தன் உருவெளித் தோற்றத்தில் கண்ட ராமனை*

செந்தாமரைக் கண்ணோடும்
செங்கனி வாயினொடும்
சந்தார் தடம் தாளொடும்
தாள் தடக்கைகளோடும்
அம்தார் அகலத் தோடும்
அஞ்சனக் குன்றம் என்ன
வந்தான் இவனாகும்
அவ்வல் வில் இராமன்

*என்றல்லவா பாராட்டுகிறாள். ராமனது அழகை அவ்வளவு சிறப்பாகவல்லவா அனுபவித்திருக்கிறாள். இப்படி ராமசௌந்தர்யத்தை அனுபவித்தவர்களை*

எல்லாம் கூறிக் கம்பன் கண்ட ராமனில் சிறப்பாயிருப்பது அவனது அழகே என்று வாதிட்டனர் ஒரு கட்சியார்.

ராமனது அழகு இருக்கட்டும் அதைவிட அவன் வீரம் என்ன குறைந்து விட்டது என்று ஆற்றலைப் புகழ வந்த கட்சியார் பேசினார்கள். கோதண்டம் ஏந்திய கையனாய் அவன் புறப்பட்டு விட்டால் அவனை எதிர்ப்பதற்குப் பகைவர்களே இல்லாது போய் விடுவார்களே.

வென்றிவாள் புடை விசித்து
 மெய்ம்மை போல்
என்றும் தேய்வுறாத் தூணி
 யாத்து இரு
குன்றம் போல் உயர்ந்த
 தோளில் கொற்றவில்
ஒன்று தாங்கினான்
 உலகம் தாங்கினான்

என்று ராமன் வில்லேந்திப் புறப்படுகின்றதை கம்பன் மிகச் சிறப்பாகக் கூறுகிறான். இள வயதினனாக இருக்கிற போதே விசுவாமித்திரருடன் சென்று தாடகையை வதைக்கிறான். மாரீசன் சுபாகுவை வாட்டுகிறான். பரசுராமனைக் கர்வபங்கமுறச் செய்கிறான். தண்டகாரண்யத்தில் கரதூஷணாதியர்களை எல்லாம் கொன்று குவிக்கிறான். இலங்கையில் நடந்த பெரும் போரில் இராவணாதியர்களை எல்லாம் நிர்மூலம் செய்கிறான். இத்தோடு அளவிலும் ஆற்றலிலும் மிகுந்த மூலபலமே போருக்கு வந்தபோதும் தன்னந் தனியனாய் அந்தப் பெரும் படையை எதிர்த்து நின்று வெற்றி காண்கிறானே, அந்த ஆற்றலை எல்லாம் எப்படிக் கணக்கிட? அன்றைய போர்க்களத்தில் அவன் வில்லில் கட்டிய மணிகள் ஒலிப்பதை,

படுமத கரிபரி சிந்தின
பனிவரை இரதம் அவிந்தன
விடுதிசை செவிடு பிளந்தன
விரிகடல் அலரது எழுந்தன
அடுபுலி அவுணர் தம் மங்கையர்
அலர்விழி அருவிகள் சிந்தின
கடுமணி நெடியவன் வெஞ்சிலை
கணகண, கணகண எனும்தொறும்

என்று பாடுகிறானே கம்பன், இப்படி வில்லேந்தி வீர முழக்கம் செய்யும் ராமனது ஆற்றல்தானே காவியம் முழுவதும் பேசப்படுகிறது - என்பது ஆற்றல் கட்சியாரது வாதம்.

இத்தனை அழகும், ஆற்றலும் உடைய ராமனைக் கம்பன் நல்ல அறிவு படைத்த பெருமகனாகவும் காட்டு கிறான். தசரதன் தன் மந்திரக் கிழவர்களோடு ஆலோசனை செய்து ராமனுக்குப் பட்டம் சூட்ட எண்ணி ராமனை அழைத்து அந்தச் செய்தியைச் சொன்னபோது,

காதல் உற்றிலன், இகழ்ந்திலன்
கடன் இது என்று உணர்ந்தும்
யாது கொற்றவன் ஏவியது
அது செயல் அன்றே
நீதி எற்கு என நினைந்தும்
அப் பணி தலை நின்றான் -

என்று கம்பன் அவன் அறிவுடைமையையும் அடக்கத்தையும் பாராட்டுகிறான். பின்னர் தனக்குப் படடம் இல்லை என்று தெரிந்த போதும் கொஞ்சமும் வருத்தம் தெரிவிக்கவில்லை. அதையும் அப்பொழுது அலர்ந்த செந்தாமரை போன்ற முகத்தோடேயே ஏற்றுக் கொள்

கிறான். பின்னர் கோசலையிடம் பேசும் போதும், இலக்குவனது சீற்றத்தை ஆற்றும் போதும், ராமன் தன் அறிவின் தெளிவை வெளிப்படுத்துகிறான். தன்னைத் தேடி வந்த பரதனிடத்து அரச தருமங்களை எடுத்துக் கூறி அவனை அயோத்திக்குத் திரும்பச் சொல்கிறானே அத்தனையும் சிறந்த அறிவுரைகள் தாமே. இப்படி எத்தனையோ இடத்து அவன் அறிவின் திறத்தைப் பார்க்கிறோம். அதனால் தான் கம்பன் அவனை 'அறிவின் உம்பரான்' என்று பாராட்டிப் பேசுகிறான் என்று அறிவின் கட்சியார் வாதம்.

ராமன் அழகில் சிறந்தவன், ஆற்றல் உடையவன், அறிவு நிரம்பியவன் என்று நாம் அறிந்தாலும் கம்பன் கண்ட ராமனில் மிகச் சிறப்பாக இருப்பது அவனது அழகா அறிவா ஆற்றலா என்று தீர்மானிக்கவே இந்தப் பட்டி மண்டபம். ராமனை அறிவின் உம்பரான் என்று கம்பன் குறித்தாலும் அவனது நடவடிக்கைகள் அவனைச் சிறந்த அறிவுடையவன் என்று ஒப்புக் கொள்ளும்படி இல்லை. பஞ்சவடியில் மாரீசன் மாயமானாக வந்தபோது இலக்குவன் எவ்வளவோ தடுத்தும் கேளாமல், மனைவி விரும்புகிறாள் என்பதற்காக அம்மானை துரத்திச் சென்றானே, அது அறிவுடைய செயலாகுமா? அதனால் தானே சீதையை இராவணன் சிறை எடுக்கிறான். ஆய்ந்து உணர்ந்து பாராமல் செய்த காரியம் அல்லவா இது? பிற்காலத்துப் புலவர்கள்

மங்கை சொற்கேட்டு மன்னர் புகழ்
    தசரதனும் மரணம் ஆனான்
செங்கமலச் சீதை சொற்கேட்டு
    ஸ்ரீராமன் சென்றான் மாண்பின்

என்றெல்லாம் பேசுவதற்கு இலக்காக்கிக் கொண்டானே தன்னை. இத்தோடு கிஷ்கிந்தையில் வாலி

சுக்ரீவர்களுக்கு இடையே நேர்ந்த போரில், ராமன் சுக்ரீவனுக்காக மறைந்து நின்று அம்பெய்து வாலியை வீழ்த்தி என்றுமே தீராத அபகீர்த்தியைத் தேடிக் கொண்டானே, அது அறிவுடைய செயலா? துஷ்ட நிக்கிரகத்திற்காகச் செய்தான் என்றால் நேரில் வாலியைப் போருக்கழைத்து வென்றிருக்கலாமே. அன்று வாலி பல பேசிய பின்,

செருக்களத்து உருத்து எய்யாதே
வெவ்விய புளிஞர் என்ன
விலங்கியே மறைந்து வில்லால்
எவ்வியது என்னை

என்று கேட்டபோது வாயடைத்து நிற்கிறானே, இந்த இரண்டு நிகழ்ச்சிகளுமே போதும், ராமனை அறிவு நிரம்பியவனாகக் கம்பன் கருதவில்லை என்று தீர்மானிக்க.

ராமன் ஆற்றல் மிகுந்தவன்தான். இராவணாதி வீரர்களை முடித்த ஆற்றலைச் சாமானிய ஆற்றல் என்று கூறிவிட முடியுமா? என்றாலும் கம்பனது கருத்தில் ராமனது ஆற்றல் மட்டுமா இந்தக் காரியங்களை எல்லாம் சாதித்திருக்கிறது? இந்திரசித்தன் இறந்து கிடந்தபோது வந்து புலம்புகின்ற தாயாம் மண்டோதரி,

அஞ்சினேன் அஞ்சினேன்
அச்சீதை என்னு அமிழ்தாற் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன்
நாளை இத்தகையன் அன்றோ -

என்று தானே புலம்புகின்றாள். ராமவீரனது ஆற்றலுக்குப் பக்கபலமாக சீதையின் கற்பும் நின்று உதவியிருக்

கிறது என்றுதானே கம்பன் கருதியிருக்கிறான். ஆதலால் அவனது ஆற்றலும் தனித்து நின்று சிறந்து விளங்கக் காணோம்.

ஆனால் கம்பன் ராமனது அழகை வர்ணிக்கிற போதெல்லாம், அப்படியே விக்கித்து நிற்கிறான். காவிய நாயகனாம் ராமனை அந்தமில் அழகு உடையவனாக உருவாக்கிய கம்பன் கடைசியில் தானே அவன் அழகில் ஈடுபட்டு மெய்மறக்கிறான். ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தான் என்பான் ஒரு முறை. பின் ஆடவரும் அவன் தோள்களைத் தழுவ அவாவுவர் என்பான் மறுமுறை. இப்படியெல்லாம் சொல்லியதோடு திருப்தி அடையாது

வெய்யோன் ஒளி தன்மேனியின்
விரி சோதியில் மறைய
பொய்யோ எனும் இடையாளொடும்
இளையானொடும் போனான்
மையோ, மரகதமோ, மழை முகிலோ
ஐயோ! இவன் வடிவு என்பதோர்
அழியா அழகுடையான் -

என்றே முடிப்பான். 'ஐயோ!' என்று அவன் திணறுவதிலிருந்தே அவன் இராமனது அழகினை எப்படி அனுபவித்திருக்கிறான் என்று தெரிகிறது அல்லவா? ஆம் ராமனுடைய அழியா அழகினை அழியாத ஓவியமாக நிலை நிறுத்தி விடுகிறான். கம்பன் கண்ட ராமனிடத்துச் சிறப்பாயிருப்பது அவனது அழகே. அந்த அழகை ஆராதனை பண்ணிப் பண்ணியே காவியம் வளர்கிறது. விரிகிறது, உயர்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல தானே!

# 9

# காமம் கடிந்த காதல் வாழ்வில் தலைநின்றவர்

## ஆண்டாளா? மாணிக்கவாசகரா?

காமம் கடிந்த காதல் வாழ்வில் தலைநின்றவர் ஆண்டாளா? மாணிக்கவாசகரா? என்று பொருள் அமைந் திருக்கிறது இன்றைய பட்டிமன்றத்திற்கு. காமகோடி பீடத்து ஆச்சார்ய சுவாமிகளின் அருள் ஆணையின் பேரில் திருப்பாவை, திருவெம்பாவை விழாக்கள், தமிழ்கூறும் நல்லுலகத்தில் பல இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் சைவ, வைணவ ஒருமைக்கு வழி வகுக்க இந்த விழா உதவி புரியும் என்று எண்ணியே ஆச்சார்ய சுவாமிகள் இப்படிக் கட்டளை இட்டிருக் கிறார்கள். ஆனால், கோவை நன்னெறிக் கழகத்தாரோ, ஆண்டாளுக்கும், மாணிக்க வாசகருக்குமே ஒரு போட்டியை ஏற்படுத்தி விட்டனர். சைவப்பற்று மிகுந்த தமிழறிஞர் ஒருவர், ''இந்த விழாவில் பங்கு எடுத்துக் கொள்ள மாட்டேன், என் வாயால் மாணிக்கவாசகரை விட, ஆண்டாள் தலை நின்றவர் என்று எப்படிக் கூறுவேன், என்னை விலக்கி விடுங்கள்'' - என்று சொல்லி

விவாதத்திலிருந்தே விலகிக் கொண்டார். ஸ்ரீ வைணவர் ஒருவரும், இப்படிப்பட்ட விவாதத்தில் கலந்து கொள்ள மறுத்து விட்டார். ''ஆண்டாளைக் குறைத்துப் பேசுவது, அதை நான் கேட்டுக் கொண்டிருப்பது எல்லாம் பெரிய பாவம், அந்தப்பாப காரியத்தை நான் செய்ய மாட்டேன்'' - என்று சொல்லி விட்டார். இந்தச் சூழ்நிலையில் கட்சிக்கு மூன்று பேர் விவாதிக்கக் கிடைத்ததே பெரிய காரியம். இப்படிப்பட்ட மன்றத் தலைமைக்கு ஆள்தேடி இருக்கிறார்கள். விவாதிக்கவே இணங்காத அன்பர்கள் தலைமை தாங்கித் தீர்ப்புக் கூற இணங்குவார்களா? கடைசியாக, 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' - என்று என்னைப் பிடித்துப் போட்டி ருக்கிறார்கள். நானோ சர்வ சமய சமரச வாதி. கொஞ்சம் அதிகமான துணிச்சல் உடையவன். இப்படிப்பட்ட விவாதத்தால், இல்லை இந்த மாதிரி விவாதங்களில் தீர்ப்புக் கூறுவதால், எனக்குள்ள மணிவாசகர் பக்தியோ, இல்லை ஆண்டாள் பக்தியோ குறைந்து விடாது என்று எண்ணுபவன். என் பக்தியைத் தவறாக அன்பர்கள் எடை போட்டுவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கையின் பேரிலேதான் இந்த விவாதத்திற்குத் தலைமை வகிக்க இணங்கியிருக்கிறேன். ஆம், 'அறிஞர்கள் புக அஞ்சுகின்ற இடத்தில் அறிவிலிகள் தைரியமாகப் புகுவார்கள்' என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. அந்த நிலையிலேதான் இருக்கிறேன் நான். ஒன்று மட்டும் சொல்வேன், இப்படியெல்லாம் விவாதிப்பதன் காரணமாக மக்கள், ஆண்டாளைப் பற்றியும், மாணிக்கவாசகரைப் பற்றியும் தெளிவான எண்ணங்கள் பெறக்கூடும் என்பதை மட்டும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேணும்.

இனி விஷயத்திற்கு வருவோம். முதலில் 'காமம் கடிந்த காதல் -' என்றால் என்ன என்றே நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு முன் காதல் என்றால் என்ன என்று எளிதில் விளக்கிட முடியுமா என்றே பார்க்கலாம். காதல் வயப்பட்ட பெண்ணொருத்தி பாடுவதாக சுவையான பாடல் ஒன்று உண்டு. மதுரையில் இருக்கிறான் ஒரு வீரன். ஆம், மதுரை வீரன்தான். அவனைக் காதலிக்கிறாள் ஒரு பெண். காதல் என்பது ஆண், பெண் இருபாலருக்குமே நிகழும் ஓர் அன்புப்பிணைப்பு, என்று நமக்குத் தெரிந்திருந்தாலும், அது எப்படிப்பட்டதென்று எழுத்தால் எழுதிக் காட்ட முடியுமா? கடவுள் என்றால் யார் என்றுகூட எளிதாகச் சொல்லி விடலாம் போல் இருக்கிறது. காதல் என்றால் என்ன என்று சொல்வது அவ்வளவு எளிதான காரியமாக இல்லை. அதனைத்தான், மதுரை வீரனைக் காதலித்த பெண் உரைக்கிறாள். அவள் உரைப்பதாகக் கவிஞன் ஒருவன் பாடுகிறான்.

திக்கயங்கள் எட்டுமுட்ட
விட்ட புட்ப தாகையான்
செழியர் சேரன் வளவர் வந்து
திரை அளக்கும் முன்றிலான்
மைக்கருங்கண் மாதரார்
மனம் கவர்ந்த மாரவேள்
மதுரைவீர கஞ்சுகன்
மணந்து தந்த காதல் நோய்
கைக்குள் வந்து அகப்படாது
கண்முன் நிற்கும், ஒருவரால்
காணொணாது காணும் என்று
காட்டொணாது, அது அன்றியும்
ஒக்கும் என்ற உரைக்கலான
உரையும் இல்லை, இருவரும்

உள்ளறிந்ததன்றி மற்றிவ்
ஊரறிந்த தில்லையே!

என்பது - காதலி ஒருத்தியின் பிரலாபமாக அமைகிறது. உண்மைதானே? காதலன், காதலி என்ற இருவரது உள்ளம் அறியும் காதல் தன்மையை, ஊரறியச் சொல்ல இயலுமோ?

சாதாரணக் காதலின் நிலையே இப்படியென்றால், காமம் கடிந்த காதல் என்றால் என்ன என்று விளக்க முடியுமா என்ன? முதற் பார்வையிலேயே அரும்பி, பின்னர் நெருங்கிப் பழகுவதன் காரணமாகப் போது ஆகி அதன் பின் உடல் உறவு ஏற்படுவதன் காரணமாக மலர்வதே காதல், என்பது என்று தெரியும் நமக்கு. வள்ளுவரும் சொல்கிறாரே,

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய் -

என்றல்லவா காதல் நோயை வர்ணிக்கிறார். இதில் இருந்து தெரிகின்றது, உள்ளத்தில் அரும்புகின்ற காதல், உடல் உறவில் மலர்ச்சி பெறுகிறதென்று. அப்படி உடல் உறவு பெறுவதே லட்சியமாகக் கொண்டு, அதிலே ஊறித் திளைப்பவர்களைக் காமத்தின் வயப்பட்டவர்கள் என்கிறோம். அந்த உடல் உறவை எண்ணாது, உள்ளத்து உறவிலேயே மகிழ்ச்சி காண்கிறவர்கள் தான் உயர்ந்த காதல் வாழ்வில் திளைப்பவர்கள். அதனையே ஆங்கிலத்தில் Platonic love என்றனர். அந்த Platonic love என்பதைத் தமிழாக்கம் செய்ய விரும்பிய அன்பர்களோ, திக்குமுக்காடி காமம் கடிந்த காதல் வாழ்வு என்று மொழிபெயர்த்திருக்கின்றனர்.

இது என்ன காதலில் ஒரு புது வகையாக இருக்கிறது என்றுதானே நினைக்கிறீர்கள்? இது தமிழனுக்குப்

புதியதொரு விஷயமல்ல. நமது அடியார்கள் பலரும் இறைவனிடத்தில் பக்தி செலுத்தும் போது இத்தகைய பக்திக்காதலிலே தானே திளைத்திருக்கிறார்கள். இறைவன் ஆணா, பெண்ணா இல்லை அலியா என்றே தெரியாது. அப்படிப்பட்ட இறைவனை ஒரு ஆடவனாக பாவனை பண்ணி அந்த ஆண்டவனிடத்தே காதல் கொண்டு வாழ்ந்ததாகவும் பாவனை பண்ணியிருக் கிறார்கள். கடவுளைத் தொழுவதற்கு பாவனை மிகவும் அத்தியாவசியமான ஒன்று என்று பகவான் இராம கிருஷ்ணர் சொல்லுகிறார். அந்த பாவனை எப்படி எல் லாமோ உருவாகலாம். தன்னை ஒரு குழந்தையாகவும், இறைவனைத் தந்தையாகவும் தாயாகவும் பாவம் பண்ணலாம். அதனையே வாத்ஸல்ய பக்தி என்பர். இறைவனை ஆண்டானாவும், தன்னை தசரதனாகவும் பாவனை பண்ணித் தொண்டுகள் பல செய்யலாம். இதனையே தாசபக்தி என்பர். இன்னும் இறைவனைத் தன்னுடைய தோழனாகவும் கொண்டு அவனோடு உரையாடி மகிழலாம். இதனையே ஸக்ய பக்தி என்பர். இவற்றையெல்லாம் விடச் சிறப்பானது, மதுரபக்தி. தன்னைக் காதலியாகவும், இறைவனைக் காதலனாகவும் பாவனை பண்ணி, பக்தி செலுத்துவதையே மதுர பக்தி என்றனர். எல்லா பாவனைகளிலும் அதுவே சுவை யுடையது என்று தெரிந்து தானே இதற்கு மதுர பக்தி என்றே பெயர் சூட்டியிருக்கின்றனர். இந்த மதுர பக்தியில் திளைத்தவர்கள் தான் நம் சைவ சமயக் குரவர்களும், ஆழ்வார்களும் இவர்களெல்லாம், தங்களைக் காதலியாக வும், இறைவனைக் காதலனாகவும் கொண்டு பாவனை செய்திருக்கிறார்கள். அவர்கள் பாடிய பாடல்கள் பல, நாயக நாயகி பாவத்தில் அமைந்திருப்பதை நாம்

அறிவோம்! தன்னைக் காதலனாகவும், இறைவனைக் காதலியாகவும் பாவனை பண்ணும் துணிச்சல் நமது தேசியக் கவியான பாரதி ஒருவனுக்கே இருந்திருக்கிறது. ஆம், பாடினானே, 'கண்ணம்மா என் காதலி' - என்று.

சரி, பக்திக் காதல், மதுர பக்தி, காமம் கடிந்த காதல் - என்பதில் எல்லாம் உள்ளத்து உறவைத் தவிர, உடல் உறவுக்கு இடமேயில்லைதான். அத்தகைய பக்தியிலே, காமம் கடிந்த காதல் வாழ்விலே, திளைத்தவர்கள்தான் மணிவாசகரும், ஆண்டாளும். இந்த அற்புதமான வாழ்விலே தலைநின்றவர் யார் என்பதுதான் இன்று தீர்மானிக்க வேண்டிய விஷயம். இன்றைய விவாதத்தில் கலந்து கொண்ட அன்பர்களெல்லாம் இருவரது பாடல் களில் பலவற்றைத் தங்கள் தங்கள் கட்சிக்கு ஆதாரமாகக் கொண்டனர்.

கயல் மாண்ட கண்ணிதன் பங்கன்
    எனைக் கலந்து ஆண்டலுமே
அயல் மாண்டு, அருவினைச் சுற்றமும்
    மாண்டு, அவனியின் மேல்
மயல்மாண்டு, மற்றுள வாசகம்
    மாண்டு, என்னுடைய
செயல் மாண்டவா பாடித்
    தெள்ளேணம் கொட்டோமோ

என்று பாடும் மணிவாசகர் பாட்டில் உடல் உறவைப் பற்றிப் பேச்சில்லையே என்பது மணிவாசகர் கட்சிக் காரர்கள் வாதம். மேலும், மணிவாசகர் பிறப்பாலே ஆண்மகன். தன்னை ஒரு பெண்ணாக பாவித்துக் கொண்டு தானே இறைவனோடு கலந்ததாக, காதல் கொண்டதாக, சொல்லுகிறார். இந்த உறவில் காமம் புகுவதற்கு வழியே

இல்லையே என்பதும் அவர்கள் விவாதத்தில் முக்கிய மானது.

ஆண்டாள் கட்சி கொஞ்சம் பலவீனமானதுதான், அவள் பெண்ணாய்ப் பிறந்ததன் காரணமாக, - என்பதை ஆண்டாள் கட்சியில் விவாதித்தவர்கள் ஒத்துக் கொண் டாலும், அவள் அரங்கனிடத்துக் கொண்ட காதல், காம வேட்கையால் அன்று, அழகை ரஸிக்கும் அழகுணர்ச்சி யின்பால்பட்டதே என்பது அவர்களது வாதம்.

எழில் உடைய அம்மனையீர்
என் அரங்கத்து இன்னமுதன்
குழல் அழகர், வாய் அழகர்
கண் அழகர், கொப்பூழில்
எழு கமலப்பூ அழகர்
எம்மானார் என்னுடைய
கழல்வ ளையைத் தாமும்
கழல் வளையே ஆக்கினாரே -

என்று பாடும்பேது, தான் பெண் என்பதை மறவாது, தன் வளை கழன்றது என்று கூறுகின்றாளே ஒழிய, அரங் கனோடு உடல் உறவு கொள்ளும் வேட்கையே அவள் உள்ளத்தில் எழவில்லை. அவள் ஒரு சிறந்த ரஸிகை அரங் கனின் அழகை அனுபவிக்கிறாள். அந்த அழகனையே தன் காதலனாகக் கொள்கிறாள். ஏன், அவனும் அவளை ஏற்றுத் திருமணம் செய்து கொள்கிறான். இருவரது காமம் கடிந்த காதல் வாழ்வாகவே இருக்கிறது என்று ஆண்டாள் கட்சியினர் வாதம்.

இரண்டு கட்சிக் காரர்களுமே, தங்கள் தங்கள் கட்சியை மிக்க திறமையுடன் எடுத்து வாதாடி இருக்கின்றனர். மேலோட்டமாகச் சொல்லப்போனால், இருவருமே

காமம் கடிந்த வாழ்விலே திளைத்தவர்கள் தாம், என்று எளிதாகச் சொல்லி விடலாம். என்னுடைய இக்கட்டான நிலை என்ன என்றால், இவர்களில் எவர் அத்தகைய வாழ்வில் தலை நின்றவர் என்று கூறி தீர்ப்புச் சொல்ல வேண்டியது. நாயக - நாயகி பாவத்தில் பாடல்கள் பாடுவது என்பது, கூரிய கத்தி முனையில் நடப்பது போன்றது. இப்பக்கம் அப்பக்கம் விலகி விட்டால், விரசமாகிவிடும். செயிரின்றிப் பாடுவது மிக்க சிரமமான காரியம் என்று அமரர் வா.வெ.சு.அய்யர் எழுதுகிறார். அப்படிச் செயிரின்றிப் பாடுவது மாணிக்க வாசகர். ஆண்டாள், என்னும் இருவரில் யாருக்கு சாத்தியமான தாய் இருக்கிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் மட்டும் கூறினால் போதும்.

உடல் உறவைப் பற்றிச் சிறிதளவும் எண்ணாத மாணிக்கவாசகரும், திருவெம்பாவைப் பாடல் பாடும் போது ஒரு பாட்டுப் பாடுகிறார்.

உம் கையிற்பிள்ளை உனக்கே
அடைக்கலம் என்று அங்கு அப்
பழஞ் சொல்புக்கும் எம் அச்சத்தால்

எங்கள் பெருமாள் உனக்கு ஒன்று
உரைப்பேன் கேள், எம் கொங்கை
நின் அன்பர் அல்லாதார் தோள் சேரற்க

என்று கூறுவதால் சிவனடியாரைப் புணர்வதில் விருப்பம் உடையார் என்று ஒரு தொனி தொனிக்கும்படி பாடி விடுகிறார். இப்படிப் பாடியதைப் படித்தபின் தானோ என்னவோ, திருவாசகத்தைப் பற்றிப் பேசும் இராமலிங்க அடிகளும்,

சேமமிகு திருவாதவூர்த்
    தேவென்று உலகு புகழ்
மாமணியே நீயுரைத்த
    வாசகத்தை எண்ணுதொறும்
காமமிகு காதலன் தன்
    கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள்
    இன்பினும் இன்பு எய்துவதே

*என்று பாடி விடுகிறார். காமமும் கலவியும் உடல் உறவினால் ஏற்படுவது. அந்நிலையில் மணிவாசகர் காமம் கடிந்த காதல் வாழ்வில் தலை நின்றார் என்று கூறுதல் சாத்தியமோ?*

*ஆண்டாள் இப்படியெல்லாம் பாடவில்லையோ?*

பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானைப்
    புணர்வது ஓர் ஆசையினால் என்
கொங்கை கிளர்ந்து குமைந்து குதூகலித்து
    ஆவியை ஆகுலம் செய்யும்

*என்று பெண்மைக்கே உரிய வகையில் பரந்தாமரைப் புணரும் ஆசையினைப் பச்சையாகவே சொன்னாலும், பின்னால்,*

ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கென்று
    உன்னித்து எழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க்கு என்று பேச்சுப்படில்
    வாழகிலேன் கண்டாய் மன்மதனே

*என்று அனங்கனனுக்கே ஒரு சவால் விடுகின்றாளே. முன்னமேயே சொன்னபடி, மானிடரைத் தழுவும் ஆசையை அறவே வெறுக்கிறாள். கற்பனையில் உருவான,*

கட்புலன் கதுவாக் கள்வனும் ஆண்டாளையே அணைய விருப்பம் உடையவன் என்று பேசும்போது அது காமம் கடிந்த காதலாகவே பரிணமிக்கிறது. ஆண்டாளையும், மாணிக்க வாசகரையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது காமம் கடிந்த காதல் வாழ்வில் தலை நின்றவள் ஆண்டாளே என்றுதான் தீர்ப்பு கூற வேண்டியிருக்கிறது. இதனால் ஆண்டாளுக்கு ஒரு பெருமையும், மணிவாசகருக்கு ஒரு சிறுமையும் ஏற்பட்டு விடாது. விவாதத்திற்கு என்று ஒரு பொருளைக் குறித்து விட்டால் அதில் ஒரு முடிவு காணத்தானே வேண்டும்? இருவரது திருத்தாள்களையும் வணங்கியே இத்தீர்ப்புக் கூறி அமைதி பெறுகிறேன்.

# 10

# அழுது அருள் பெற்றவர் மாணிக்கவாசகர் – அணைந்து அருள் பெற்றவள் ஆண்டாள் – இவற்றில் எவரது முயற்சி சிறந்தது?

இறைவனை அடைவதற்கு எத்தனை எத்தனையோ வழிகள். சிலர் ஆடிப் பாடியே இறைவன் அருள் பெறுகின்றனர். சிலரோ நெஞ்சம் நெக்குருக அழுது அவன் அருளைப் பெறுகின்றனர். சிலர் நிஷ்காம்யமாகத் தொண்டு செய்தே அவன் திருவருளைப் பெற்று விடுகின்றனர். நமது மாணிக்க வாசகரோ அழுது அழுதே ஆண்டவன் அருளைப் பெற்றவர். பெரியாழ்வார் திருமகளான ஆண்டாளோ, தன் உள்ளம் கவர்ந்த கள்வனாம் கண்ணனை அணைத்து அவன் அருளைப் பெற்றவர். இருவரது குறிக்கோளுமே இறைவன் அருளைப் பெறவேண்டுமென்பதுதான். ஆனால் இரு வரும் அதற்குக் கையாண்ட முறைதான் வேறு: இதையே அடிப்படையாக வைத்து இன்றைய பட்டிமன்ற விவாதத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். திருப்பாவை -

திருவெம்பாவை விழாவிலே நடக்கிற பட்டிமன்றமானதி னாலே பொருத்தமாக இருக்கட்டுமே என்று அமைத் திருக்கலாம். மற்றபடி மாணிக்க வாசகருக்கும் ஆண்டா ளுக்குமிடையே ஏற்றத் தாழ்வு கற்பிக்க வேண்டும் என்ற எண்ணமெல்லாம் கிடையவே கிடையாது. மாணிக்க வாசகரிடத்தில் நமக்கு எவ்வளவு பக்தி உண்டோ, அவ்வளவு பக்தி ஆண்டாளிடத்திலும் உண்டு. திருவெம் பாவையிலே எவ்வளவு ஈடுபாடு உண்டோ அவ்வளவு ஈடுபாடும் திருப்பாவையிலும் உண்டுதான். அதனால் தான் திருப்பாவை - திருவெம் பாவை விழா என்று சேர்த்தே கொண்டாடுகிறோம். ஆனால் மாணிக்கவாச கரும் சரி, ஆண்டாளும் சரி, ஆண்டவனை அடையக் கடைப்பிடித்த வழிகள் இருக்கின்றனவே அவை ஒன்றுக் கொன்று வேறுபடுகின்றன. அந்த வேறுபட்ட வழி களிலே எது எளிதானது, எது சிறந்தது என்று விவாதித்து முடிவு செய்யவே இந்தப் பட்டிமன்றம் கூடியிருக்கிறது.

அழுது அருள் பெற்றவர் மாணிக்கவாசகர். இறைவன் அருளைப் பெறுவதற்கு அகம் குழைந்து நெக்குருகி, அழுவதைவிட வேறு சிறந்த முறை இல்லை என்று எண்ணுகிறவர் மாணிக்கவாசகர்.

பாடவேண்டும் நான்
    போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்துருகி
    நெக்கு நெக்கு
ஆடவேண்டும் நான்
    போற்றி அம்பலத்து
ஆடு நின் கழல்
    போது நாயினேன்
கூட வேண்டும்...

என்று அகம் கனிந்து பாடுகின்றவர்.

உற்றாரை யான் வேண்டேன்
ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தா
உன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக்
கசிந்துருக வேண்டுவனே

என்று திருப்புலம்பலே பாடியிருக்கிறார். இதயம் கசிந்துருகும் போதுதான் கண்கள் கண்ணீரைச் சொரிகின்றன. அப்படிக் கண்ணீர் வெளிப்பட வெளிப்படத் தான் இதயத்திலுள்ள மாசெல்லாம் கரைந்து உள்ளம் தூய்மையடைகிறது. அப்படித்தூய்மையடைந்து விட்டால் அதன்பின் இறைவனை அடைவது, அவன் அருளைப் பெறுவது எல்லாம் எளிது என்றும் எண்ணுகிறார்.

வீட்டிலே குழந்தைகள் ஒரு காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்று நினைத்தால் அதற்குப் பயன்படுத்துவது அழுகை தானே? 'அழுத பிள்ளைக்கு வாழைப் பழம்' என்பதுதானே பழமொழி. நாமோ இறைவனுடைய குழந்தைகள். அவன் அருளைப் பெறவேண்டுமானால் அழுது அதைச் சாதித்துக் கொள்வதில் தவறென்ன? நம்முடைய பிறப்பு பொய்யாக இருக்கலாம். ஆனால் நாம் அகம் குழைத்து அழுகின்றபோது அந்தக் குறைகளெல்லாம் - கறைகளெல்லாம் கண்ணீரிலேயே கரைந்து விடுகின்றன. அதன்பின் அவன் அருளைப்பெறுவது எளிதாகிவிடுகிறது.

யானே பொய்
என் நெஞ்சம் பொய்
ஆனால் வினையேன்
அழுதால் உன்னை பெறலாமே

என்றுதானே இறைவனையே கேட்கிறார். அழுது புலம்பவதால்தான் அவரது பாடல்களுக்குத் தனிநயமும் உருக்கமும் ஏற்பட்டு விடுகின்றது. அதுபற்றியே 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' - என்ற வாசகமே எழுந்திருக்கிறது. ஆகவே ''அழுது ஆண்டவன் அருளைப் பெறுவதே சிறந்த வழி-'' என்று மாணிக்க வாசகர் சார்பிலே பேசியவர்கள் வாதிட்டனர்.

''இல்லை யில்லை. அழுவது என்பது வெகு சாதாரண விஷயம். சிறு குழந்தை போல் அழுது அடம்பிடித்துக் காரியத்தைச் சாதித்துக் கொள்வதிலே என்ன சிறப்பு இருக்கிறது? இறைவன் அருளைப் பெறுவதற்கு எத்தனையோ வழிகள். அவற்றில் ஒன்று அழுகை. அதற்காக அதைச் சிறந்த வழி என்று சொல்லிவிட முடியுமா? ஒரு பெரிய நகரம் இருக்கிறது. அதைச் சென்று அடைவதற்குப் பல வழிகள். ஒன்று நல்ல ராஜபாட்டை. மலரும் மணமும் அழகும் நிழலும் - கொண்ட அருமையான பாதை. மற்றொரு பாதையோ கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுப்பாதை - இரண்டுமே நகருக்கு நம்மை இட்டுச்செல்லும் வழிகள் தான் என்றாலும் எந்தப் பாட்டை சிறப்பானது? சூடிக் கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாள் தேர்ந்தெடுத்தது அந்த எழில் நிறைந்த பாதையைத்தான். ஆண்டாளுக்கு மட்டும் அழத் தெரியாதா என்ன? ஆணாய்ப் பிறந்த மாணிக்கவாசகரே அழுது புலம்பி அமர்க்களம் செய்யும் போது, பெண் ணாய்ப் பிறந்த ஆண்டாளுக்கு அழச்சொல்லியா கொடுக்க

வேண்டும்? ஏன் அழவில்லை? அணைந்து அருள்பெற சந்தர்ப்பம் இருக்கும்போது அழ வேண்டிய அவசியம் என்ன? எந்தப் பெண்ணாவது, எடுத்த எடுப்பிலே ஆடவன் ஒருவனை, அவன் ஆண்டவனாகவே இருந்தாலும் அணைய முற்பட்டு விடுவாளா? அதற்குரிய மனப்பக்குவம் ஆண்டவனை அணையும் தகுதியும் உரிமையும் நமக்கிருக்கிறது என்ற உறுதிப்பாடு இருந் தால்தானே முடியும்? ஆண்டாளுக்கு அந்த நம்பிக்கையும் பக்குவமும் இருந்தது. ஆகையால் அழுது புலம்பி காலத்தை வீணாக்காமல் அணைந்தே அருளைப்பெற முற்படுகிறாள். இறைவனை நாயகனாக பாவனை செய்து கொண்டு வழிபடுவதைத்தான் மதுர பக்தி என்கிறோம். அந்த மதுர பாவனை ஆண்டாளுக்கு இயல்பாகவே அமைந்து விடுகிறது. சைவ சித்தாந்தத்திலே பதி - பசு என்றெல்லாம் பேசப்படுகிறதே, அவை எதைக் குறிக்கின்றன? ஆண்டவன் ஒருவனே பதி - பரம புருஷன். மற்றவை எல்லாம் பிரகிருதிகளே - பெண்களே - பசுக்களே - என்று தானே மெய்ஞானிகள் கூறுகின்றனர். பசுவானது பதியைச் சென்றடைந்து, தன்னைப் பதி யிடத்திலே ஐக்யப்படுத்திக் கொள்வதைத்தானே ஜீவன் முக்தி என்கிறோம். ஆகவே, ஆண்டாள் மேற்கொண்ட அணைந்து அருள்பெறும் வழிதானே சிறப்பானது?'' என்று கேட்டனர் ஆண்டாள் சார்பில் வாதாடியவர்கள்.

நான் ஆண்டாள், மாணிக்கவாசகர் இருவரிடத்திலுமே மிகுந்த பக்தியும் ஈடுபாடும் உடையவன். மாணிக்க வாசகர் கசிந்து கசிந்து பாடிய பாடல்களையெல்லாம் நானும் பலமுறை பாடிப்பாடி உள்ளம் உருகியிருக் கிறேன். அப்படியே ஆண்டாளது நாச்சியார் திருமொழி யையும் திருப்பாவைப் பாடல்களையும் பாடிப் பாடிப்

பரவசம் அடைந்திருக்கிறேன். ஆனால் இன்று வரை அழுது அருளைப் பெற்ற மாணிக்கவாசகர் வழி சிறந்ததா, அணைந்து அருள் பெற்ற ஆண்டாள் வழி சிறந்ததா என்று எண்ணிப் பார்த்ததே இல்லை. இன்று என்னை எண்ணிப் பார்க்கும்படி செய்து விட்டார்கள், இங்கே இருதரப்பிலும் வாதிட்டவர்கள். பக்தன் ஒருவன் இறைவனை நினைந்து அழும் கண்ணீரை விடப் புனிதமானது வேறென்ன இருக்கிறது? உற்றார் வேண்டியதில்லை. ஊர் பேர் எதுவுமே வேண்டியதில்லை - கல்வி கூடத் தேவை யில்லை. ஆனால்,

குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தா
    உன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக்
    கசிந்துருக வேண்டுவனே

என்றுதானே கரைந்துருகுகிறார் மாணிக்கவாசகர். அப்படி உருகியவர்,

வேண்டுந்தனையும் வாய்விட்டலறி
    விரையார் மலர் தூவிப்
பூண்டு கிடப்பதென்று கொல்லோ
    என் பொல்லா மணியைப் புணர்ந்தே!

என்றல்லவா முடிக்கிறார்? ஆம். அழுவது எதற்காக என்பதையும் அவரே சொல்லிவிடுகிறாரே! பொல்லா மணியைப் புணர்வதற்குத் தானே, அப்படி வேண்டும் தனையும் வாய்விட்டலறுகிறார்?

இறைவன் அருளை அழுதே பெறலாமென்றால், மாணிக்கவாசகர் திருப்புலம்பல் மட்டும் பாடி நிறுத்தி யிருக்கலாமே! திருக்கோவையார், திருவெம்பாவை,

புணர்ச்சிப்பத்து, குயிற்பத்து எல்லாம் ஏன் பாட வேண்டும்?'' பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' என்று இறைவனே மாணிக்கவாசகருக்குக் கட்டளை இட்டாரே - அதிலிருந்து என்ன தெரிகிறது? அப்பா! நீ அழுது புலம்பியதெல்லாம் போதும். இந்த வழியை முயற்சி செய்து பார் - என்று சொல்லுவது போல் இல்லையா?

மாணிக்கவாசகருக்கே இந்த வழியைப் பின்பற்றினால் இறைவனை அடையலாம் - என்ற நிச்சயம் இல்லை. ஆகவேதான் ஆடிப்பார்ககிறார், பாடிப்பார்க்கிறார், தெள்ளேணம் கொட்டுகிறார், திருச்சுண்ணம் இடிககிறார், குயிலைத் தூதனுப்புகிறார், ஏன், சிற்றாடை கட்டி சிறு பெண்ணாக வேடமிட்டு திருவெம்பாவையும் கோவை யாரும் கூடப் பாடிப் பார்க்கிறார்.

நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின்னமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வதென்று கொல்லோ
என் பொல்லா மணியைத் புணர்ந்தே!

என்று தானே ஏங்குகிறார்?

ஆண்டாளுக்கு அத்தகைய சங்கடங்கள் எதுவும் இல்லை. காரை பூண்டு, கண்ணாடி காணும் கன்னிப் பருவத்திலேயே, கண்ணனை அடைய, தனக்கென ஒரு வழி வகுத்துக்கொண்டு விடுகிறாள். கடைசிவரை அந்த வழியை விட்டு விலகவே இல்லை. இறைவனை அடைய எண்ணுகின்ற பக்தர்கள் அனைவரும் தத்தமக்கு என்று தனித்தனியே ஒரு வழியை வகுத்துக் கொண்டு விட்டார் கள். இறைவனுக்கும் தங்களுக்குமிடையே ஒரு உறவைக் கற்பித்துக் கொள்வது, அந்த உறவுக்கயிற்றின் உதவியால்

இறைவனை எட்டாத உயரத்திலேவைத்து அந்த நிலையிலேயே பக்தி செலுத்துவதுண்டு. சிலர் தம்முடைய எஜமானனாகவே எண்ணி ஆண்டவன் அடிமை பாவத்திலே பக்தி காட்டுவதுண்டு - சுந்தரமூர்த்தி நாயனாரைப் போன்றவர்களோ இறைவனது தோள்மேலேயே கை போட்டு தோழமை கொண்டாடுவதும் உண்டு. பெரியாழ்வாரைப் போன்ற பழுத்த அனுபவமுள்ளவர்களோ, இறைவனைக் குழந்தையாகவே பாவித்து மடியில் கிடத்தித் தாலாட்டும் பாடிவிடுவதுண்டு. இவை எல்லாவற்றுக்கும் மேலே ஒரு படி போய், இறைவனை நாயகனாகவே எண்ணிக்காதல் செய்கிறவர்களும் உண்டு. இதைத்தான் மதுரபாவம் என்பார்கள். அன்னைதயையும், அடியாள் பணியும், புவிப்பொறையும், நல்ல தோழமையும் நாயகனது இன்பத்துக்கே நிலைக்களமாய் விளங்குகின்ற நிலையும், இந்த மதுர் பாவனைக்குத் தான் உண்டு. இறைவனது காட்சியைப் பெற்ற பின்பு ஏற்படும் அதிதீவிர பக்தியே பிரேமையாகும். இதுவே பக்தியில் உயர்வற உயர்ந்த நிலையாகும். இறைவனை நாயகனாக எண்ணி அன்பு செய்யும் நெறியான மதுரபாவனை பெண்ணுடலோடு பிறந்தவர்க்கு மட்டும் உரியதன்று, ஆண்களுக்கும் அது உரியதே. ஆணாயினும்சரி, பெண்ணாயினும் சரி, காமநினைவு மாய்ந்து மனம் தூயதாகும்போதுதான் மதுரபக்தி பிறக்கும். அந்த ஒரு வழியைத்தான் தனக்கெனத் தேர்ந்தெடுத்தாள் ஆண்டாள், அதில் வெற்றியும் கண்டாள் - பரமன் மீது கொண்ட பக்தியால் காதலால்.

எழிலுடைய அம்மனைமீர்
என்னரங்கத் தின்னமுதர்

குழலழகர் வாயழகர்
கண்ணழகர், கொப்பூழில்
எழுகமலப் பூவழகர்
எம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும்
கழல் வளையே ஆக்கினரே.

என்றுதானே பாடுகிறாள். கோதையின் காதலை உகந்து தானே, மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து அவளை ஏற்றுக் கொள்கிறான். மாணிக்கவாசகரது முரட்டுக் கரங்களுக்கும், கண்ணீர் வெள்ளத்துக்கும் தப்பித் தப்பி யோடும் இறைவன், கோதையின் மெல்லிய வளைக் கரங்களுக்கு வளைந்து கொடுத்து விடுகிறானே! அழுதும் அருள் பெறலாம்தான். ஆனால் அழுது அருள்பெறுவதே இறைவனை அணைவதற்குத்தானே? ஆகவே அணைந்து அருள்பெற்ற ஆண்டாள் வழியே சிறந்தது என்றுதான் தீர்ப்புக் கூறுகிறேன் நான்.

# 11

# செயற்கரிய தொண்டு புரிந்த திருத்தொண்டர்களிலே சிறந்த செயல் புரிந்தவர் யார்?

## சிறுத்தொண்டரா?
## திருநீலகண்டரா?
## கண்ணப்பரா?

சேக்கிழார் பெருமானால் பாடப்பெற்ற நாயன்மார் அறுபத்து மூவரும் செயற்கரிய செயல் புரிந்தவர்கள்தாம். இல்லையென்றால், சேக்கிழாரது பாராட்டு கிடைத் திருக்குமா? இல்லை, அறுபத்து மூன்று நாயன்மார் வரிசையிலே இடம்தான் பெற்றிருக்க முடியுமா? இன்று இந்தப் பட்டிமன்றத்தை ஏற்பாடு செய்தவர்கள் - இந்த அறுபத்து மூவரிலிருந்து, மூன்றே மூன்று பேரை மட்டும் பொறுக்கி எடுத்து, இந்த மூவரிலே சிறந்த செயல் புரிந்தவர் யார் என்று கேட்டிருக்கிறார்கள்.

இந்தப் பட்டிமன்றத்துக்குப் பொருள் தேடித் தந்த வருக்கு நாயன்மார் மூவருக்கும் சிண்டு முடிந்து விட்டு வேடிக்கை பார்ப்பதிலே ஓர் ஆசை. இப்படி ஒரு

விவாதத்தைக் கொடுத்து விட்ட காரணத்தால், அவர்களது பக்தியை எடைபோடுகிறோம், அல்லது குறைவாக மதிப்பிடுகிறோம் என்றோ - வீண் கலகத்துக்குப் பாதை வகுக்கிறோம் என்றோ நினைப்பது கூடாது. எந்தத் தொண்டரது பக்தியையும் குறைவு படுத்தும் எண்ணம் நமக்குக் கிடையாது. பக்தியிலே உயர்வு தாழ்வு கற்பிக்க வேண்டும் என்ற எண்ணமும் கிடையாது. மூவருமே அவரவர் வாழ்க்கை, சந்தர்ப்பம், சூழ்நிலை இவற்றுக் கேற்பச் செயல் புரிந்திருக்கிறார்கள். அவர்களது பக்தியின் அடிப்படையில் அவர்கள் நிகழ்த்திய செயல்களின் தாரதம்மியத்தை அளவிடுவதுதான் இந்தப் பட்டிமன்ற விவாதத்தின் நோக்கம். இதை மனதில் கொண்டோமா னால் அப்புறம் எவ்வித மனக்கசப்புக்கும் இடமேயிராது.

இந்த விவாதத்திலே கலந்து கொண்டவர்கள் அத்தனை பேருக்கும் துணையாக நின்றது பட்டினத்தார் பாடல்தான்.

வாளால் மகவரிந்தூட்ட வல்லேனல்லேன்
மாது சொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேனல்லேன்
தொண்டு செய்து
நாளாறில் கண்ணிடந் தப்ப வல்லேனல்லேன்
நான் இனிச் சென்று
ஆளாவ தெப்படியோ, திருக்காளத்தி
அப்பருக்கே!

இந்தப் பாடல்தான் இன்றைய விவாதத்துக்கே அடிப்படையாக விளங்குகிறது.

வாளால் மகவரிந்தூட்டிய சிறுத்தொண்டரது கதையும், மாது சொன்ன சூளால் இளமைத் துறவு மேற்கொண்ட திருநீலகண்டரது கதையும், நாளாறில் கண் இடந்தப்பிய

கண்ணப்பரது கதையும் நமக்குத் தெரிந்தவை தான். பக்தி மேலீட்டால் அவர்கள் நிகழ்த்திய செயல்களைப் பற்றி யெல்லாம் மூன்று கட்சிக்காரர்களும், வெகு திறமையாக வாதிட்டார்கள்.

''சிறுத்தொண்டரும் அவரது மனைவி, திருவெண் காட்டு நங்கையும் செய்த தொண்டுதான் மிகச்சிறப் பானது; சிவனடியார்களுக்கு அமுது செய்விக்காமல் தாம் அமுது செய்வதில்லை என்றே நோன்பிருந்தார்கள் அவர்கள். 'உண்டி கொடுத்தோர் - உயிர்கொடுத்தோர் என்பது ஆன்றோர் மொழி. அந்தத் திருப்பணியைச் சிறப்பாகவே செய்தார் சிறுத்தொண்டர். அவரைச் சோதிக்கவே, இறைவன் சிவனடியார் வேடம் பூண்டு வந்து, ஒரு குலத்துக்கு ஒரு மகனை, தாய் பிடிக்க, தந்தை அரிந்து கறி சமைத்துத் தரும்படி கேட்டபோது கூட சிறுத்தொண்டர் மயங்கவில்லை. யாதும் எமக்கு அரியதன்று என்றே சொல்கிறார். சிவனடியார் விரும்பிய வண்ணமே, தம் குலத்துக்கொரு மகனான சீராளனை, பச்சிளம் பாலகனை - தாய் பிடிக்க அரிந்து, கறி சமைக்கவும் செய்கிறார். அந்தச் செயலையும் - சிவனடி யார் விரும்பிய வண்ணம் மனமகிழ்வோடு செய்கிறார். இப்படி ஒரு அரிய செயலை நம் கண்டதுமில்லை - கேட்டதுமில்லை. திருநீலகண்டர் இளமை துறப்பதும், கண்ணப்பர் கண் இடந்து அப்புவதும் அவ்வளவு அரிய செயல்களல்ல. அவர்கள் இருவரது செயல்களோடு ஒப்பிடும்போது, சிறுத்தொண்டரது செயல், மிக மிக அரிய செயலாக, சிறந்த செயலாக உயர்ந்து நிற்கிறது'' - என்று அடித்துப் பேசினார்கள் சிறுத்தொண்டர் கட்சி யிலே வாதிட்டவர்கள்.

திருநீலகண்டருக்கு வக்காலத்து வாங்கியவர்கள் மட்டும் சளைத்தவர்களா? ''பிள்ளைக் கறி சமைப்பது என்பது, அதுவும் தம் ஒரே மகனைத் தம் கையாலேயே அரிவது என்பது எப்படிச் சிறந்த செயலாகும்? கொடூரத்தின் எல்லைக்கே போய் விடுகிறார் சிறுத் தொண்டர். நரசிம்மவர்மப் பல்லவருடன் சேர்ந்து வாதாபி நகரத்தையே தீக்கிரையாக்கிய பழைய பரஞ் சோதி தானே? அவரிடம் எப்படி ஈவு இரக்கத்தை எதிர் பார்க்க முடியும்? ஈவு இரக்கம் இல்லாதவன் சிறந்த செயல்புரிவது எங்ஙனம்? அப்படித்தான் கண்ணப்பரது செயலும் - முரட்டுத்தனமும் மூடத்தனமும் மிகுந்த ஒன்று. திண்ணனார் கண்ணைத் தோண்டி எடுத்து அப்பியதிலே சிறப்பு எங்கிருக்கிறது? ஆனால் திருநீல கண்டரோ, இளம் வயதிலேயே, அழகில் மகாலட்சுமி யையும் - கற்பில் அருந்ததியையும் மிஞ்சிய, இளம் மனைவி அருகிலிருக்கும்போதே துறவு நெறியைக் கடைப்பிடித்தவர். 'எம்மைத் தீண்டினால் திருநீல கண்டம்'- என்று மனைவி ஊடல் காரணமாக ஆணை யிட்டதற்குக் கட்டுப்பட்டு, அன்று முதல் பெண் ணினத்தையே மனதாலும் தீண்டாதவராக வாழ்ந்தவர். புலனடக்கம் என்பது, காட்டில் தவம் செய்யும் முனிவர் களுக்குக் கூட கிட்டுவது அரிது. ஆனால் இல்லறத்தி லேயே இருந்து, அழகும் இளமையும் நிறைந்த மனைவி துணை இருக்கும்போது, துறவு மேற்கொள்வது என்பது சாமான்ய காரியமா? இதைவிட அரிய செயல் என்ன இருக்க முடியும் - இறைவன் நாமத்தின் மீது ஆணை யிட்டாள் என்பதற்காக, இளமையையே புறக்கணித்த செயலை விடச் சிறந்த செயல் இருக்க முடியுமா?'' - என்றெல்லாம் வாதம் புரிந்தனர் - திருநீலகண்டரது கட்சியிலே பேசியவர்கள்.

கண்ணப்பர் கட்சியினர் விடுவார்களா? ''திருநீல கண்டர் செய்த காரியத்திலே சிறப்பெங்கே இருக்கிறது? பரத்தையிடம் சென்று திரும்பிய காரணத்தால் ஏற்பட்ட மனக்கசப்பில் மனைவி, 'எம்மைத் தீண்டாதீர்' என்று ஆண்டவன் பெயரால் ஆணையிட, கணவர் அதற்குக் கட்டுப்பட்டார். நல்ல சிவபக்தரானதினாலே இறைவன் பெயரால் இடப்பட்ட ஆணையை மீறத் துணியவில்லை. அவ்வளவுதான். மேலும், பக்தியில் திளைப்பவர் களுக்குப் பெண்ணாசையைத் துறப்பது ஒன்றும் பெரிய காரியமல்ல. ஆகவே வாழ்க்கையின் இன்பங்களை எல்லாம் நுகர்ந்து அனுபவித்த பின்னர், துறவு மேற் கொள்வதில் சிறப்பென்ன இருக்கிறது? சிறுத்தொண் டரது செயல் செயற்கரிய செயல்தான் - சந்தேகமில்லை. ஆனால் சிறுத்தொண்டரது 'எனக்கு யாதும் அரியதன்று' என்று பேசுகிறாரே. தாம் பெற்ற பிள்ளையை ஒரு தந்தை அரிந்து கறி சமைப்பதிலே என்ன சிறப்பு இருக்கிறது? இறைவனுக்காகவே செய்த காரியமானாலும்கூட, அரிய செயல் என்ற அளவிலேதான் கொள்ள முடியுமே தவிர சிறந்த செயல் என்று கொள்ள முடியாது. ஆனால் கண்ணப் பர் கதையே வேறு. காளத்தி வேடனான திண்ணன், காளத்தி ஈசரான குடுமித் தேவருடன் கொண்ட உற வெல்லாம் ஆறேநாள் உறவுதான். ஈசனைப்பற்றியோ - அவன் அருளைப்பற்றியோ முன்பின் அறியாதவன், கன்னி வேட்டைக்கு வந்த இடத்திலே குடுமித் தேவரைக் கண்டான். 'மோகமாய் ஓடிச் சென்றார் - தழுவினார் - மோந்து நின்றார் - கன்று அகல்புனிற்று ஆப்போல்வார் - என்றெல்லாம் பாடுகிறார் சேக்கிழார். அவன் இறை வனுக்குத் தமது வாயில் கொணர்ந்த நீரால் மஞ்சன மாட்டியதும், குஞ்சியில் சூடிய மலரால் அர்ச்சித்ததும்,

தன் பல்லால் அதுக்கி ருசி பார்த்து வெந்த இறைச்சியைப் படைத்ததும் அறியாமையால் செய்த காரியங்களே தவிர, அந்த அன்பின் ஆழத்தை யாராவது மறுக்க முடியுமா? இறைவன் கண்ணிலே உதிரம் கொட்டுகிறது என்றால் தம் கண்ணைத் தோண்டி எடுத்து அப்பிய அன்பை என்ன வென்று சொல்ல. இறைவனது மறுகண்ணில் உதிரம் கொட்டத் தொடங்கிய போதும், கொஞ்சமும் தயங்காமல் தமது இரண்டாவது கண்ணையும் தத்தம் செய்யத் துணிந்த செயலைவிட, அரியதும் சிறந்ததுமான செயல் வேறு என்ன இருக்க முடியும்? ஆகவே தானே, சிறுத்தொண்டர் பிள்ளைக் கறி சமைத்தபோதும், திருநீலகண்டர் துறவு மேற்கொண்ட போதும் வாளாவிருந்த இறைவன் ''திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவதேவர்'' என்கிறார் சேக்கிழார். ஆண்டவனே தீர்ப்பளித்து விட்ட போது... தலைவர் வேறென்ன தீர்ப்பளிக்க முடியும்'' - என்று என்மீதும் கொஞ்சம் சாடிப் பார்த்தார்கள். நானா அதற்கெல்லாம் அஞ்சுகிறவன்?

மூன்று தரப்பு வாதங்களையும் கேட்டபோது, எனக்கே கொஞ்சம் திகைப்பாகத்தான் இருந்தது. எப்படியடா, தீர்ப்புச் சொல்வது என்று. அவ்வளவு திறமையாக அவரவர் கட்சியை எடுத்துரைத்தார்கள். சிறுத்தொண்டர் கட்சியிலே பேசியவர்கள், பிள்ளைக்கறி சமைப்பதைப் போல் அரியசெயல், சிறந்த செயல் வேறு கிடையாது. அதுவும் ஒரு குலத்துக்கு ஒரு மகனை, தாய் பிடிக்கத் தந்தை அரிவது என்றால் சாமான்யமா - என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால் ஒன்றை மறந்து விட்டார்கள். அவரிடம் சிவனடியார் நரமாமிசம் கேட்கும் போதும் சரி - ஒரு குலத்துக்கொரு மகனை, தாய் பிடிக்க தந்தை அரிந்து தர வேண்டும் என்று கேட்டபோதும் சரி, எதற்கும்

தயங்காமல் 'யாதும் எமக்கு அரிதன்று' என்கிறார். அப்படி அவரே சொல்லி விடுவதால் எந்த அரிய செயலும் வலு இழந்து விடுகிறது. அத்துடன் 'யாதும் எமக்கு அரிதன்று' - என்று சொல்கிற போது அதிலே ஆணவம் தொனிக்கக் காண்கிறோம். தம்மால் எதையும் சாதிக்க முடியும் - எதுவும் அசாத்தியமல்ல என்று சொல்வது ஆணவததின் குரலாகவேபடுகிறது. மேலும், சிவனடியார் உடனிருந்து உண்ண மைந்தனை அழைக்கச் சொன்னபோது, சிறுத் தொண்டரும் 'மைந்தா வருக' என்று அழைத்துத் தான் பார்க்கிறார். சீராளன் வந்ததாகத் தெரியவில்லை. சிறுத் தொண்டருக்கே கறியாய்ச் சமைந்த மகன் வருவான் என்ற நம்பிக்கை இல்லையோ என்னவோ? - ஆனால் அவர் மனைவி

''செய்ய மணியே! சீராளா!
வாராய்! சிவனார் அடியார் யாம்
உய்யும் வகையால் உடனுண்ண
அழைக்கின்றார்''

என்று ஓலமிட சீராளன் சதங்கை குலுங்க ஓடோடி வந்து விடுகிறான். சிறுத்தொண்டரது செயலை அரிய செயலாகவே கொண்டாலும், அதில் ஓரளவு ஆணவம் கலந்து விடுவதால் சிறந்த செயலாகக் கொள்வதற் கில்லை.

திருநீலகண்டர் விவகாரமோ ரஸமானது. வாழ்க் கையை நன்றாக அனுபவித்தவர் அவர். மகாலட்சுமி போல் அழகிற் சிறந்த இளம் மனைவி துணை இருக்கும் போதே, பரத்தை வீடு தேடிச் சென்றவர். அதன் காரண மாக மனைவி ''எம்மைத் தீண்டினால், திருநீலகண்டம்'' என்று ஆணையிட்டதால் கட்டுப்பட்டவர். வாழ்க்கையின்

இன்பங்களையெல்லாம் நன்கு அனுபவித்த பிறகு துறவு மேற்கொள்வது என்பது அத்தனை சிரம சாத்தியமான காரியமாகத் தோன்றவில்லை. சிறந்த சிவபக்தரானபடியி னாலே, ஆண்டவன் பேரால் இட்ட ஆணையை மீறத் துணிவற்றிருந்தார் என்றுதான் தோன்றுகிறது. அவரது செயலை அரிய செயலென்று அவர் கட்சிக்காரர்கள் சொன்னாலும் சிறந்த செயல் என்று நான் சொல்லுதல் இயலாது.

மிஞ்சி நிற்பது காளத்தி வேடன்தான். திண்ணன் பிறவியிலேயே வேடன். வயதிலும் இளைஞன். முதன் முதலாகக் கன்னி வேட்டைக்குச் சென்ற இடத்திலே குடுமித் தேவரைக் காண்கிறான். கண்ட மாத்திரத்திலே அவன் அடைந்த நெகிழ்ச்சியையும் பரவசத்தையும் சேக்கிழார் அழகாக வர்ணிககிறார்.

மாகமார் திருக்கா
ளத்திமலை எழு
கொழுந்தாய் உள்ள

ஏக நாயகரைக்
கண்டார்! எழுந்த
உவகை அன்பின்

வேகமானது மேல்
செல்ல, மிக்கதோர்
விரைவினோடு

மோகமாய் ஓடிச்
சென்றார்; தழுவினார்!
மோந்து நின்றார்!

திண்ணனுடைய பக்திப் பரவசத்தைப் பார்க்கின்ற போது, அந்த கங்கை வேடனான குகனே நமக்கு

நினைவுக்கு வருகிறான். 'கண்ணனைக் கணணில் நோக்கிக் கனிந்தனன்- தீராக் காதலன்' - என்றெல்லாம் குகனை கம்பன் வர்ணிப்பான். அப்படி ஒரு கள்ளமில்லாத அன்பு, கரை காணாத பக்தி.

நங்குலத் தலைமை
விட்டான்; நலப்பட்டான்
தேவர்க்கு -

என்று திண்ணனுடன் வந்த வேடனான நாணன் சொல்கிறான். திண்ணன், வாயிலே மஞ்சன நீரையும், குஞ்சியிலே அர்ச்சனைக்குக் காட்டுப் பூக்களையும், பல்லால் அதுக்கிச் சுவை பார்த்துத் தேர்ந்த இறைச்சித் துண்டுகளையும் கொண்டு வருவது நமக்கும், சிவகோசரியாருக்கும் அநாசாரமாகப் படலாம். கங்கை வேடன் இராமனுக்கு தேனும் மீனும் கொணர வில்லையா? ''பரிவினில் தழீய என்னில் பவித்திரம்'' - என்று ராமன் சுற்றியிருந்த முனிவர்களுக்கு உணர்த்தவில்லையா? அப்படி அன்பு காரணமாகவும், பக்தியின் காரணமாகவும் திண்ணன் செய்யும் அந்த அநாசாரமான காரியங்கள் கூட இறைவனுக்கு உகப்பாகத் தானே இருக்கின்றன?

அதனால்தானே, இறைவன் சிவகோசரியார் கனவில் தோன்றி திண்ணனைப் பற்றிப் பேசுகின்றபோது,

அவனுடைய வடிவெல்லாம்
நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
நமக்கினிய வாம் என்றும்

அவனுடைய நிலை
இவ்வாறறி நீ!

என்று பாராட்டுகின்றார்.

திண்ணனுடைய அன்பு குறித்தோ, பக்தி குறித்தோ இறைவனுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. அந்த ஈடு இணையில்லாத அன்பை, பக்தியை சிவகோசரியாருக்கு உணர்த்த வேண்டியே தம் கண்ணில் உதிரம் பெருகச் செய்கிறார். ஆனால் சிறுத்தொண்டர் விஷயத்திலும், திருநீலகண்டர் விவகாரத்திலும் இறைவன் அவர்கள் பக்தியின் ஆழத்தையே சோதித்துப் பார்க்கிறான். திண்ணனுடைய பக்தி முடிந்த முடிவு. அதைச் சிவகோசரியாரும் உணரவேண்டும் என்பதற்காக, தானே சோதனைக்குரிய பொருளாகி விடுகிறான், இறைவன். ‘ஊனுக்கு ஊன்’ என்ற முறையிலே திண்ணன் ஒரு கண்ணை இடந்து அப்பியாகி விட்டது. மறுகண்ணிலுமல்லவா குருதியைப் பெருக விடுகிறான்; அப்போதும் திண்ணன் சற்றும் சுணங்காமல் தன் மறு கண்ணையுமல்லவா அகழ்ந்தெடுக்கத் துணிந்து விட்டான்! சிவகோசரியார் பதறினாரோ என்னமோ - நாம் பதறுகிறோம். நம்மை விட இறைவன் பதறுகிறான் - பதறியது மட்டுமா

நில்லு கண்ணப்ப!
நில்லு கண்ணப்ப - என்
அன்புடைத் தோன்றல்
நில்லு கண்ணப்ப!

என்று,

அன்னவன் தன் கை
அம்பொடும் அகப்படப்
பிடித்தே விடுகிறானே!

திண்ணனார் கண்ணில் ஊன்றத்
தரித்திலர் தேவதேவர் -

என்றல்லவா பாடுகிறார் சேக்கிழார் பெருமான். சிறுத்தொண்டர் வாளால் மகவை அரிந்தபோது பதறாத தேவதேவன், திருநீலகண்டர், மாது சொன்ன சூளால் இளமை துறந்தபோது பதறாத தேவதேவன் - திண்ணன் அம்பைக் கண்ணில் ஊன்றியதும் துடிதுடித்து விடுகிறான்! அதனால்தானே, சேக்கிழார் பெருமானும் உருகி, உருகி, நெகிழ்ந்து, நெகிழ்ந்து 186 பாடல்களைக் கண்ணப்பருக்காக வாரி வழங்கியிருக்கிறார். சிறுத்தொண்டரையும், திருநீலகண்டரையும் பக்தியினால் கனிய வைக்கிறான் இறைவன். ஆனால், கண்ணப்பர் கதையிலோ, ஆறே நாள் உறவிலே தானே கனிந்து விடுகிறானே. இன்னும் நான் தனியாக வேறு சொல்ல வேண்டுமா, செயற்கரிய தொண்டு புரிந்த மூவர் செயலிலும் சிறந்த செயல் புரிந்தவர் யார் என்று.

# 12

# பக்தி கனிவிற்குப் பாலமாய் அமைவது

## தொழுகையா? அழுகையா?

முத்திநெறி அறியாத
    மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்துப்
    பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச்
    சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு
    ஆர்பெறுவார் அச்சோவே

என்று பாடினார் மாணிக்கவாசகர். முத்தி நெறி அடைவத்கு வழி பக்தி நெறியே என்று அவர் நமக்கு அறிவிக்கிறார். அந்த பக்தி நெறியின் தன்மையை நன்றாக ஆராய்ந்து தெளிவதற்காகவே இப்பட்டிமன்றத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள் அன்பர்கள். விவாதத்திற்குக் குறித்த பொருளைப் பார்த்தவுடனேயே இது முஸ்லீம் அன்பர் ஒருவரால் குறிக்கப்பட்ட பொருளாக இருக்

குமோ என்று ஐயம் ஏற்படலாம். காரணம், தொழுகையை விடாப்பிடியாக ஒரு நாளைக்கு ஐந்து தடவையாவது செய்கிறவர்கள் ஆயிற்றே என்பதனால் இருக்கலாம். தொழுகை என்பது அப்படி முஸ்லீம் சகோதரர்கள் மட்டும் கைக்கொள்வது அன்று. எல்லோரும், அதிலும் இந்துக்கள், சைவரும் - வைணவரும் செய்கின்ற நித்ய கருமங்களில் ஒன்றுதான். அதை மாணிக்கவாசகரே சொல்கிறாரே தெள்ளத் தெளிவாக. திருப்பெருந்துறையில், அங்கு தன்னை ஆட்கொண்ட சிவபெருமானைத் துயில் எழுப்புவதற்காகத் திருப்பள்ளி எழுச்சி பாடுகிறார் மாணிக்க வாசகர். சிவபிரானது திருவோலக்கத்தைக் காண வந்து காத்துக்கிடக்கும் கூட்டத்தை வரிசைப்படுத்துகிறார். வீணையும், யாழும் ஏந்திய கையராய் பலர் இன்னிசை மிழற்றிக் கொண்டு ஒரு பக்கம் இருக்கிறார்களாம். வேதம் ஓதும் வேதியர் ஒருபுறம். இறைவனுக்கு அணிவதற்கு மலர்களைத் தொடுத்து மாலையாக்கி அம்மாலைகளை ஏந்திக் கொண்டு நிற்பார் ஒருபுறம். இன்னும் தொழுது கொண்டு நிற்பவர்களும், அழுது கொண்டு நிற்பவர்களும், துவண்டு நிற்பவர்களும் ஆகப் பலர் அங்கே இருக்கின்றனர். இவர்களை விடுத்துத் தலைமேல் கூப்பிய கையராய் வழிபாடு செய்யும் அன்பர்கள் பலருமே அங்கு இருக்கிறார்கள். ஆதலால், ‘இத்தனை பேர் இப்படி உன் சந்நிதியில் காத்துக் கிடப்பதனால் நீ விரைவில் துயில் நீங்கி எழுந்து எல்லோருக்கும் அருள் செய்வாயாக’’ என்று பாடுகிறார்.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள் கையர் ஒருபால்

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே

என்பதுதான் அவரது பாடல். இப்பாடலிலிருந்து இறைவனை, அவனது திருக்கோயில் சென்று வழிபடும் முறை எது என்று எளிதாகத் தெரிந்து கொள்கிறோம். அப்படி வழிபாடு செய்வதையே அன்று தொழுகை என்று குறித்திருக்கின்றனர். நாம் அந்தத் தொழுகையை வழி பாடு என்று வழங்கி வருகிறோம். முஸ்லீம் சகோதரர்கள் தொழுகை என்றே வழங்கி வருகிறார்கள். அவ்வளவு தான். இப்பட்டிமன்றத்தில் விவாதிப்பதற்குத் தலைப் பைத் தந்ததே மணிவாசகரது இந்தப்பாட்டுதான் என்று நான் சொன்னால், நீங்கள் மறுக்க முடியாது.

இனி பக்தி செய்வது என்றால் என்ன என்று விசாரணை பண்ணலாம். உலகமே அன்பு மயமாகத்தான் உருவாகி இருக்கிறது. ஒருவருக்கொருவர், ஒன்றுக்கொன்று கவர்ச்சி உடையதாய் இருந்து வருகிறது. இந்த அன்பையே பிரேமை என்றனர் வட மொழியாளர். ''அநிர்வசனீயம் பிரேம சொரூபம்'' என்றார் நாரத முனிவர். பிரேமை அல்லது 'அன்பு என்பது என்ன என்று சொல்லும் திறத்தது அன்று' என்பதே நாரதர் காணும் முடிவு. உண்மைதான். அன்புதான் எப்படி எப்படி எல்லாம் என்ன என்ன பெயர்களை எல்லாம் தாங்கி வருகிறது. தாய் தான் பெற்ற குழந்தையிடம் காட்டும் பாசம் அன்பு என்று பேசப்படு கிறது. இளவயதுள்ள ஆணுக்கும், பெண்ணுக்கும் ஏற்படும் கவர்ச்சியைக் காதல் என்கிறோம். வயது முதிர்ந்தவர்கள் இளையவர்களிடம் காட்டும் அன்பைப்

பரிவு என்கிறோம். இப்படி பலப்பல பெயரில் அழைக்கப்படும் அன்பை மனிதன் தன்னைப் படைத்த தலைவனை நோக்கித் திருப்பும்போது அதைப் பக்தி என்கிறோம். அந்த பக்தியைச் செலுத்துகின்ற முறையைத் தான் வழிபாடு என்று உரைக்கிறோம். பக்தி செலுத்து வதற்கு உரிய வழி, வழிபாடு என்று தெரிந்த நாம் அந்த வழிபாட்டு முறைகள் என்ன, அந்த வழிபாடுகளில் எது எளிதான முறை, எது சிறந்த முறை என்று தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?

இறைவன் கோயில் கொண்டிருக்கும் திருக்கோயி லுக்குச் செல்லுதல், அவனை வலம் வருதல், அவன் சந்நிதி முன் நின்று வணங்கல், அவன் புகழ் பாடுதல், அவன் திருவடிகளில் விழுந்து வணங்கல் - எல்லாம் தொழுகை என்று கூறப்படுகிறது.

வணங்கத் தலை வைத்து வார்கழல் வாய்
வாழ்த்த வைத்து
இணங்கத் தன் சீரடியார்
கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை
அம்பலத்தே ஆடுகின்ற
குணம் கூறப் பாடி நாம்
பூவல்லி கொய்யாமோ

என்று மாணிக்கவாசகர் பாடும்போது தலை தாழ்த்தி வணங்குவதையும் அவனது வார்கழலை வாழ்த்துவதை யும் சீரடியார் கூட்டத்தோடு நின்று தொழுவதையுமே பாராட்டி இருக்கிறார். இப்படி எல்லாம் திருக்கோயில் சென்று ''தொழுவது பக்தி செலுத்துவதற்கு எளிதான முறை'' - என்று வாதித்தனர் தொழுகைக் கட்சியார்.

''இல்லை, இந்தத் தொழுகையைப் பலர் முழு ஈடு பாட்டோடு செய்வதில்லை, நான் கும்பிடும் கும்பிடு அரைக் கும்பிடாதலால், நான் பூசை செய்தல் முறையோ?'' என்று பக்தர் பலர் அங்கலாய்த்திருக் கிறார்கள் என்று அழுகைக் கட்சியினர் வாதித்திருக்கின்ற னர். உண்மைதான். இதயத்தோடு செய்யாத எந்தப் பூசையும் பக்தி வளர்வதற்குத் துணை புரியாதுதான். ஆனால், இங்கு இந்த அரைகுறைத் தொழுகையைப் பற்றிப் பேச்சில்லை. இதயக் கனிவோடு செய்யும் தொழுகையைத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படித் தொழுவது தானே தொழுகை.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

என்றுதானே பாடினார் அப்பர். பக்தியால் மனம் உருகி ஆனந்தக்கண்ணீர் பெருக்கி எம்பெருமானது திருநாமங் களைச் சொல்லுவார்களை நல்ல முக்தி நெறியிலே செலுத்துவது, 'நமசிவாய' என்ற பஞ்சாக்கிர மந்திரமே என்றார் அவர்.

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து
உன் விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்து கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சய சய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே

என்று மாணிக்கவாசகர் பாடும்போது மயிர்க் கூச்செறிந்து, கண்களில் நீர் ததும்பி, மனங் கசிந்து துதிக்கின்ற நிலையை விளக்குகிறார். வெறும் கண்ணீர் விடுப்பதே அழுகை இல்லாமல், மனங் கசிந்து அழுவதே அழுகை என்று குறிக்கிறார். இதற்கும் மேலே ஒரு படிபோய் அவர் சொல்கிறார்.

யானே பொய் என் நெஞ்சும் பொய்
என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே

என்றே பாடுகிறார். இறைவனை அழுது அழுதுதான் அடைய வேண்டும் என்று அறுதியிட்டு விடுகிறார். உண்மைதான். மனத்திலே ஒரு கசிவு, அதன் மூலம் இறைவனிடம் செலுத்தும் பக்தியிலே ஒரு கனிவு ஏற்படுவதற்கு அழுவது தான் வழி என்று அறிகிறோம் நாம். ஆனால், இப்படி மனங் கசிந்து அழுவது எளிதான காரியம் அல்லவே என்பதுதான் தொழுகைக் கட்சியார் வாதம். பார்க்கப் போனால், அழுகையுமே ஒருவகையில் தொழுகைதானே? ஆதலால், பக்திக் கனிவிற்கு அழுகை தான் துணைபுரியும் என்று கூறுவது சிறப்பல்லவே என்கின்றனர் தொழுகைக் கட்சிக்காரர்கள். இப்படி விவாதித்து தொழுகைக் கட்சியினர் வெற்றி காண முடியாது. அழுகையும் தொழுகையைச் சேர்ந்ததுதான் என்றால், மாணிக்கவாசகர் ஏன் தொழுகையர், அழுகையர் என்று வேறு படுத்துகிறார். இன்னும் ஒரு பாட்டிலே, அழுகையையும், தொழுகையையும் பிரித்தே பாடுகிறார்.

அழுகேன் நின்பால் அன்பாய்
மனமாய் அழல் சேர்ந்த

மெழுகே அன்னார் மின்னார்
    பொன்னார் கழல் கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தா
    ரோடுந்த தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண்டு
    உன்னைப் பணிவதே

என்று பாடும் போது அழத்தான் தெரியவில்லை, தொழவாவது தெரிந்திருக்கிறேனா என்று மனங் கசிந்து முறையிடுகிறாரே. ஆதலால், அழுகையையும், தொழுகை யையும் பிரித்து வைத்துப் பார்த்தால்தான் இந்த விவாதத்திற்கு இடம் உண்டு. இல்லையேல், இந்தப் பட்டிமன்றமே ஏற்பட்டிருக்க வேண்டியதில்லை.

இதுவரை அன்பர்கள் விவாதத்திலிருந்து பக்தி வளர்வதற்கு எளிதான வழி தொழுகையே என்று தெரிந்து கொண்டிருக்கிறோம். அத்தோடு நெஞ்சத்தில் கனிவு ஏற்படுவதற்கு உதவுவது அழுகையே என்பதையுமே அறிந்து கொண்டிருக்கிறோம்.

விவாதித்தவர்கள் எல்லாம் ஒன்றை மறந்து விட்டார்கள். பக்தி வளர்வதற்கு எளிதான வழி எது என்று பட்டிமன்றப் பொருள் அமையவில்லை, விவாதத்திற்குக் குறித்த பொருள், பக்திக் கனிவிற்குப் பாலமாக அமைவது தொழுகையா அழுகையா என்பதே. ஆதலால், இன்னும் சிறிது சிந்தனையைச் செலுத்த வேண்டும்.

பக்தி என்ற ஒரு பெரிய ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் இக்கரையில் நிற்கிறோம் நாமெல்லாம். பக்திக் கனிவு அக்கரையில் இருக்கிறது. அக்கனிவைப் பெற ஒரு பாலம் அமைத்தாக வேண்டும். அந்தப்பாலம் தொழுகை யாக இருக்கலாமா இல்லை, அழுகையாக இருக்கலாமா என்பதே கேள்வி. கனிவு ஏற்படுவதற்கு மிகவும் துணை

புரிவது அழுகைதான் என்பதால், அதுவே பாலமாக அமையலாமே என்று எளிதில் முடிவு கட்டலாமோ என்று எண்ணுவோம். அழுகை நெஞ்சுக்கனிவைத் தருமே தவிர, பக்தி இருக்கும் இடத்திற்கு இட்டுச் செல்லக் கூடியதா என்ன? அந்தப் பக்தியையும் கனிவையும் ஏற்படுத்து வதற்கு மனிதனுக்கு உதவுவது பாடல்கள்தான்.

சூடுவேன் பூங்கொன்றை
சூடிச் சிவன் திறள்தோள்
கூடுவேன், கூடி
முயங்கி, மயங்கி நின்று
ஊடுவேன், செவ்வாய்க்கு
உருகுவேன், உள்உருகித்
தேடுவேன், தேடிச்
சிவன் கழலே சிந்திப்பேன்
வாடுவேன், பேர்த்தும்
மலர்வேன், அனல் ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்

என்று இறைவன் புகழைப் பாடிப்பாடி தொழுகின்ற முறையைப் பன்னிப் பன்னிக் கூறுகின்றாரே மணி வாசகர், இப்பாட்டில் அழுகைக்கே இடம் வைக்க வில்லையே? இன்னும் அகங்குழைவது, அன்புருகுவதை யெல்லாம் நினைத்துப் பாடிய மணிவாசகரும், பூமாலை புனைவதையும், புகழ்ந்து பாடுவதையும், திருக்கோயில் மெழுகுவதையும் கூத்தாடுவதையுமே செய்யாதவனாக வாழ்ந்து கெட்டு விட்டேனே என்றே கனிந்து கனிந்து பாடுகிறார்.

ஆமாறு உன் திருவடிக்கே
அகம் குழையேன், அன்புருகேன்
பூமாலை புனைந்து ஏத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்

கோமானின் திருக்கோயில்
தூகேன், மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வேனே

என்று தானே பாடுகிறார். இன்னும் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி, விவாதத்திற்குத் தீர்ப்பு கூறுகிறேன்.

"நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழும்
கண்ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந்து"

என்று இராமலிங்க அடிகள் பாடவில்லையா என்று கேட்கிறார், விவாதத்தில் கலந்து கொண்ட அம்மையார் ஒருவர். அப்படிக் கண்ணீரால் நனைந்து பாடியவரும் கூட, அதே பாட்டிலேயே,

"அருள் அமுதே, நன்னிதியே
ஞான நடத்தரசே என்னுரிமை நாயகனே
என்று வனைந்து வனைந்து ஏத்துதும் நாம்?"

என்று தானே முடிக்கிறார். இன்னும் இறைவழி பாட்டை முறைப்படுத்தியவர்கள், சிரவணம், கீர்த்தனம், அர்ச்சனம், பாத சேவனம், ஆத்ம நிவேதனம் என்றே கூறியிருக்கிறார்கள். இவற்றில் ஆத்ம நிவேதனமே அழுகையால் பெறப்படுவது. மற்ற சிரவணம், கீர்த்தனம், அர்ச்சனம், பாத சேவனம் எல்லாம் தொழுகையின் பால் படும். பாடுவது எல்லாம் தொழுகையைச் சேர்ந்ததுதான் என்பதை, "சூடுவேன் பூங்கொன்றை" என்ற பாட்டிலேயே பார்த்தோமே. ஆதலால், பக்திக் கனிவிற்குப் பாலமாக அமைவது தொழுகையே என்று முடிவு கூறி அமைதி பெறுகிறேன்.

# 13

# இறைவன் திருவடி அடைய எளிய நெறி

## பக்தியா?
## ஞானமா?
## கர்மமா?

இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட விஷயம் இறைவன் திருவடி அடைய எளிய நெறி பக்தியா? ஞானமா? கர்மமா? என்பது. இந்த விவாதத்தில் தீர்ப்புக் கூறுமுன் சில அடிப்படையான சித்தாந்தங்களை ஒப்புக் கொண்டாக வேண்டும். இறைவன் என்று ஒருவன் கிடையாது என்று நாத்திகம் பேசுபவர்கள் இப்பட்டி மன்றத்தில் கலந்து கொள்ளுதல் இயலாது. அதைப் போலவே இறைவன் என்று ஒருவன் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அதைப் பற்றி நமக்கு அக்கறை யில்லை - என்று ''அக்னாஸ்டிசிசம்'' பேசும் அன்பர் களுக்கும் இப்பட்டிமண்டபத்தில் இடம் கிடையாது. இறைவன் என்ற ஒருவனோ, அல்லது இறை என்ற ஒன்றோ இருக்கிறது. அதற்குத் திருவடியும் இருக்கிறது. மக்களாய்ப் பிறந்தவர்கள் அத்திருவடி சென்று சேர்தலே முக்தி பெறும் வழி என்று நம்புகின்றவர்கள் மட்டுமே

இப்பட்டி மன்றத்தில் பங்கு கொள்ளுதல் கூடும். இன்று இப்பட்டி மன்றத்தில் விவாதிக்க வந்திருக்கும் அன்பர் களும், இப் பட்டிமன்றத்தில் நடக்கும் பேச்சை எல்லாம் கேட்க வந்து குழுமி இருக்கும் அன்பர்களும் இறைவன் ஒருவன் இருக்கிறான் என்று திடமாக நம்புகின்றவர்கள். இந்த அடிப்படைச் சித்தாந்தத்தை ஒப்புக் கொண்ட பின்னரே விவாதம் நடந்திருக்கிறது.

இந்த இறைவன் தான் நம்மையெல்லாம் படைக் கிறான், காக்கிறான், அழிக்கிறான். அத்தனையையும் எல்லையில்லாத ஒரு விளையாட்டாக அநாதி கால மாகவே அவன் செய்து வருகிறான் என்று நாமெல் லோரும் நம்புகிறோம். அத்தகைய பரம்பொருளுக்கே கவிச்சக்கரவர்த்தி கம்பனும் தனது அமர காவியமாகிய இராமாவதாரத்தில் முதற்கண் வணக்கம் செலுத்துகிறான். பாட்டுத்தான் தெரியுமே:

உலகம் யாவையும்
    தாமுள ஆக்கலும்
நிலை பெறுத்தலும்
    நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு
    உடையார், அவர்
தலைவர், அன்னவர்க்கே
    சரண் நாங்களே.

என்ற காப்புச் செய்யுள்தான் தமிழ்மக்கள் நாவில் பல காலும் நின்று பயிலப்பட்ட ஒன்றாயிற்றே! இப்படிப் பட்ட இறைவனிடம் நன்றியோடு அன்பு செலுத்துதல், வணங்குதல், அவனை வழிபடல், பாடல்கள் மூலமும்; ஆடல்கள் மூலமும் அவன் புகழைப்பாடிப் பரவுதல்

எல்லாம் நாம் செய்ய வேண்டிய முக்கியமான கடமை என்பதையும் உணர்ந்திருக்கிறோம். இப்படியெல்லாம் வழிபாடு செய்தலையே பக்தி செலுத்துதல் என்றும் நம்பி வந்திருக்கிறோம். இப்படி பக்தி செலுத்துவதன் மூலம் இறைவன் திருவடி அடையலாம் என்பதையும் நமது முன்னோர்கள் உணர்ந்திருக்கிறார்கள். தலையே நீ வணங்காய், வாயே வாழ்த்து கண்டாய், நெஞ்சே நீ நினையாய்'' என்றெல்லாம் நாவுக்கரசர் பாடி, பக்தி செய்வதற்கும், வழிவகுத்துக் கொடுத்திருக்கிறார்.

இனி ஞானம் என்றால் என்ன என்று பார்க்கலாம். இறைவன் என்று ஒருவன் இருக்கிறான் என்று நம்பு கிறோம். அந்த இறைவனின் தன்மை என்ன என்று தெரிய வேண்டாமா? உண்மையில் காணாத ஒன்றை நம்ப மறுக்கின்ற நாத்திகர்களை விட, நம்புகின்ற ஒன்றைக் காண மறுக்கும் ஆஸ்திகர்களே இறைஞானத்தில் ஈடுபாடு இல்லாதவர்கள். இறைத் தன்மையை அவனா, அவளா, அதுவா என்று ஆராயலாம். இறைவனுக்கு உருவம் உண்டா, இல்லையா என்று சிந்திக்கலாம். அவன் உருவம் உடையவனா? அருவமாக நிற்பவனா? இல்லை, அருவுரு வமானவனா? என்றெல்லாம் ஆராய்ந்து தெளியலாம். ஆனால், இப்படியன், இந்நிறத்தான், இவ்வண்ணத்தான் இவன் இறைவன் என்று எழுதிக் காட்ட ஒ்ணாதென அப்பரே கையை விரிக்கிறாரே! என்ன செய்வது?

அன்றும் திருவுருவம்
    காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம்
    காண்கிலேன் - என்றுமே
எவ்வுருவோன் நும்பிரான்
    என்பார்கட்கு என்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் எது?

என்று காரக்கால் அம்மையாருடன் சேர்ந்து இறைவனிடமே அவன் வடிவத்தைக் காட்டச் சொல்லிக் கேட்கலாம். இன்னும் ஆதியும், அந்தமும் இல்லாத அருட்பெரும் ஜோதியை, பொங்கழல் உருவனாகக் காணலாமோ என்று ஐயுறலாம். அவனன்றி ஓரணுவும் அசையாது என்று நம்புகின்ற நாம், அந்த அணுவினுள் ஊனாக, உயிராக, உணர்வாக இருந்து ஆட்டுபவற்றை ஆடும் பெருமானாகவே வழிபட முடியுமா என்று எண்ணலாம். இன்னும் சந்திரசேகரன், திரிபுராந்தகன், மாதிருக்கும் பாதியன், பிக்ஷாடனன் என்றெல்லாம் பலவித வடிவங்களில் அழைத்துத் தொழுகிறோமே, அவைகள் எல்லாம் சரிதானா என்ற கேள்வியையே எழுப்பலாம். நானாவித உருவாய் நடனம் ஆடினும், இறைவனை கலை மூலம், கலை வளர்க்கும் கற்பனை மூலம் காணும் அறிவு பெறலாம். இப்படியெல்லாம் இறைத்தன்மையை ஆராய்ந்து அறிந்து, இறை ஞானம் பெறுவதன் மூலம் இறைவன் திருவடி சென்று சேர்தல் கூடும்.

இனி, கர்மம் என்றால் என்ன என்றும் பார்க்கலாம். மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலும், ஆம், உண்பதும், உறங்குவதும் எல்லாம் கர்மமே என்றனர். கர்மம் தவிர்க்க முடியாதது. செய்யும் தொழில் எல்லாம் கர்மமே என்றும் கூறினர். ஆனால், இன்றைய விவாதத்திற்கு இக்கருமங் களைப் பற்றிப் பேச்சில்லை. செய்யும் கருமவினை எல்லாம் இறைவனே செய்கிறான் என்று, செய்யும் செயலை எல்லாம் இறைவனுக்கே அர்ப்பணம் செய்யும் கர்மத்தையே எடுத்துக் கொள்வோம். எல்லாம் கிருஷ் ணார்ப்பணம் என்றுதானே, பெரியோர்கள் கருமங்களைச் செய்யும்போது எண்ணுகின்றனர். 'பயன் கருதாத

கர்மத்தைச் செய்' என்று தானே கீதாச்சாரத்தில் கண்ணன் அருளியிருக்கிறான்.

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னையென் பிழையைப் பொறுப்பானை
பிழையெல்லாம் தவிரப் பணிப்பானை

என்றுதானே சுந்தரரும் பாடுகிறார்? இப்படி கருமம் செய்வதன் மூலம் நான் என்னும் அகந்தை அகல்கிறது, அது காரணமாக இறைவன் திருவடி சென்று சேர முடி கிறது - என்பது கர்மத்தின் கட்சியில் நின்று விவாதிப்ப வர்களது வாதம்.

இவ்வளவு நேரம் பட்டி மன்றத்தில் விவாதித்தவர் களது வாதத்தில் இருந்து பக்தி, ஞானம், கர்மம் எல்லாமே இறைவன் திருவடியில் நம்மைச் சேர்க்கும் சக்தி வாய்ந்தவை என்பதை அறிகிறோம். ஆனால், இதையே முடிவாகக் கொள்ளுதல் இயலாதுதான். இந்த விவாதத் தில் தீர்ப்புக் கூற, நாம் அந்தக் கண்ணன் அருளிய பகவத் கீதையினையே நாட வேண்டும். கீதையில் மூன்றாவது அத்தியாயத்தில் கிருஷ்ண பகவான் அர்ச்சுனனிடம், ''பற்றில்லாமல் தொழில் செய்து கொண்டிருக்கும் மனிதன் பரம்பொருளை எய்துகிறான் என்று கூறுகிறார். ஆதலால் கீதை கர்மத்தை வலியுறுத்துகிறது, என்று எண்ணுவோம் The Gita therefore a mandate for action என்றே முடிவும் செய்வோம்.

இனி, ஞானமும், பக்தியும் நம்மை இறைவனின் திருவடி கொண்டு சேர்க்குமா, அதில் எளிதான செயல் எது என்று பார்க்கலாம். ஞானத்தின் மூலம் இறைவனை அடைதல் கூடும். அவனை நெருங்குதலும் கூடும். ஞானம்

இறைவன் தன்மைகளை நன்றாக விவரிக்க உதவும். அப்படி விவரிப்பதன் பலன் என்ன என்றுதான் கவிச் சக்கரவர்த்தி கம்பரே சொல்கிறாரே,

ஒன்றே என்னின் ஒன்றே ஆம்
    பல என்று உரைக்கின் பலவே ஆம்
அன்றே என்னின் அன்றே ஆம்
    ஆம் என்று உரைக்கின் ஆமே ஆம்
இன்றே என்னின் இன்றே ஆம்
    உளதென்றுரைக்கின் உளதே ஆம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
    நமக்கு இங்கு ஏனோ பிழைப்பு அம்மா!

ஆம். எப்படிக் கருதினாலும், அப்படியெல்லாம் கருத இடங்கொடுப்பவனாக அல்லவா இறைவன் இலங்கு கின்றான். இப்படித்தான், விவரிக்க விவரிக்க நம் கைக்குள் அடங்காத கள்ளனாக அவன் நம்மிடமிருந்து நழுவி விடுகிறான். இன்னும், பக்திக்கு, ஞானம் சாதனம் என்பர். ஆனால், பக்திக்கு இடையூறே ஞான முயற்சி என்பதும் நாம் அறிந்ததே. இப்படியெல்லாம் ஞானம் விவரிக்க உதவுகிறதே தவிர, அவன் திருவடியில் கொண்டு சேர்க்க உதவுவதாக இல்லை. அப்படியிருக்க, அதை எளிய நெறி என்று எப்படிக்கூற இயலும்? ஆகவே, ஞானமும் இறைவன் திருவடி அடைய எளிய நெறியாக அமையாது என்று கூறிவிடலாம்.

எஞ்சியிருப்பது பக்திதானே? பக்தியைப் பற்றிப் பேசும் மணிவாசகர், முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வோர்க்குப் பக்தி நெறி அறிவித்து, பழவினைகளை ஓட்டி, சித்தமலம் அறிவித்து சிவமாக்கி ஆட்கொண்டான் திருப்பெருந்துறை உறை இறைவன் என்றே சொல்கிறார்.

ஆதியும், அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி என்று பாட ஆரம்பித்து பத்தொன்பது பாட்டுக்கள் பாடிய பின் தானே, திருவெம்பாவை இருபதாவது பாட்டில் 'ஆதியாம் பாதமலர், அந்தமாம் செந்தளிர்கள்' என்று பாடத் தெரிந்திருக்கிறது. அப்போதுதானே ஆதியாயும் அந்தமாயும் இருப்பவை அவன் திருவடிகளே என்ற உணர்வும் பிறந்திருக்கிறது. அப்பரைப் பற்றியோ கேட்கவே வேண்டாம்.

பெருகலாம் தவம் பேதமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாய தோர் ஆனந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே

என்றல்லவா பாடுகிறார். புறமதமாம் சமண மதத்தில் அமர்ந்திருந்த அவர் பக்தி பணணி, பக்தி பண்ணி இறைவன் திருவடி நிழலை அடைந்து, அதில் அவர் பெற்ற இன்பத்தையும்,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே

என்று மிகவும் எளிதாகக் கூறிவிடுகிறாரே. இப்படி பக்திப் பனுவல்களைப் பாடிப் பாடிப் பரவசமாகி பக்தி செய்வதே இறைவன் திருவடி கொண்டு சேர்க்கும், மிகவும் எளிதான வழி என்று தெரிந்து கொள்கிறோம். இந்த விவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க கண்ணனது கீதை உதவாதோ என்று நீங்கள் கேட்பீர்கள். கீதையின் மூன்றாவது அத்தியாயத்தில் கர்மத்தையும், ஒன்பதாவது அத்தியாயத்தில் ஞானத்தையும் பற்றிப் பேசிய கண்ணன்

மேலும் மேலும் உபதேசித்து பன்னிரெண்டாவது அத்தியாயத்தில் பக்தியைப் பற்றியும் கூறுகின்றான்.

வேதங்களாலும், தவத்தாலும்
தானத்தாலும், வேள்வியாலும்
என்னைக் காணுதல் இயலாது
பிறரிடம் செல்லாத பக்தியால்
மாத்திரமே என்னை இவ்விதமாக
அறிதலும், உள்ளபடி காணுதலும்
என்னுட் புகுதலும் இயலும்-

என்றே கூறி முத்தாய்ப்பு வைக்கிறான்.

பக்தி நெறி இறைவன் திருவடியில் நம்மைக் கொண்டு சேர்ப்பதற்கு மட்டுமல்லாமல், அவனோடு இரண்டறக் கலப்பதற்குமே துணைபுரியும் சாதனமாக அமைந்து விடுகிறது. ஆகவே, எளிதான நெறியாகவும், விளங்குகிறது. Bakthi leads to grace and wisdom என்றுதானே அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை நன்கு புரிந்து கொண்டு விட்டால் நாமும் அப்பருடன் சேர்ந்து

நாமார்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாம் ஆர்க்கும் குடி அல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாம் என்றும் ஆளாய்க்
கொய்மலர் சேவடியிணையே குறுகினோமே.

என்று ஆடலாம், பாடலாம், ஆடிப்பாடி பக்தியும் பண்ணலாம். முடிவில் ஆண்டவன் திருவடியை அடைந்து அமைதியும் பெற்று மகிழலாம்.



அமரர். கலைமணி. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் தமிழ் கூறும் நல்லுலகுக்கு நன்கு அறிமுகமானவர். அவரது தமிழ்ப்பணியும் கலைப்பணியும் தமிழக வரலாற்றில் புதிய அத்தியாயங்கள் என்று ஓர் அன்பர் சொன்னது முற்றிலும் உண்மை.

தஞ்சாவூரில் அவர் உருவாக்கிய கலைக்கூடமும், தமிழ் மக்களுக்கு அவர் விட்டுச் சென்றிருக்கும் நூல்களுமே அதற்குச் சான்றுகளாகும்.

குற்றாலமுனிவர்.ரசிகமணி டி.கே.சி.யின் பிரதம சீடரான அவர் ஆக்கித் தந்துள்ள இலக்கியப்படைப்புகளும் கலைப்படைப்புகளும் தமிழுக்கும் கலையுலகுக்கும் கிடைத்த அரிய பொக்கிஷங்கள்.

## ஆசிரியரது பிற நூல்கள்

1. வேங்கடம் முதல் குமரி வரை (ஐந்து பாகங்கள்)
2. வேங்கடத்துக்கு அப்பால்
3. இந்தியக் கலைச் செல்வம் (வானொலிக் கட்டுரைகள்)
4. கலைஞன் கண்ட கடவுள்
5. கல்லும் சொல்லாதோ கவி
6. அமர காதலர்
7. தென்றல் தந்த கவிதை
8. தென்னாட்டுக் கோயில்களும், தமிழர் பண்பாடும்
9. பிள்ளையார்பட்டிப் பிள்ளையார்
10. தமிழறிஞர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார்
11. ரசிகமணி டி.கே.சி.
12. மதுரை மீனாட்சி
13. இந்திய கலைச் செல்வம்